கல்கி

KALKI 2.10.83 ரு- 1-20





அடுக்குமாடிக் கட்டிடமா அட்டைப் பெட்டியா?

அண்மையில் பெங்களூரில் ஒன்பது மாடிக் கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்து, நாற்பது பேருக்கும் மேல் இறந்து போய் விட்டார்கள். இந்தக் குறிப்பிட்ட கட்டிடம் விழுந்த காரணம் புலன்விசாரணையில் இருப்பதால் அதைப் பற்றி நாம் ஏதும் கூற விரும்பவில்லை. ஆனால் இது போல் ஓரளவு புதிய கட்டிடங்கள் இடிந்து விழுவது இது முதல் தடவை அல்ல என்பதால் இதற்கான காரணங்கள் என்ன என்று பொறி இயல் வல்லுநர் வி. எச். கோபிநாத ராவ் அவர்களைக் கேட்டோம். அவர் விளக்கினார்:

''அஸ்திவாரம் பலமில்லாததாக இருக்கக் கூடும். பொதுவாகக் கட்டிடங்களுக்கு இரண்டு வகையான பாரங்கள் உண்டு. ஒன்று நிரந்தரமானது; மற்றொன்று நிரந்தரமில்லாதது. முன்னது ஸ்லாப்பின் எடையைப் பொறுத்திருக்கிறது. இரண்டாவதைப் பற்றி ஒரு விஷயம் குறிப்பிட வேண்டும். வீடாக இருந்தால் ஒரு சதுர அடிக்கு 40 பவுண்ட் தாங்குகிற மாதிரி இருக்க வேண்டும். அலுவலகமாக இருந்தால் ஒரு சதுர அடிக்கு 60 பவுண்ட்.

தற்போது வீடுகளில் முதல் மாடி கட்டி 'பாங்க்' கிளைகளாக உபயோகிக்கிறார்கள். அவ்விதம் மாற்றும்போது கீழ்த்தளத்திலே கூரை, முதல் தளத்தின் தரை இவைகளுக்குப் பாதுகாப்புப் பெட்டகம், பணம் வைக்கும் அறை ஆகியவைகளைத் தாங்கும் திறன் இருக்கிறதா என்று கணக்கிட வேண்டும்



கூரைக்குக் 'காங்க்ரீட்' போடுவதற்குமுன் இரும்பு ஷீட்டுகள், அல்லது பலகைகளை வைத்து, அதற்குமேல் கம்பிகளைக் கட்டி, காங்க்ரீட்போடுகிறார்கள். இவைகளை தாங்குவதற்கு உருக்குக் குழாய்கள், அல்லது சவுக்குக் கொம்புகள் நிறுத்துவார்கள். கொம்புகளை உபயோகிக்கும்போது, இடைவெளி சாதாரணமாக இரண்டரை அடிக்கு மேல் இருக்கக் கூடாது. மேலும் ஒரே கொம்பாக இருக்க வேண்டுமே தவிர, இணைந்தாற்போல்(Joints) இருக்கக் கூடாது. இவ்விதி முறைகளில் சில சமயம் தவறு ஏற்பட வாய்ப்பு இருந்தால், அதனாலும் விபத்து நேரலாம்.

தளத்தில் காங்க்ரீட் போட்டபின் மரப் பலகைகளை அகற்றும்போது, 'காங்கிரீட்' சரியாகச் சேர்ந்திருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். பஸ்ஸலானா சிமெண்ட் என்று ஒரு வகை உள்ளது; இது சேர்வதற்கு 'போர்ட்லண்ட் சிமெண்டை' விட அதிக நாள் ஆகும்.

Cεnt:lεver என்பது ஒரு பக்கம் ஆதாரம் கொண்டும், மற்றொரு பக்கம் ஆதாரம் இல்லாமலும் இருக்கும் பகுதியாகும். ஸன்ஷேட், போர்ட்டிகோ இவ்வகையைச் சார்ந்தவை. இவைகளில் கம்பிகள் மேல் மட்டத்தில் இருக்கும். காங்க்ரீட் போடும்போது கம்பிகள் மேல் நிற்கக் கூடாது. இதற்கான வழிமுறைகளைப் பின்பற்றினால் கம்பிகளும் இறங்காது; துன்பமும் நேராது.''

எல்லாம் சரிதான்; ஆனால் மேலே கட்டிக் கொள்ள கார்ப்பரேஷன் எப்படி அனுமதி வழங்குகிறார்கள்?

''இதற்கென்றே லைசென்ஸ்ட் சர்வேயர்கள் இருக்கிறார்கள். பிறர் போட்டுத் தரும் பிளானில் கையெழுத்துப் போட்டுத் தருபவரே அதிகம். வீடு கட்டுவதைக் கண்காணிப்பவர் மிகச் சிலரே. சென்னையில் 350 சர்வேயர்கள் இருக்கிறார்கள். சென்னையில் கிட்டத்தட்ட 10,000 கட்டடங்கள் எழும்புகின்றன; எப்படி எல்லாவற்றையும் கண்காணிப்பது சாத்தியம்?

ஒரு தளம் அல்லது கீழ்த்தளம் மட்டும் உள்ள வீட்டை மேலே விரிவுபடுத்தும்போது, கடைக்காலின் திறனையும் வளர்ச்சியைத் தாங்கும் சக்தி கட்டிடத்துக்கு இருக்கிறதா என்பதையும் தகுதியும் அனுபவமும் வாய்ந்த பொறி இயல் நிபுணரிடம் கலந்து ஆலோசிப்பது அவசியம்.

பேட்டி: தமயந்தி

நன்றி: இந்தியன் எக்ஸ்பிரஸ் புகைப்படக்காரர் திரு. சாரங்கபாணி



முடித்துவிட்டு என்னிடம் வந்தார். பேச வாயெடுத்தார்.

அதற்குள் சில ரசிகர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர். ரசிகர்களைப் புறக்கணிக்காமல் அவர்களிடம் பேசி முடித்து விட்டு என்னிடம் பேச ஆரம்பித்தார்.

அதற்குள் 'ஷாட் ரெடி' என்றார் உதவி டைரக்டர்.

'எக்ஸ்க்யூஸ் மி' என்றவாறே எழுந்து போனார். அன்று முழுவதும் 'எக்ஸ்க்யூஸ் மி' தொடர்ந்தது! பிரபு ரொம்ப பிஸி.

மறுநாள்...

முதல் நாளை விட செட்டில் பிஸியாகக் காணப்பட்டார். காரணம்: அன்று இவரது அப்பா சிவாஜி கணேசனுடன் இணைந்து நடித்துக் கொண்டிருந்தார்.

அப்பாவும் பிள்ளையும் சேர்ந்து நடிப்பதை எட்ட நின்று ரசித்துக் கொண்டிருந்தேன். அப்பா முன்பு உட்காராமல் மரியாதையாகவும், பவ்யமாகவும் பேச வேண்டியதைப் பேசிக் காட்சிகளை ஓகே செய்து கொண்டிருந்தார்.

பிள்ளையைப் பற்றி அப்பாவிடம் கேட்டேன்.

பிரபுவாகவே புகழ் பெற்றவர்!

சினிமா உலகத்திலே இன்றைய ஹாட் கேக் பிரபுதான்.

அப்பா நடிக்கும் படங்களில்தான் நடிப்பேன் என்று அடம் பிடிப்பதில்லை. கதையைச் சொன்னால்தான் ஒப்புக்கொள்வேன் எனப் பிடிவாதம் செய்வதில்லை. நேரத்தோடு படப்பிடிப்புக்கு வந்து விடுகிறார். டைரக்டர் புதியவரோ, அனுபவசாலியோ சொன்னதைச் செய்கிறார். செட்டை விட்டு வெளியே போவதானால்கூட டைரக்டரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு போகிறார்.

அவர் உட்காரும் நாற்காலியில் 'பிரபு' என்ற முத்திரை இல்லை. செட்டுக்குள் யாராவது பெரியவர்கள் வந்தால் எழுந்து நிற்கிறார். புகை பிடிக்கும்போது மறைவாக ஒதுங்கிக் கொள்கிறார்.

முதன் முறையாக யாரையாவது சந்தித்தால்கூட நீண்ட நாள் பழகியவர் போல் தோள் மீது கை போட்டுக் கொண்டு பேசுகிறார்.

தாம் ஒரு பிரபல நடிகரின் மகன் என்ற எண்ணத்தை அறவே அகற்றிவிட்டு அனைவரிடமும் நண்பனைப் போல் பழகுகிறார்.

இதெல்லாம் அவருடைய பிளஸ் பாயிண்ட்ஸ்.

கே.ஆர்.ஜி.யின் 'திருப்பம்' படப்பிடிப்பு. போலீஸ்அதிகாரி உடையில் கான்ஸ்டேபிள் உடையில் இருந்த ஒய். ஜி. மகேந்திரனிடம் உரையாடிக் கொண்டிருந்தார்.

கொலை வழக்கு ஒன்றில் தீவிரமாகத் துப்பு துலக்கிக் கொண்டிருந்தது புரிந்தது. நடித்து

''நடிப்பில் அவனுக்கு என்னைவிட நிறைய ஆர்வம் இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக நடிப்பில் முன்னேறி வருகிறான். எனக்கு அவன் மகனாக இருந்தாலும் தொழில் ரீதியில் நான் வேறு அவன் வேறு. வீட்டில்தான் எங்கள் உறவு முறை யெல்லாம்'' என்றார்!

''நீங்கள் நடித்த மாதிரி குணச்சித்திரமான வேடங்களில் இதுவரை பிரபு நடிக்கவில்லை. சண்டைப் படங்களில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறார்.... அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' — கேட்டேன்.

''இப்பொழுதுதானே நடிக்க வந்திருக்கிறான். போகப் போக அப்படிப்பட்ட வேடங்களிலும் நடிப்பான். 'மிருதங்கச் சக்கரவர்த்தி'பாருங்கள். அதில் நல்லதொரு காரெக்டர் ரோலில் நடித்திருக்கிறான். 'ராகங்கள் மாறுவதில்லை' படத்திலும் அப்படிப்பட்ட ரோல் செய்திருக்கிறான். பாருங்கள்'' என்றார்.

அடுத்த நாள் பிரபுவை ஏ.வி.எம். ஸ்டூடியோவிலே அணுகினேன். பூர்விகமான சில விஷயங்களைப் பேச முடிந்தது.

''கல்யாணி ஆஸ்பத்திரியில்தான் நான் பிறந்தேன். 1956ம் வருடம் டிசம்பர் மாதம் 31ம் தேதி. பிறந்ததில் இருந்தே என் பெயர் பிரபுதான். சாந்தி, ராம்குமார் இருவருக்கும் இளையவன் நான். சின்ன வயசிலே எனக்கு சினிமாவில் ஈடுபாடு எல்லாம் கிடையாது. அப்படி ஈடுபாடு வந்துவிடக் கூடாது என்பதற்காகவே என்னையும் அண்ணா ராம்

குமாரையும் என் பெரியப்பா பையன் மனோகரையும் பெங்களூரிலே உள்ள பிஷப் காட்டன் கான்வென்டிலே சேர்த்தார்கள்.

படிப்பிலே கவனம் செலுத்தி நல்ல மார்க் வாங்குவேன். என்றாலும் படிப்பை விட விளையாட்டிலேதான் ஈடுபாடு அதிகம். 'புட் பால், பாஸ்கெட் பால், ஹாக்கி, கிரிக்கெட் எல்லாத்திலேயும் நான் கெட்டிக்காரன். துப்பாக்கி சுடும் போட்டியிலே கலந்துகொண்டு ஜெயிச்சிருக்கேன்.

அப்போதெல்லாம் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்தனையே இல்லை எனக்கு. டாக்டருக்குப் படிக்கலாம், வக்கீலுக்குப் படிக்கலாம் என்கிற ஆசை யெல்லாம் கிடையாது. நடிக்கணும்னு நினைச்சுக்கூடப் பார்த்ததில்லை.

ஆனால் ஸ்கூல் நாடகத்திலே நடிச்சிருக்கேன். முதலில் சின்னச் சின்ன வேடங்களில் ஓரமாக வந்து நின்று கத்திவிட்டுப் போய் விடுவேன். ஹாம்லெட் நாடகத்தில் அவருடைய ஸ்டெப் ஃபாதராக நடிச்சிருக்கேன். நான் சினிமாவிலே நடிச்சது திடீர் என்று வந்த அழைப்புதான்'' என்றார்.

''நீங்கள் நடிக்க வேண்டும் என்கிற உணர்வை முதன் முதலாகத் தூண்டியது யார்:''

''டைரக்டர் சி. வி. ராஜேந்திரன் தான். அவருக்கு எப்போதும் இளைஞர்களிடம் ஈடுபாடு அதிகம். எங்கள் குடும்பத்தில் ஒருவர் மாதிரி அவர். 'சங்கிலி' படத்தை அவர் டைரக்ட் செய்து கொண்டிருக்கும்போது என்னிடம் வந்து இந்தப் படத்தில் டேனி நடித்த ரோலில் உன்னை நடிக்க வைக்கலாம் என்று பார்க்கிறேன். நடிக்கிறாயா?'' என்று கேட்டார்.

''எனக்குத் தெரியாது. அப்பாவைக்-கேளுங்கள்'' என்று நான் சொல்லிவிட சி.வி. ஆர். என் அப்பாவிடம் கேட்டிருக்கிறார்.

அவர் ''அவனுக்குச் சித்தப்பாதான் எல்லாம். அவர் சம்மதம் என்றால் எனக்கும் சம்மதம்'' என்று சொல்லி விட்டார். சித்தப்பா 'யெஸ்' என்று சொல்லி விட்டார். எதிலும் நான் என் அப்பா, சித்தப்பா வார்த்தைகளை மீறுவதில்லை. இந்த விஷயத்திலும் அப்படித்தான். அவர் சொன்னவுடனேயே சங்கிலியில் நடித்தேன். அது எனது முதல் படம்.

''இந்தப் படம் வெளிவந்த பிறகு பல தயாரிப்பாளர்கள் என்னைத் தங்கள் படங்களில் நடிக்க வைக்க அணுகினார்கள். என்னைத் தேடி வந்தவர்களை முகத்தில் அடித்த மாதிரி திருப்பி அனுப்ப நான் விரும்பவில்லை. அப்பாவின் அந்தஸ்து, என்னுடைய வாழ்க்கை வசதி இவைகளை மனத்தில் கொள்ளாமல் எல்லா வகையான படங்களிலும் நடிக்க ஒப்புக் கொண்டேன்.

''பத்திரிகைகள் என் நடிப்பைப் பாராட்டின. தயாரிப்பாளர்கள் ஊக்கப்படுத்தினார்கள். ரசிகர்களின் உள்ளங்களில் சிவாஜியின் மகனாக நிற்காமல் பிரபுவாகவே நின்றேன். இவைதான் என் நிலையை உயர்த்தின.''

பிரபு இடையில் எழுந்து சென்று காட்சியை முடித்துத் திரும்பினார். தயாரிப்பாளர்களை ஒரு நிமிடம் கூடக் காக்க வைக்காமல், பற்ற வைத்த சிகரெட்டைக் கூட இழுக்காமல் அணைத்துவிட்டுப் போவதைப் பார்த்தேன்.

''உங்கள் நடிப்பைப் பற்றி உங்களுடைய மனைவியிடம் கேட்க வேண்டும்'' என்றேன்.

''அவள் என்னிடமே சரியாகப் பேசப் பயப்படுவாள். பத்திரிகையாளரிடம் பேச இன்னமும் தயங்குவாள்'' என்றவர் தம் அம்மாவைப் பற்றிச் சொன்னார்.

''நான் படத்துக்குப் படம் வித்தியாசமான ரோல்களில் நடிப்பதில் அம்மாவுக்கு ரொம்ப

தெரியுமா?



- பத்திரிகைத் துறையில் சாவியின் பொன் விழாக் காலச் சேவையைப் பாராட்டிய விழாவில் ஏற்புரையின் போது ஒரு காரியம் செய்தார் சாவி. ''பாராட்டப்பட வேண்டிய எழுத்தாளர்கள் இன்னும்பலர் இருக்கிறார்கள்.'' என்று கூறி விழாவைக் கண்டு மகிழ வந்திருந்த நாரண துரைக் கண்ணனை மேடைக்கு அழைத்து, கைத்தறி ஆடை அணிவித்துக் கௌரவித்தார்.

  —ஆர்

- பாரதி நூற்றாண்டுக்குப் பிறகு இருநூறு தானே? எனவே பாரதி-200 என்ற அமைப்பு உருவாகியுள்ளது புது தில்லியில்! இவர்கள் நடத்திய பாரதி கண்காட்சியில் பாரதியும், அவர் நண்பர்களும் ஊர்வலத்திலும் கூட்டங்களிலும் போற்றி வணங்கிய ''பாரத மாதா'' சிலை முக்கிய மானகாட்சிப் பொருள்.

  மூலையில் அமர்ந்து 'இயர்போன்' அணிந்து பகவத் கீதையும், பாஞ்சாலி சபதமும் கம்பீரமாகப் படிக்கும் குரலை அடையாளம் கண்டு கொண்டால் ஓர் இன்ப அதிர்ச்சி, திரு 'சோ'வின் குரல்! அவர் தமது ஆத்ம திருப்திக்காகத் தாமே பதிவுசெய்து கொண்ட காஸெட்டுகளாம்இவை.

  —தம்பி சீனிவாசன்



மகிழ்ச்சி. என் மனைவிக்கும் அப்படித்தான். காரணம் நான் சின்ன வயசிலே சிவாஜி புரொடக்ஷன் வேலைகளைக் கவனிக்கிற மாதிரி சித்தப்பா கூட ஒப்புக்குப் போய் வந்து கொண்டிருப்பேன். பி. யூ. சி.யிலே ஆனர்ஸ் பாஸ் பண்ணிட்டேன். புரியலையா? பி.யூ. சிலே இரண்டு வருஷம் ஃபெயில்....அப்படிப் பட்டவன் இப்போ சுறுசுறுப்பா நடிக்கிறதைப் பார்த்துச் சந்தோஷப்படறாங்க. சண்டைக் காட்சியிலே நான் அப்பாவை விட ஜோரா நடிக்கிறதாக அம்மா சொல்லுவாங்க.

''டயட் விஷயத்திலே நான் எப்படி இருக்கணும்னு அம்மா சொல்லுவாங்க. அவங்க சொல்லி அனுப்பியபடிதான் சாப்பிடுவேன். டயட் கண்ட்ரோல் செய்து என் எடையை ரொம்பக் குறைத்திருக்கிறேன். இப்போ 87 கிலோ. இன்னமும் குறைப்பேன்.''

''உங்கள் கல்யாணம் நடந்தது எப்போது?''

''1981ல். மனைவி பெயர் புனிதா. விக்ரம் என்ற பெயரிலே ஒரு வயதுப் பையன் இருக்கிறான். அதுக்கு மேலே ஒண்ணும் கேட்காதீங்க'' என்றபடியே சிரிக்கிறார்.

குதிரைப் பந்தயம் நடக்கும் கிண்டி கிளப்பில் முதன் முறையாக நுழைந்த எனக்குப் படப் பிடிப்பு நடைபெறும் இடத்தைக் கண்டுபிடிக்கப் பத்து நிமிடங்கள் ஆயிற்று. தயாரிப்பாளர் கே. ஆர். ஜி. என்னைப் பார்த்ததும் மாடிக்கு வழிகாட்டினார்.

மேலே...

ஒவ்வொருபோலீஸ் அதிகாரியாக அணுகிக் கொலை பற்றித் துப்புத் துலக்கும் சீரியசான காட்சியில் நடித்துக் கொண்டிருந்தார் பிரபு. ஷாட் முடிந்ததும் அவருடன் காரில் வீடு வரையில் பேசிக் கொண்டே சென்றேன்.

''அப்பா புகழ் பெற்றவராக இருக்கும் போது மகன் என்னதான் திறமைசாலியாக இருந்தாலும் 'இன்னாருடைய மகன்' எனச் சொல்வதுதான் வழக்கம். நீங்கள் அப்படி இல்லை. பிரபுவாகவே புகழ் பெற்றிருக்கிறீர்களே'' என்றேன்.

''சிவாஜியின் மகன் என்பதற்காக எனக்கு வாய்ப்புகள் வருவதில்லை. ஆனால் எனக்கு லட்சக் கணக்கான ரசிகர்கள் இருப்பதற்கு அப்பாதான் காரணம். என்னைப் பொறுத்த வரையில் அப்பாவின் பெயரைச் சொல்லி அவருடைய மகன் இவர்' என்று சொல்லிப் பாராட்டுவதைப்பெருமையாகநினைக்கிறேன். அவருடைய இரத்தம்தான் என் உடம்பில் ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை நடிப்பின் மூலம் உணர்த்த நான் ஆசைப்படுகிறேன்.''

கார் ரேஸ் கிளப்பைத் தாண்டும்போது பத்துப் பதினைந்து பெண்களும் சிறுமிகளும் அரைக்கண வழி மறித்தார்கள். உடனே காரை நிறுத்தச் சொன்னார். கார் கதவுக் கண்ணாடியை இறக்கிவிட்டு அவர்களுடன் பேசியபடியே கை குலுக்கினார்.

—ஓடிவந்த ஒரு சிறுவனுக்குக் கை கொடுத்த பிறகு காரை எடுக்கச் சொன்னார்.

''நடிகனான பிறகு எனக்குப் பொறுப்புகள் அதிகமாகியுள்ளன. நான் எனக்காக வாழாமல் பிறருக்காக உழைக்கும்பொழுது மனத்துக்குத் திருப்தியாக இருக்கிறது. போகப் போக நல்ல கதாபாத்திரங்கள் என்னைத் தேடி வரும்போது நான் அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு மேலும் பாராட்டைப் பெற ஆசைப்படுகிறேன். பணத்துக்காகவோ அந்தஸ்துக்காகவோ நான் இப்படி ஓயாமல் படப் பிடிப்பில் கலந்து கொண்டு நடிக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. ஆனால் தெரிந்தோ தெரியாமலோ நடிப்புத் துறை என்னைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டு விட்டது. அதில் ஒரு பிடிப்பை ஏற்படுத்திக் கொண்டு, எப்பாடு பட்டாவது முத்திரையைப் பதிக்க ஆசைப்படுகிறேன். அதற்கு என் பெற்றோர்களின் ஆசியும், ரசிகர்களின் ஆதரவும் என் பக்கம் இருக்கும் என நம்புகிறேன்.''

—நிரைஞானி

மேலட்டை வண்ணப்படம்: யோகா



தெரியுமா?

''பாடல் பெற்ற திருக்கோயில் போல் காரைக்குடி இந்து மதாபிமான சங்கம், பாரதியாரின் பாடல்பெற்ற ஒரே சங்கம், பாரதியின் திரு உருவப் படத்தை முதன் முதலில் ஓவியக் கலைஞர் ஆர்யாவுக்கு வழங்கி, முண்டாசுக் கட்டுடனும், முறுக்கு மீசையுடனும் அந்த முத்தமிழ்க் கவியை உலகம் கண்டுகொள்ளச் செய்த இந்தச் சங்கம் அண்மையில் எம். எஸ்ஸின் பாரதி பாடல்கள் இசைத்தட்டு வெளியீட்டு விழாவை நடத்தியது. தொழிலதிபர் எம். எஸ். ஆர். எம். மெய்யப்பன் வெளியிட தொகுதி எம். எல். ஏ சி. சிதம்பரம் வாங்கிக் கொண்டார். ''இதிலுள்ள பொருத்தம் எனக்குப் புரிகிறது'' என்றார் சிதம்பரம். ''அண்மைக் காலங்களில் அரசியல்வாதிகள் வாங்கியே(!) பழக்கப்பட்டு விட்டதால், என்னையும் இங்கு 'வாங்க' வைத்திருக்கிறார்கள் போலிருக்கிறது! புதிய அனுபவமாயினும் இந்த இசைத்தட்டை வாங்கிக் கொள்வதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்!'' — கு.மெ.கிபருமாள்

தங்கரதம் வந்தது...

பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் நெடுநாள் கனவு இப்போது நனவாகிவிட்டது. தேவி கருமாரி அம்மனின் தங்க ரதத்தைத்தான் சொல்கிறேன்.

பதினாறு அடி உயரமுள்ள அழகான தங்க ரதம் தேவி கருமாரி அம்மனுக்காகச் செய்து முடிக்கப்பட்டிருக்கிறது.

கோவிலின் உதவி ஆணையர் திரு பால சுப்பிரமணியம் கூறுகிறார்:

''தங்க ரதம் திட்டம் 1980ல் ஆரம்பித்தாலும், முழுதும் வேலைகள் 1981ல்தான் ஆரம்பிக்கப்பட்டன. சுவாமி ராமதாஸரின் அருளாசியுடன் தங்க ரதத் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டது. இதில் மொத்தம் முப்பத்தைந்து கலைஞர்கள் ஈடுபட்டார்கள். ஹிந்து அறநிலையத் துறையும் எங்களுக்கு அனுமதி அளித்து எல்லாவிதஒத்துழைப்பும் அளித்தது.

தமிழ்நாட்டில் முதலாவதாகப் பழனி முருகன் கோவிலில்தான் தங்கத் தேர் செய்யப்பட்டது. பின்பு மதுரை திருச்செந்தூர், திருத்தணி, சமயபுரம், ரத்னகிரி, சுவாமிமலை ஆகிய கோவில்களிலும் தங்க ரதம் செய்யப்பட்டுள்ளது. இந்தக் கோவில் தமிழகத்தில் தங்கரதம் உள்ள எட்டாவது கோவிலாகும்.

தங்க ரதத்தை சுவாமி ராமதாசர், தக்கார் எம். பி. நாராயணன், நகை சரிபார்க்கும் அதிகாரி மற்றும் நானும் கண்காணிப்போடு தயாரிக்க ஏற்பாடு செய்தோம். மயிலாடுதுறை ஏ. ரத்தினம் செட்டியார் அண்ட் சன்ஸ் நிறுவனத்தார் இந்தத் தங்க ரதத்தை உருவாக்கினார்கள்.

கோவில் உண்டியலில் சுமார் 9600 கிராம் தங்கம் இருந்தது. பலவகை காரெட் கொண்ட தங்கத்தை, பம்பாயில் மத்திய அரசு தங்க உருக்காலையில் 24 காரெட் தங்கமாக உருவாக்கியதில் ஆறு கிலோ எழுநூற்றி அறுபத்தைந்து கிராம் சுத்தத் தங்கம்தான் கிடைத்தது. ரதத்துக்கு ஐந்து கிலோ தங்கம் பயன்படுத்தியுள்ளோம்.

சுத்தப்படுத்தப்பட்ட தங்கத்தை 100 கிராம் எடையுள்ள தங்க பிஸ்கட்டுகளாக மாற்றிச் சென்னைக்குக் கொண்டு வந்தோம். இங்கு 100 கிராம் எடையுள்ள தங்க கீப்பல்களாக மாற்றப்பட்டுப் பிறகு, ரதத்தில் பொருத்த வசதியாக முப்பத்தைந்து கிராமில் மெல்லிய காகிதம்போல் உருவாக்கப்பட்டது.

இந்த ரதம் முழுதும் தேக்கு மரத்தால் செய்யப்பட்டு, சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த பொம்மைகளில் செப்புத் தகடுகள் பொருத்தியுள்ளோம். கருமாரியம்மனுக்கு உகந்த சிற்பங்கள் சாஸ்திரப்படி இதில் சேர்க்கப்பட்டுள்ளன. அஷ்டலட்சுமிகள், கோஷ்டி விக்கிரகம், சப்த மாதர்கள் உள்ளன. சிம்ம வாகனம் பொருத்தப்பட்டுள்ள இந்தத் தங்க ரதத்தைப் பிரம்மகி சாரதியாக ஓட்டுகிறான்.


தேரின் முன்னால் இரண்டு குதிரைகள் வெள்ளியில் அமைக்கப்பட்டுள்ளன. பீடத்துக்கும் குதிரைகளுக்கும் எண்பது கிலோ வெள்ளி பயன்படுத்தப்பட்டது.


தங்க ரதத்தை நிறுத்தி வைப்பதற்காக ஒரு லட்ச ரூபாய் செலவில் புதிதாகப் பாதுகாப்பு அறை ஒன்று கட்டப்பட்டுள்ளது. அத்துமீறி எவரும் நுழைவதைத் தடுப்பதற்காக நான்கு காவலர்கள், இரண்டு கூர்க்காக்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பக்தர்கள் ரூ. 501 செலுத்தினால் அம்மன் தங்க ரதத்தில் பவனி வருவதைக் கண்டு களிக்கலாம்.''

-''விக்கி''

✕ அருள்மிகு தேவி கருமாரியம்மனுக்காகச் செய்யப்பட்ட தங்கத்தேர் அண்மையில் திருவேற்காட்டில் வெள்ளோட்டம் விடப்பட்டது.




வாலாட்டுனே.. தொலைச்சுப்புடுவேன்.. தொலைச்சு!
கருணாநிதி உளறுதல நம்பாதே!
எல்லாம் இந்திராம்மா பாத்துக்குவாங்க பயப்படாதே!
தமிழ் ஈழத்துக்கு வீரத்துடன் போராடு!
ஜெய வர்த்தனே
..ஆகவே சென்னை நகர வளர்ச்சிக்கு 500 கோடி ரூபாயும் கல்வித் திட்டத்துக்கு 1000 கோடியும், வருமான வரியில் 90 சதவிகிதமும், எக்சைஸ் வரியில் 60 சதமும், மதிய உணவுத் திட்டத்துக்கு அதிக மான்யமும்...
ர்..ர் கொர்..ர்..ர் ர்..ர்..ர்

கல்கி

1983 அக்டோபர் 2
ருத்ரோத்காரி புரட்டாசி 16
மலர் : 42 இதழ் : 9

அண்ணலே, வணங்குகிறோம்!

அண்ணலே, உம்மை வணங்குகிறோம். நாங்கள் சுதந்திரம் பெற வேண்டும் என்பதற்காக உங்கள் வாழ்நாளின் எத்தனையோ ஆண்டுகளைச் சிறையில் கழித்தீர்கள். ஆனால் கொலைக் குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்ட ஒருவன், பதினைந்து ஆண்டுகளுக்குப் பின் குற்றமற்றவன் என்பதாக நீதி வழங்கப்பட்ட பின்னரும் மேலும் பதினாறு ஆண்டுகள் சிறையில் அடைத்து வைக்கப்பட்டது பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்க முடியாது. சுதந்திர பாரதத்தில் ருதால்ஷா என்பவருக்குப் பீகார் மாநிலத்தில் இந்தக் கதி நேர்ந்தது!

தியாக சீலரே, உங்களைப் போற்றுகிறோம். வாழ்நாளெல்லாம் அஹிம்சையைப் போதித்தீர்கள். வாயில்லா ஜீவன்களிடமும் அன்பு செலுத்தினீர்கள். ஆனால் நாங்களோ பாகல்பூர் சிறைச்சாலையில் கைதிகளைக் குருடர்களாக்குகிறோம்; தலைநகரிலே அந்தகர்களைப் போலீஸ் தடியால் அடித்து நொறுக்குகிறோம்!

தேசப் பிதாவே, உம்மை வாழ்த்துகிறோம்! பாரதத்தின் பல்வேறு மொழியினரும் மதத்தவரும் ஒற்றுமையாக வாழப் பாத யாத்திரை மேற்கொண்டீர்கள்; உண்ணாவிரதம் இருந்து பிரார்த்தனை செய்தீர்கள். இருந்தும் நாங்கள் பாடம் கற்கவில்லை. பஞ்சாபில் பதற்றநிலை; அஸ்ஸாமில் படுகொலைகள்; காஷ்மீரில் தேர்தல் வன்முறைகள்; தமிழ்நாட்டில் மறுபடி பிரிவினை வாதம்; குமரி மாவட்டத்தில் மதவெறியாட்டம்; ஹைதராபாத்தில் இந்து-முஸ்லிம் கலவரங்கள்.

காந்திஜி! உமது சமாதியில் மலர் வளையம் வைத்து நமஸ்கரிக்கிறோம்! இந்தியா அரசியல் சுதந்திரம் பெற்றால் போதாது, பொருளாதார சுதந்திரமும் அடைய வேண்டும் என்று எண்ணினீர்கள். அதை உணர்த்த சர்க்கா சுற்றினீர்கள். பாரதத்தின் ஆன்மா அதன் கிராமங்களில் உள்ளதென்று சொன்னீர்கள். நாங்கள் புரிந்துகொள்ளவில்லை. தொழில் கல்வித் திட்டம் தொடங்கவில்லை. கிராமப்புறங்களில் தொழில் வளம் பெருக்கவில்லை. பதிலாக நாளுக்கு நாள் வேலையில்லாத் திண்டாட்டத்தைத்தான் வளர்த்துக் கொண்டிருக்கிறோம்.

மகாத்மாவே! உங்கள் படங்களை இன்று துடைத்து மாட்டி மாலை இடுகிறோம். 'உண்மையே கடவுள்' என்றீர்கள். ஆனால், 'சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பவன் முட்டாள்' என்ற நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டு விட்டோம். லஞ்ச ஊழலுக்கும் கறுப்புப் பணத்துக்கும் பண வீக்கத்துக்கும் விலைவாசி உயர்வுக்கும் அடிமைகளாகி விட்டோம். இவற்றிடமிருந்து எங்களுக்கு விடுதலை யார் வாங்கித் தரப்போகிறார்கள்? மறுபடி வாய்மைக்கு உயரிய இடம் இருக்குமாறு யார் அரசின் கொள்கைகளை மாற்றி அமைக்கப் போகிறார்கள்?

ஏந்தலே! மரணத் தருவாயிலும் 'ஹே, ராம்!' என்று அழைத்தீர்கள். ஆனால் நாங்கள் மதச் சார்பின்மை என்ற பெயரால் நாத்திகம் வளர்க்கிறோம். இறையுணர்வு இல்லாத அரசியலில் உள்ள ஆபத்தை விளக்கினீர்கள். எமது தலைவர்களோ கடவுளையே ஏமாற்ற வேஷம் போடுகிறார்கள்!

உத்தமரே! ஜாதிப் பாகுபாடு கூடாது என்றும், அனைவருக்கும் சம வாய்ப்பு தேவையென்றும் உண்ணாவிரதம் மேற்கொண்டு உயிர் கொடுக்கவும் சித்தமானீர்கள். ஆனால் நாங்களோ முற்படுத்தப்பட்டவர், பிற்படுத்தப் பட்டவர் என்று புதிய ஜாதிகளை உருவாக்கித் திறமையைத் தண்டித்துக் கொண்டிருக்கிறோம்; அறிவாளிகளை நாட்டை விட்டுத் துரத்தியடிக்கிறோம்.

ராமராஜ்யக் கனவு கண்டவரே, உங்கள் ஜெயந்தியைக் கொண்டாடியே தீருவோம். இல்லாவிட்டால் உலகம் எங்களை நன்றி கெட்டவர்கள் என்று கருதி விடுமே!

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

இரும்பு குதிரைகள்

பாலகுமாரன்

அத்தியாயம் 38

"என்ன தப்பு காயத்ரி...''

''அடுத்தாப்பல இருக்கிற மனுஷனைப் புரிஞ்சுக்காம ஆகாயத்தைப் புரிஞ்சுக்க வேணும்னு நினைச்சதே தப்பு. நமக்கு நெருக்கமாக இருக்கிற பறவைகளையும் மிருகங்களையும் புரிஞ்சுக்காம பறக்கறதுக்கும் சக்கரத்துல ஓடறதுக்கும் கத்துண்டது தப்பு. இந்த மரம் எவ்வளவு சிநேகம் நமக்கு. எவ்வளவு அவசியம் நமக்கு. இதைத் தெரிஞ்சுக்கப் புஸ்தகம் படிக்க வேண்டிய நிலை. அப்படிப் படிக்கிற புஸ்தகமே மரத்தை அழிச்சுப் பண்ற விஷயம்தான். புஸ்தகம், சினிமா, கார், ஏரோப்ளேன் எதுவும் அவசியமே இல்லே விஸ்வநாதன்.''

''கற்கால வாழ்க்கைதான் சரியா?''

''மனசு கற்கால மனுஷன் மாதிரி, இன்னும் ஆசையும் ஆங்காரமும் இருக்கிறபோது வாழ்க்கை அப்படி இருக்கிறதே சரி. இல்லையா? நம்முடைய மனசும் அடிப்படைக்குணமும் மாறாமல் கம்ப்யூட்டர் வச்சிண்டு என்ன செய்யலாம்? அதே ஆங்காரம், ஆசை எத்தனை கிலோ வெயிட்னு ஒரு வேளை கணக்குப் போடலாம். போட்டு என்ன பலன்?''

''உன் பேச்சுப்படி பார்த்தா தலைக்கு மேலே வெள்ளம் போயிடுத்து காயத்ரி.''

''யெஸ். அதனாலே தான் பல சமயம் பிரமிச்சுப் போய் நிக்கறேன்.''

''நம்மை இப்போ எது காப்பாத்தும்?''

''இந்தக் கவிதை, கதை, பெயிண்டிங் மாதிரி சமாசாரம்தான் கொஞ்சம் நம் உசிரைத் தக்க வைக்கும். நம் கவிதையை விட கம்ப்யூட்டர் கவிதைதான் உசத்தின்னு ஒரு காலம் வரபோது நம்ம ஆட்டம் குளோஸ். கம்ப்யூட்டரைப் பத்திப் படிக்கப் படிக்க நடுங்கறது உடம்பு. விளிம்புக்கு வந்துட்டமோன்னு பதறிப் போறது. டினோசார்ஸ் மாதிரி மிருகங்கள் பெரிசாகிப் பெரிசாகி நகர முடியாம அது வம்சமே அழிஞ்சா மாதிரி நம்ம புத்தி வளர வளர, நமக்கு அழிவு நிச்சயம். நம்ம கண்டுபிடிப்பு வளர வளர, முடிவு நெருக்கம்.''

''யோசனை பண்ணிப் பார்த்தாக் கூட எனக்கு அவ்வளவு பயம் வரலே காயத்ரி.''

''படித்ததனுடைய பலன் பயங்கரம் தெரியலே.''

''அப்ப இந்தக் கவிதையை ஏன் பாராட்டினே....?''

''வீட்டுக்கொரு குதிரைன்னு வீட்டுக்கொரு வலிமையுள்ள ஆள். காலத்தோடு செய்ய வேண்டிய போர்னு சொன்னது சரி. அந்த அரசனுடைய ஆசை — குதிரையினுடைய வேகம், சக்தி நமக்குள் அன்பை, நட்பைக் கொடுக்கணும்னு ஆசைப்பட்ட கவிதை சரி. ஆரம்பத்துல குழப்பம் இருக்கும். பின்னாடி எல்லாம் சரியாப் போகும்னு சொன்ன இடம்தான் நெருடறது. நிஜமாவே எல்லாம் சரியாப் போகுமா?''

''நீ போலியா, நிஜமான்னே தெரியலே காயத்ரி. புடவை நகைன்னு பேசாம இப்படி ஒரு கவலையைப் பத்திப் பேசறயே...''

''உங்களைத் தாண்டி நான் யோசனை பண்றது உங்களுக்கு அவமானமா, ஈகோ ப்ராப்ளமா இருக்கா?''

''நோ, நோ.''

''புடவை நகைன்னு சாதாரணமா பேசற பெண்களைத் தான் ஆண்களுக்குப் பிடிக்கும். ஃபிலாஸஃபி பேசினா 'போர்' பைத்தியம்னு நகர்ந்துடத் தோணும். நிறையப் பேர் நகர்ந்திருக்கா.''



''எனக்கு உன்னைப் புரியறது காயத்ரி. ஏன்னா இந்தக் கவலே, பயம் எனக்கும் உண்டு.''

''தேங்க்யூ... விஸ்வநாதன். எங்கப்பாவுக்கப்பறம் நான் அதிகமாப் பேசின ஆண் நீங்கதான்.''



''ஒரு சந்தேகம் காயத்ரி. உன் கல்யாணம் பத்தி நீ யோசிச்சது உண்டா? இவ்வளவு பேசற பெண் குடித்தனம் பண்ண முடியுமா?''

''சிரமம்தான்.''

''ஸோ....மென்ன நீ நார்மலுக்கு வந்தா என்ன?''

காயத்ரி வாய் விட்டுச் சிரித்தாள். அவன் கையைப் பற்றிக் கொண்டாள். ''ஸோ, என்னை அப்நார்மல்னு முடிவு பண்ணியாச்சா? அடி பைத்தியமேன்னு செருனைக்கிறேனா?''

''இல்லை காயத்ரி. இந்த மென்மையான கவலை நிறைஞ்ச மனசோட நீ ஜாக்கிரதையா வளரணுமேன்னு வேதனைப்படறேன். இதெல்லாம் புரியற புருஷன் உனக்குக் கிடைக்கணுமேன்னு கவலைப்படறேன்.''

''எனக்குக் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசை இல்லை விஸ்வநாதன்.''

''ச்சு... எல்லாப் பெண்களும் சொல்ற டயலாக்தான் இது.''

''ஒரு குழந்தை பெத்துக்கணும்னு ஆசை

உண்டு. கல்யாணம் பண்ணிக்காம குழந்தை பெத்துண்டா என்ன தப்பு?''

''காயத்ரீ.....''

''ஒரு ஆணுக்கு என்னையும் பங்கு போட்டு எனக்குப் பொறக்கற குழந்தையையும் பங்கு போட்டு என்னுடைய புத்தி கொஞ்சம், அந்த ஆள் புத்தி கொஞ்சம், அப்பா ஒரு பக்கம் அம்மா ஒரு பக்கம்னு அலேக்கழியறதுக்குப் பதிலா மொத்தமா என் புத்தியை ஆரம்பத்திலேர்ந்து என் இஷ்டமாக் குழந்தைக்கு ஊட்டி வளர்க்கலாமில்லையா?''

''நான்ஸென்ஸ்.''

''இல்லே. சென்ஸோடதான் பேசறேன். ஒரு புள்ளைக்குக் காது குத்தி பூணல் போட்டு என். ஸி. ஸி. காக்கிச் சட்டை மாட்டி, ஹிந்தி சினிமா, டிஸ்கோ டான்ஸ் பாக்க அனுப்பி உருவமே இல்லாம குழப்பமா வளர்க்கறதுக்குப் பதிலா என் குழந்தையைப் புருஷன் ஆக்கிரமிப்பு இல்லாம நானே வளர்த்தா தப்பா?''

''ஒரு குழந்தைக்கு அப்பா வேண்டாமா?''

''பெரியாழ்வார் ஆண்டாளை வளர்த்தாரே அம்மா எங்கேன்னு கேட்டாளா ஆண்டாள்?''

''என் அப்பா எங்கேன்னு குழந்தை கேட்டா?''

''உன்னைக் கிண்டி பார்க்குல வெண் தேக்கு மரத்தடியிலேருந்து எடுத்துண்டு வந்தேன்னு சொல்றது.''

''க்ரூயல்.''

''அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நடுவே சிக்கிச் சீரழியறதை விடவா? இரண்டு வெவ்வேறு துருவங்களுக்கு இடையே அழுந்தி வேதனைப் படறதை விடவா?''

''உனக்கு அவிட்ட நட்சத்திரம் மகர ராசி. சனி கிரகத்துப் பாதிப்பு நிறையன்னு உங்கப்பா சொல்லியிருக்கார். அதான் பார்வர்டட் இன்டலிஜென்ஸோட தவிக்கிறே.''

''ஸ்டுப்பிட்.''

''சரி, வெறும் குழந்தை மட்டும் கொடு. வேறே உறவு வேண்டாம்னு யார் கிட்டக் கேட்கப் போறே... யார் புரிஞ்சுப்பா இதை? அசிங்கப்படுத்திட மாட்டாங்களா?''

''உங்க கிட்டக் கேட்கப் போறேன். உங்களுக்கு என்னைப் புரியலையா?''

''காயத்ரி....'' விஸ்வநாதன் வேகமாக எழுந்தான்.

''ஏன் இவ்வளவு பதற்றம்....?''

''தாரிணியை மட்டமாப் பேசினது இதுக்குத்தானு?''

''நோ... அது வேற விஷயம். இது வேற விஷயம். நீங்க முடியாதுன்னுவோ சரின்னுவோ என் அபிப்பிராயம் மாறுது.''

''நானும் மாற மாட்டேன்! காயத்ரி, தாரிணி நல்லவளோ கெட்டவளோ... உசத்தியோ மட்டமோ நான் மாற மாட்டேன். ஐ லவ் ஹெர் மட்லி.''

''நீங்க தாரிணியை நேசிக்கிறதுக்கும் நான் கேட்டதுக்கும் சம்பந்தமில்லே.''

''உண்டு காயத்ரி. என்னால் ஏமாத்த முடியாது. அவ கிட்டப் போய் சொல்ல முடியாது. அவளைத் தவிர வேறு எந்தப் பெண்ணோடும் உறவு கிடையாது.''

''இவ்வளவு முரட்டுத்தனம் ஏன் உங்க காதல்ல....?''

''நாளைக்கு தாரிணிக்கு யார் கிட்டயாவது போகத் தோணித்துன்னு 'நீ போனியே காயத்ரிக்கிட்டே நான் போறேன்'னு....''


கோ-ஆப்டெக்ஸ்
சின்னத்தில்
கோடி கோடி
வண்ணங்கள்
20%
தீபாவளி
சிறப்புத்
தள்ளுபடி
5-10-83 முதல்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

விருந்தினரை உபசரிக்க
ஏற்ற வீட்டு உபயோகப் பொருள்கள்
டாசெல் பீங்கான் பாத்திரங்கள்



கப்புகள், சாசர்கள், காபி
கெட்டில்கள், பீங்கான் தட்டுகள்
ஆகியவற்றை டாசெல் கலை
அழகு மிகுந்தவையாக கவர்ச்சி
நிறைந்தவையாகத் தயாரிக்
கின்றன.

வீடுகளில் விருந்தினரை
வரவேற்று உபசரிக்க ஏற்ற
இவை ஹோட்டல்களின்
உபயோகத்திற்குக் கூட
உகந்தவை,

TACEL

தமிழ்நாடு செராமிக்ஸ் லிட்.,
25, செனடாஃப் ரோடு, தேனாம்பேட்டை,
சென்னை-600 018.

EP-TC-103-83

''லோ, உங்க காதல், கடமை நெறியெல்லாம் மனைவி கற்போட இருக்கணும்னு தான். அவ யார் கிட்டயும் போய்டுவாளோங்கற பயம்தான் உங்களைக் கட்டிப் போட்டிருக்கு. இங்க நிறையப் பேர் கற்போட இருக்கிற காரணம் பொண்டாட்டிதான்.''

''ச்சீ... குடும்பம் பத்தி உனக்குத் தெரிஞ்சது இவ்வளவுதான்.''

''எனக்குக் குடும்பத்துல நம்பிக்கை யில்லை.''

''நாளைக்கு உன் புள்ளை பெரியவனு ஆனா?''

''சுயமா நிக்கத் தெரிஞ்சபோது வெளியே போன்னு அனுப்பிச்சிடுவேன். சாகிற வரைக்கும் தனியா இருப்பேன்.''

''வெல்... இது உன் வழி. என் வழி வேறே... எழுந்திரு போகலாம்.''

''வெவ்வேற வழின்னு தெரிஞ்ச பிறகு நான் எது? குட்பை.''

''இங்கே சீக்கிரம் இருட்டிப் போயிடும் காயத்ரி. இருட்ல ஒண்ணு கிடக்க ஒண்ணு நடந்ததுன்னு... கெட் அப்....''

''நோ. உங்க அக்கறை தேவையில்லை.''

''அடம் புடிக்கிறயா சனியனே... என்ன திமிரு ஒரு பொட்டச்சிக்கு.''

''காலம் காலமாச் சொல்லிண்டு வர வார்த்தை. இனிமே வேகாது. நீங்க சொன்ன திமிர் என்னைக் காப்பாத்தும்..பூ கேன் கோ.''

''வரப் போறியா இல்லையா?''

காயத்ரி மௌனமாய்உட்கார்ந்திருந்தாள்.

விஸ்வநாதன் அவள் தோளைப் பிடித்து முரட்டுத்தனமாக உலுக்கினன். ''நான் கிளம்பிப் போய்டுவேன் காயத்ரி.''

''போங்களேன். உங்க டைலைப் பிடிச்ச சினிமா மாதிரி என்னைக் கைவிட்டுடாதீங்கன்னு கதறணுமா? கோ. கெட்லாஸ்ட்.''

''நீ போற வழி தப்பு காயத்ரி. சொன்னு ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கறே?''

''உங்களுக்குப் புரியலை விஸ்வநாதன்? மரபும் விஞ்ஞானமும் எதிர் எதிரா நிக்கறது தெரியலை? பரஸ்பரம் டாமினேட் பண்ணத்தான் இத்தனை வளர்ச்சியும்னு புரியலை? பயமுறுத்தல்தான் இத்தனை கண்டுபிடிப்பும்னு தெரியலை? காடோ மிருகமோ மின்னலோ இடியோ என்னைப் பயமுறுத்தலை. மனுஷன்தான் ரொம்பப் பயமுறுத்தறான். லீவ் மீ அலோன்.''

விஸ்வநாதன் சட்டென்று வெளியேறினன். பின்னல் நடந்து வருகிருளோ என்று திரும்பித் திரும்பிப் பார்த்தான்.

காயத்ரி வரவேயில்லை. ஆட்டோ பிடித்து அடையாறு போய்த் தன் வீட்டுக்குப் போன் செய்தான். ''நாணு சார் இருக்காரா... கூப்பிடு தாரிணி.''

நாணு ஐயரிடம் சுருக்கமாய் விஷயம் சொன்னன்.

இருட்டத் துவங்கிவிட்ட நேரத்தில் கிண்டி பார்க்கில் நுழைந்த நாராயணசாமி ஐயர் தம் மகளின் தலையைத் தடவி, ''எழுந்து வா காயத்ரி'' என்றழைத்தார். அவள் தோல் பையை எடுத்துத் தோளில் மாட்டிக்கொண்டதும் பெண்ணின் விரலை மெல்லப் பிடித்துக் கொண்டு நடந்தார்.

(தொடரும்)

வட்ட மேஜை

கனகா மீது நடவடிக்கை சரியானதே!

போக்குவரத்து அமைச்சர் – பெண் மருத்துவர் கனகா விவகாரம் பற்றிய கேள்வி பதிலைப் பார்த்தேன்.

பஸ் விபத்துக்குள்ளானவர்களைப் பார்க்கச் சென்ற அமைச்சரிடம் எழுந்து வந்து, பேஷண்டுகளின் நிலைமையை டாக்டர் கனகா விளக்கவில்லை. விளக்க வந்த அஸிஸ்டெண்டுகளையும் தடுத்திருக்கிறார். ஆகவே அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது சரியே.

''அமைச்சருக்கே இந்தக் கதி என்றால், என் கதி என்ன?'' என்று பேஷண்ட் அழுதிருக்கிறார். ஆஸ்பத்திரியா? அநாதை விடுதியா?

சென்னை-84 ஆர். சுந்தரம்

18–9–83 தராசு பதிலில் ''தமிழகத் தமிழர்களைக் கலைஞர் கைவிட்டிருக்கவே கூடாது'' என்று குறிப்பிடப் பட்டிருந்தது. தன்மானமுள்ள தமிழன் செய்து காட்ட வேண்டிய கடமையிலிருந்து கலைஞர் தவறாமல் சட்ட மன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தாரே தவிர தமிழகத் தமிழர்களைத் தவிக்க விட்டு அல்ல! கலைஞர் கருணாநிதி சட்ட மன்றத்துக்கு எவ்வளவுக்குத் தேவைப் படுகிறார் என்பதை இப்போதாவது தமிழகம் உணர்ந்து கொண்டதே. அது போதும்.

பெங்களூர் ப. மூர்த்தி

'சுலபமாய் மகிழச் சில வழிகள்' தலையங்கம் ஒவ்வொரு வரியும் எழுதும்போது ஆசிரியர் நெஞ்சில் மட்டும் குருதி பெருகவில்லை. படிக்கும் வாசகர் நெஞ்சத்திலும் தான்.... கண்ணீரை மறைத்துக்கொண்டு புன்னகையுடன் படிக்க முயன்றேன். முடியவில்லையே!

பம்பாய் லீலா கோபாலன்

'நீங்கள் கேட்டவை'க்கு நடுவிலேயே சில நிமிடம் பிரவீணாவுக்காக அனுதாபம் செலுத்தும் சாமர்த்தியம் தராசுக்குத்தான் வருமய்யா!

சென்னை-39 சிம்மவாஹினி

ஆன்டிபயாடிக் மருந்துகள் குறித்த எச்சரிக்கை கட்டுரை மிகவும் பயனுள்ளதாய் இருந்தது. பிராக்டீஸ் அதிகமாக உள்ள டாக்டர்கள் நோயாளிகளிடம் தகுந்த எச்சரிக்கை இன்றி மேம்போக்காக வைத்தியம் பார்க்க நேரிடுகிறது. அத்தகையோருக்குக் கட்டுரையின் கடைசி சில வரிகள் நல்ல அறிவுரை தான்!

விழுப்புரம் கே. எஸ். குமார்

அடடா... உங்களுக்குத்தான் எவ்வளவு கரிசனம் வாசகர்கள் மேல்! 'தலைபோகிற விஷயங்களைத்' தேடிப் பிடித்தல்லவா போட்டிருக்கிறீர்கள்!

பெங்களூர்-53 சித்திரப்பிரியா

மும்முரமாக விலைபோகிற விஷயங்களைத் 'தலை போகிற விஷயங்கள்' என்று நீங்கள் கேலி செய்திருப்பது எங்களைப் போன்ற 'சினிமா மேனியாக்'குகளைக் கிண்டல் செய்வது போல் உள்ளது!

விராலிமலை வி. சந்திரசேகரன்

நீண்டகால இடைவெளிக்குப்பின் எங்கள் குடும்பத்தினர் அனைவரையும் சிரிக்க வைத்தது 'பிரின்ஸ்பால் வீட்டுக் கல்யாணம்' ஜோக்ஸ். மனம் விட்டுச் சிரிக்க வைத்தது.

ஜோக்காளருக்கு எங்கள் மனமார்ந்த பாராட்டுக்கள். இது போல் மேலும் எதிர் பார்க்கிறோம்.

சென்னை கலைமணி

'மரணத்தை நோக்கி' போன்ற சிறுகதைக் கற்கள் எறிந்து சமுதாயத்தில் எல்லா நிலைகளிலும் உள்ள 'ஆஷாடபூதிகள்' கொல்லப்பட வேண்டும். ராஜ்பு தான் மருமகனாக இருந்ததை இன்று மறந்த மாமியார்களைச் சமுதாயம் பகிஷ்கரிக்காத வரை பெண்களுக்கு விமோசனமே கிடையாது. இமயாக்களின் தற்கொலைச் செய்திகள் பத்திரிகைகளின் பத்திகளை நிரப்பிக் கொண்டே தான் இருக்கும்.

பூனா மது கஸ்தூரி

பிரபல இந்தி நடிகர் சஷிகபூரின் தயாரிப்புதான் ''36 சௌரிங்கி லேன்'' என்பதையும், ஜெனிஃபர் கெண்டல் அவரது மனைவி தான் என்ற விவரத்தையும் உங்கள் விமர்சனத்தில் குறிப்பிட்டிருக்கலாம்.

போடிநாயக்கனூர் எஸ். சையது முகமது

முகுந்தன் எழுதிய 'பாம்பு பாம்பு' சிறுகதை நல்ல நகைச்சுவை மட்டுமல்ல; நல்ல எடுத்துக்காட்டுடன் கூடிய சாடல். இன்றைய தினம் சமுதாயத்தில் – குறிப்பாக மருத்துவத் துறையில் – மலிந்து கிடக்கும் ஊழல்களை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டார். அரசாங்கத்தின் கையாலாகாத்தனம்; அதிகாரிகளின் அலட்சியம்; மக்களின் அறியாமை – இவை மூன்றையும் மையமாக வைத்து எழுதப்பட்ட ஓர் அருமையான படைப்பு இது.

பரசலூர் ஆர். நாகராஜன்

இதோ ஒரு ஹேர்-டை எளிதாக உபயோகிக்கக் கூடியது, நம்பமுடியாத குறைந்த விலையில்!



கோத்ரெஜ் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் உங்களுக்காகவே விசேஷமான கலவை முறையில் தயாரிக்கப்படுகிறது.
இந்தியாவில் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் இது ஒன்றே. இது தானாகவே பரவுகிறது. ஆகவே நீங்கள் சிறிதளவே உபயோகித்தால் போதும்!
மிகமிக முக்கியம், நீங்கள் நம்பமுடியாத அளவுக்கு குறைவான விலையில் இது கிடைக்கிறது!



கலப்பது சுலபம்
இந்தப் பவுடரை சிறிதளவு நீருடன் கலக்கவும். உபயோகிப்பதற்கு இப்போது தயார்.



உபயோகிப்பது சுலபம்
இதை சிரமமின்றி இலேசாகத் தடவுங்கள். தானாகவே ஒரே சீராக, மென்மையாக முடிமீது பரவி விடுகிறது. உங்கள் கேசத்துக்கு இளமையான அழகுத் தோற்றத்தைத் தருகிறது!

இந்தியாவில் தானாகவே பரவும் பவுடர் ஹேர் டை இது ஒன்றே.



Godrej

பவுடர் ஹேர்-டை
கான்ஸென்ட்ரேட்

தரமோ நீங்கள் நாடுவது விலையோ உங்களுக்குப் பிடித்தமானது.

CASGS -168 203 TAM

9

இவர்கள் ஊர் திரும்பியபோது ஸ்டேஷனுக்கு சாம்பசிவமே அழைக்க வந்திருந்தார்.

''என்னப்பா — நீங்க ஏன் வீணு அலைஞ்சி சிரமப்படறீங்க?''

''இதுல என்னம்மா சிரமம்! ஒரு வாரமா உங்களைப் பாக்காதது எப்படியோ இருந்தது. அதான், நானே வந்துட்டேன். ஹவ் வாஸ் தி ட்ரிப்?''

''க்ரேட்... நீங்களும் வந்திருக்கலாம்பா.''

''அது சரி....'' சாம்பசிவம் சிரிக்க, பாலாஜி அவசரமாய் மனைவி கட்சிக்குப் பாய்ந்தான்.

''ஏன் மாமா சிரிக்கிறீங்க? நிஜமாகவே தான் நீங்களும் வந்திருக்கலாம். தனியா எங்கே போகப் போறீங்க?''

மீண்டும் ''அது சரி'' என்று கூறி அவர் சிரிக்க, அப்பா கேலி பண்ணுவது புரிய, கௌரி அவர் கையைப் பற்றி ஒரு தரம் அழுத்தினாள்.

காரில் ஏறி உட்கார்ந்ததும் சாம்பசிவம் கேட்டார்:

''நம்ப வீட்டுக்குப் போயிடலாமா பாலா? ஒரு நாள் இருந்துட்டு நாளைக்கு உங்க வீட்டுக்குப் போகலாம் இல்லே?''

பாலாஜி கௌரியைப் பார்த்தான். அவள் 'உங்கள் இஷ்டம்' என்பது போல் தோளைக் குலுக்கினாள்.

''இப்ப உங்க வீட்டுக்கே போயிடலாம்... பத்து மணிக்கு மேலே எனக்கு நர்ஸிங் ஹோமுக்குப் போகணும். வேணு சாயங்காலமா எங்க வீட்டுக்குக் கிளம்பறோம்.''

வீட்டுக்குச் சென்ற நாழிகையில் கௌரி அப்பாவிடம் தங்கள் ஆக்ரா பயணத்தைப் பற்றி விரிவாகக் கூறினாள்.

மறக்காமல் பக்கத்துப் பெட்டி பெண் மணி தேனிலவுக்குச் செல்லும் தம்பதியா என்று கேட்டதைச் சொல்லி அவரைச் சிரிக்க வைத்தாள்.

குளித்துச் சிற்றுண்டி சாப்பிட்டு விட்டு, பாலாஜி புறப்பட்டுப் போனதும் கௌரி காப்பியை ஸ்பூனால் கலக்கிக் கொண்டே அப்பாவின் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

அவள் அலாதி சந்தோஷத்துடன் இருப்பதை ரயிலிலிருந்து கீழே இறங்கின விநாடியே சாம்பசிவத்தால் உணர முடிந்தது.

கூடவே எதையோ வெளிப்படுத்தத் தவிக்கும் பரபரப்பும் இருப்பதாக மனதுக்குப் பட, என்ன என்று அரை நிமிஷம் யோசனை பண்ணிவிட்டு, பின், எதுவானாலும் அவளே தன்னிடம் கூறுவாள் என்ற நினைப்பில் அந்தச் சிந்தனையைத் தவிர்த்தவர், இப்போது மகள் அருகில் வந்து உட்கார்ந்ததும் எதிர் பார்ப்புடன் ஏறிட்டார்.

''நீங்க கொஞ்சம் காப்பி சாப்பிடறீங்களாப்பா?''



''வேணும்மா. ஏற்கனவே ரெண்டு கப் ஆயாச்சு...''

காப்பியைக் குடிக்காமல் ஆற விட்டு விட்டு யோசனையுடன் கௌரி அதைக் கலக்கிக் கொண்டே இருக்க, எங்கு ஆரம்பிப்பது என்று அவள் தயங்குவதைப் புரிந்துகொள்ள முடிய, சாம்பசிவம் மெதுவாகக் கனைத்தார்.

''ஹோ ஆக்ரா ட்ரிப்பை நல்லா அனுபவிச்சீங்க!''

''ந....ல்லா.''

''கிளம்பினதுதான் கிளம்பினீங்க, இன்னும் ஒரு வாரம் போல லீவு எடுத்துக்கிட்டு டெல்லி வரைக்கும் போயிருக்கலாம்.''

கௌரி சிரித்தாள்.

''டெல்லி வரைக்கும்தானுப்பா.. சொல்றதுதான் சொல்றீங்க, அப்படியே காஷ்மீர் வரை சேர்த்துக்கக் கூடாதா. இந்த ஒரு வாரம் லீவு எடுத்ததே ஜாஸ்திப்பா...''

''ஏம்மா, நர்ஸிங் ஹோம்லே ஒண்ணும் பிரச்னை இல்லையே! அப்படியே சுந்தரம் ஏதாவது தகராறு பண்ணி யிருந்தா நான் பேசி இருக்க மாட்டேனு? என் மாப்பிள்ளைக்கு லீவு கொடுடான்னு கொடுக்கறுன்.''

கௌரி காப்பி ஒரு வாய் குடித்தாள். மிச்சத்தை மேஜை மேல் வைத்தாள்.

''சுருக்க சுந்தரம் அங்கிள் கிட்ட நீங்க பேச வேண்டிய நாள் வரும்னே நான் நினைக்கிறேனப்பா...''

''என்ன கௌரி சொல்றே ''

''ம்ம்...பாலா தனியா ப்ராக்டீஸ் பண்ண ஆசைப்படறுர். இப்படி ஒரே நர்ஸிங் ஹோம்லே ஒருத்தருக்குக் கீழே வேலை பார்க்கிறதை விட, இன்டிபெண்டண்டா இருந்தா தேவலேன்னு நினைக்கிறுர்...''

சாம்பசிவம் ஒரு விநாடி புருவங்களைச் சுருக்கி நேராக்கினர்.

ஓ! பிரயாணத்தில் தங்கள் எதிர்காலம் பற்றிப் பேசி ஒரு முடிவுக்கு வந்திருப்பார்களோ! அதுதான் கௌரி ஒரு பரபரப்புக்கு உள்ளாகி இருந்தாளோ!

சாம்பசிவம் முன்னுல் சாய்ந்து உட்கார்ந்தார். மேலே சொல்லு என்பது போல் மகளைப் பார்த்துத் தலை அசைத்தார்.

''இவர் கிட்டே ஆபரேஷன் பண்ணிக்க விரும்பறவங்க நாளுக்கு நாள் அதிகமாயிட்டே போறதும் எல்லார் கிட்டயும் பாலாவுக்கு ரொம்ப நல்ல பேர்ன்றதும் உங்களுக்கே தெரியும். நான் சொல்ல வேணும்... ஒரே நர்ஸிங் ஹோம்ல சம்பளம் வாங்கிக்கிட்டு டாக்டரா இருக்கிறதை விட, கன்ஸல்டேஷனைத் தனியா வெச்சுக்கிட்டு ரெண்டு, மூணு ஹாஸ்பிட்டல்லே ஆபரேஷன்கள் செய்தா இன்னும் நிறைய கேஸ்களைத் திருப்திகரமாசக் கவனிக்க முடியும்னு பாலா நினைக்கிறுர்.''



சிவசங்கரி

சாம்பசிவம் கண்ணாடியைக் கழற்றி, துடைத்து மாட்டிக் கொண்டார். காது விளிம்பைத் தடவிக் கொடுத்தபடி பேசினார்.

''தனியா ஒரு நர்ஸிங் ஹோம் வைக்கறதைப் பத்தி நீ என்ன நினைக்கிறே கௌரி?''

''தனியாவா யூ மீன் சொந்தமா நர்ஸிங் ஹோமா ''

''ம்''—

''இது எப்படிப்பா சாத்தியம்?''

''ஏன் சாத்தியமில்லே?''

''சொந்தமா நர்ஸிங் ஹோம் நடத்துறதுன்னா லேசா? அதுக்கு எக்கச் சக்கமாப் பணம் வேணுமேப்பா?''

சாம்பசிவம் வாஞ்சையுடன் மகளை ஏறிட்டார்.

''என்கிட்ட இருக்கிறதெல்லாம் யாருக்குக் கௌரி? உனக்குத்தானே?''


''அது.... அதுசரி... ஆனாலும் பாலா வந்து இது....''

''பாலாஜி கிட்ட இது விஷயமா நானே பேசணும்னுதான் இருந்தேன். லக்கிலி நீயே பேச்சை எடுத்துட்டே... ஒரு வருஷமாவே எனக்கு இந்த எண்ணம் உண்டு. எதுக்காக இத்தனை திறமை, வசதி இருக்கறப்போ இன்னொருத்தர் கீழே உழைக்கணும், சொந்தமான நர்ஸிங் ஹோம் இருந்தா நல்லா இருக்கும்: உழைப்புக்குத் தகுந்த பேர், புகழ், பணம் எல்லாம் வருமேனு யோசனையா இருந்தது. சுந்தரம் என் சிநேகிதன்தான். ரொம்ப நல்லவன்தான். வாழ்க்கைல முன்னேறச் சந்தர்ப்பம் இருக்கறப்ப அதைப் பாலாஜி உபயோகப்படுத்திக்க வேணுமா என்னம்மா, நான் சொல்றது புரியுறதா?''

ஜெர்மனி நாட்டில் ரயில்வே லெவல் கிராஸிங் 'கேட்' கிடையாது. இருந்தும் ஒரு சிறு 'லெவல் கிராஸிங்' விபத்து கூட நிகழ்வதில்லை. காரணம், எலெக்ட்ரானிக் சாதனம் ஏதுமில்லை! ரயில் பாதையைக் கடந்து செல்ல விரும்பும் வாகன ஓட்டிகள் தங்கள் வாகனங்களை நிறுத்தி ரயில் வருகிறதா என இரு புறமும் நோக்கி நிச்சயப் படுத்திக் கொண்ட பின்னரே கடந்து செல்வது தான்!

ஆதாரம்: உலக அறிவுக் களஞ்சியம்

நகவல்: ஆர். அரிகோபி



எதையோ பேசத் துவங்கி சம்பாஷணை எங்கோ போய்விட்டதில் கௌரி சில நிமிஷங்களுக்குப் பதில் சொல்லத் தெரியாமல் மௌனித்தாள். பின், அப்பாவைப் பார்த்துப் பிரியமாய்ப் புன்னகைத்தாள்.

''பாலாகிட்டப் பேசறேம்ப்பா... நிச்சயம் அவர் சந்தோஷப்படுவார்.''

''தயக்கமே வேணாம். என்னிக்கிருந்தாலும் இதெல்லாம் எனக்கப்புறம் உனக்கு வந்து சேரப் போற சொத்துத்தான். அதை இப்பவே நல்லவிதமா உபயோகப்படுத்திக்கிறதுல தப்பே இல்லேன்னு சொல்லு. நான் பேசப் போனா அவர் கூச்சப்படலாம்... அதனால நீதான் விளக்கமா அடிச்சுப் பேசணும் கௌரி....''

''பேசறேம்பா... கொஞ்சம் டைம் கொடுங்க....''

பெரிசாய் ஒரு விஷயத்தை மனசிலிருந்து இறக்கிவிட்ட நிம்மதியுடன் சாம்பசிவம் இருக்கையில் சாய்ந்து கொண்டார்.

''அப்பா....''

''ம்?''—

''இப்ப உங்களுக்கு வேற ஏதாச்சும் வேலை இருக்கா?''—

''ம்ஹூம் இல்லே... ஏம்மா?''

கௌரி புடவையின் மடிப்புக்களை நீவிவிட்டாள்.

''உங்க கிட்டக் கொஞ்சம் பேசணும்...''

நிமிர்ந்து உட்கார்ந்தவர் கவலையுடன் மகளை ஏறிட்டார்.

இன்னும் என்ன பேச வேண்டும்?

அப்படியானால் கௌரி சொல்ல நினைத்தது பாலாஜியின் வேலை சம்பந்தமானது இல்லையா?

''என்னம்மா?''

''நாங்க ஒரு குழந்தையைத் தத்து எடுக்கலாம்னு தீர்மானம் பண்ணி இருக்கோம்பா.''

''......''

பதில் பேசாமல் அவர் அமர்ந்திருக்கக் கௌரி—

''அதிர்ச்சியா இருக்காப்பா?'' என்றாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே... ஆனாலும் என்ன இப்படி திடீர்னு...''

''திடீர் முடிவுதான்ப்பா.... ஆக்ராவில தூங்கிட்டு இருந்தவ திடும்னு எழுந்திட்டேன். என்னென்னமோ யோசனை; தூங்க முடியலே...பாலாவை எழுப்பி, 'ஏன் நாம ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக்கக் கூடாது'னு கேட்டேன். அவர் கொஞ்சம் கூடத் தயங்காம, 'தப்பேயில்லே, தாராளமா எடுத்துக்கலாம்'னு சொன்னார். அப்புறம் விடிய விடிய இரண்டு பேரும் தத்து எடுக்கிறதைப் பத்தி நிறையப் பேசினோம். இந்த முடிவு எங்க இரண்டு பேருக்குமே ரொம்ப சந்தோஷத்தைத் தந்திருக்குப்பா....''

சாம்பசிவம் எழுந்தார். கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு இப்படியும் அப்படியும் நடந்தார். மகள் அருகில் நின்று அவள் தோளைத் தட்டிக் கொடுத்தார்.

''எனக்கும் சந்தோஷமாத்தான் இருக்கு கௌரி.''

''நிஜமா? எனக்காகச் சொல்லலியே?''

''நிச்சயமா இல்லே... உங்க சந்தோஷம் தான் எ— சந்தோஷம். ஆமா, ஒண்ணு



சீக்கிரம்! உங்கள் குழந்தையுடைய காயத்தின் சிறந்த பாதுகாப்பிற்கு, உபயோகிப்பீர் பாண்ட்-எய்ட் பிராண்டு டிரஸ்ஸிங்குகள்.

அவனது திறந்த காயத்தில் சிறிது அழுக்கு இருந்தாலும் கூட தொற்றுப் பரவக் கூடும்.

தொற்றுக்கு எதிராக, திறந்த காயங்களின் பாதுகாப்பிற்கு உலகெங்கிலும் உள்ள தாய்மார்கள் நம்புவது பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்.

பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்கில் உள்ள கிருபணமான ஆன்டி செப்டிக், காயத்தை ஆற்றுவதற்கு உதவுகிறது. அதிலே, காற்றோட்டமளித்து விரைந்தாற்றும் நுண்துளைகள்; ஒட்டிக்கொள்ளாத வசதிமிக்க ஒப்பற்ற அடுக்கு.

காயங்களின் வெவ்வேறு வடிவம் மற்றும் அளவுகளுக்கு ஏற்ப வருகின்றன பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள். பெரிய புண்கள், சிறிய வெட்டுக் காயங்கள், கட்டுப்போட முடியாத இடங்கள், கொப்புளம் மற்றும் சிராய்ப்புகளுக்கு எப்போதும் உங்கள் கைவசமிருக்கட்டும் பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்.





பாண்ட்-எய்ட் பிராண்டு டிரஸ்ஸிங்குகள்.

தொற்றுக்கு எதிரான மிகவும் நம்பகமான பாதுகாப்பு.

Johnson & Johnson

OBM/9283

கேட்டா தப்பா நினைக்க மாட்டியே! திடீர்னு இந்த எண்ணம் உனக்கு எப்படி வந்தது?''

''தாஜ் மஹாலுக்குப் போயிருந்தபோது ஜார்ஜ், டெய்ஸினு ஒரு வெளி நாட்டுக் கப்பிளைப் பார்த்தோம். இரண்டு குழந்தைங்க லட்டு லட்டா... நான்ஸி, பீட்டர்னு—அவங்களும் எங்க ஹோட்டல்லயேதான் தங்கி இருந்தாங்க.... மறுநாள் காலை பிரேக்ஃபாஸ்ட் சாப்பிடறப்போ ஜார்ஜ் மட்டும் பீட்டரோட வந்தான். டெய்ஸியும், நான்ஸியும் எங்கேனு கேட்டப்போ, 'நான்ஸிக்கு லேசா ஜுரமா இருக்கு... அதனால டெய்ஸி அவகூட ரூம்ல இருக்கா'னு சொன்னான். அடாப்ட் பண்ணிட்ட நாள்லேந்தே நான்ஸி கொஞ்சம் பூஞ்சையாத்தான் இருக்கா. துளி ஸ்ட்ரெயின் ஆனாலும் ஜுரம் வந்திடுது'ன்னும் கவலையோட, ஆனா ரொம்ப சகஜமா சொன்னப்போ, நாங்க திகைச்சுப் போயிட்டோம். அப்புறமா டெய்ஸியப் பார்க்க அவ ரூமுக்குப் போயிருந்தேன். இரண்டாவது குழந்தை வேணும்னு தீர்மானம் பண்ணப்புறம், பெத்துக்கிட்டா என்ன, தத்து எடுத்துக்கிட்டா என்ன, எல்லாம் ஒண்ணுதானேன்னு நான்ஸியை ஆர்பனேஜ்ல இருந்து தத்து எடுத்துக்கிட்டதைத் தயக்கமே இல்லாம சொன்னது என் மனசில உழண்டுக்கிட்டே இருந்தது. அந்த நடு ராத்திரிலே பாலாவை அப்படிக் கேட்க, நான்ஸியோட பேச்சுத்தான் முக்கிய காரணம்.''

சாம்பசிவம் குறுக்கே எதுவும் பேசாமல் உன்னிப்பாய் அத்தனையையும் கேட்டார்.

''வெரி குட்... நீங்க ஒரு தீர்மானத்துக்கு வந்தாச்சுன்னா, நாலையும் நல்லா அலசிட்டுத் தான் எடுத்திருப்பீங்க... சரி...மேற்கொண்டு என்ன செய்யறதா உத்தேசம்?''

''நல்ல குழந்தை ஒண்ணை உடனடியா தத்து எடுத்துக்கறதுதான்..''

''ம்ம்.... உறவுல தத்து எடுக்கறதா இருக்கீங்களா?''

அப்பா யாரை மனசில் வைத்துக்கொண்டு கேட்கிறார் என்பது புரிய, கௌரி இல்லை என்று மறுத்தாள்.

''சுந்தரி அக்கா ஒரு தரம் பாலாகிட்டச் சொன்னாங்களாம் — 'வேணும்னா சுரேஷை எடுத்திட்டுப் போய் வளருங்க... நீங்க அவன் மேல பிடிப்பு வைச்சிருக்கீங்க... அவனும் நீங்கன்னா உசிரா இருக்கான். அத்தான் ஒண்ணும் சொல்ல மாட்டார்'னு அப்ப பாலா எதுவும் பதில் சொல்லலை. சிரிச்சு மழுப்பிட்டார். ஆனா யோசிச்சு பார்க்கறப்ப உறவுல எடுக்கறது சரிப்பட்டு வரும்னு தோணலை. பெத்தவங்களைக் கிட்டவே வைச்சுக்கிட்டு நாம இவனை வளர்த்தா அது முழுமையா நம்ம கிட்ட ஒட்டுமா? தவிர, சுரேஷுக்கு இப்ப வயசு எட்டு. அப்பா-அம்மா யாரு, நாங்க யாருன்னு எல்லாம் விவரமாப் புரிஞ்சு போயாச்சு... இதுக்கு மேல திடும்னு எங்க ஆசைக்காக அவனைப் பெத்தவங்க கிட்ட இருந்து பிரிக்கிறது நியாயமாத் தோணலை. முக்கியமா, சட்டப்படி தத்து எடுத்துக்க அக்கா சம்மதிப்பாங்களான்னு தெரியலை. 'கூட்டிட்டுப் போய் வளருங்க'னுதான் அப்ப சொன்னாங்க... இப்ப நாம கேட்டு அவங்க இல்லேன்னா, வீண் வருத்தம்.... அதான் எல்லாத்தையும் யோசிச்சுப் பார்த்துட்டு, முன் பின் தெரியாத குழந்தைதான் சரின்னு தீர்மானம் பண்ணிட்டோம்...''

''சுந்தரி இதுக்காக வருத்தப்பட மாட்டாங்களோ?''

கௌரி சிரித்தாள்.

''அவங்க எதுக்குப்பா வருத்தப்படணும்?''

வெகுளியாய்ப் பேசினவளைச் சாம்பசிவம் அழுத்தமாய்ப் பார்த்தார்.

''இல்லே... வந்து.... ஒண்ணுமில்லே... விடு .... குழந்தைக்கு என்ன பண்ணப் போறீங்க?''

''என் ஸ்நேகிதி மிருணாளினிக்கு பால பவனோட தொடர்பு உண்டு. அவ கிட்டச் சொல்லி....''

தொடர்ந்து கௌரி பேசுவதற்குள் போன் ஒலிப்படுத்த, எழுந்து ரிஸீவரை எடுத்து ''ஹலோ'' என்றவள், ''அப்பா! உங்களுக்குத்தான்'' என்று அவரிடம் நீட்டினாள்.

(தொடரும்)



பாரசீகத்திலிருந்து துருக்கி நாட்டுக்குக் கழுதை மீது அமர்ந்து சென்று கொண்டிருந்தார் நசிருதீன்முல்லா. பாரசீக எல்லையில் சுங்க இலாகா அதிகாரி முல்லாவை விசாரித்தார். ''கள்ளக் கடத்தல் செய்வதுதான் என் தொழில்'' என்றார் முல்லா. அதிகாரி மூட்டைகளை நன்கு ஆராய்ந்தார். அவற்றில் புல்லைத் தவிர வேறு ஏதுமில்லை. இப்படிப் பலமுறை கழுதைமீதே சென்றுவந்தார் முல்லா. அவர் பெருஞ் செல்வந்தரான பிறகு எகிப்து நாட்டில் குடியேறினார். அங்கு வந்த சுங்க அதிகாரி கேட்டார்: ''எவ்வளவோ தடவைகள் நீங்கள் கழுதை மீது சென்றதைப் பார்த்தேனே தவிர நீங்கள் எந்தப் பொருளைக் கடத்திச் சென்றீர்கள் என்று என்னால் கண்டு பிடிக்கவே முடியவில்லை. இப்போது நீங்கள் பாரசீகத்திலோ அல்லது துருக்கியிலோ இல்லை. அதனால் தங்களைக் கைது செய்யமுடியாது என்ற பயமின்றிக் கூறுங்கள்: நீங்கள் கடத்திச் சென்ற பொருள் என்ன?''

''கழுதைகள்!'' என்றார் முல்லா சிரித்துக்கொண்டே!

—அமுதன் மைந்தன்


தலைவலி,
உடல்வலி,
ஜலதோஷம்
மறைந்திடும்
இங்கே
AMRUTANJAN
PAIN BALM
AMRUTANJAN LTD.
14/15, Luz Church Road, Madras-4
90 ஆண்டுகளாக நம்பகமானது.
அமிர்தாஞ்சன்
துரித நிவாரணம் உறுதியுடன் அளிப்பது.
தீய பின்விளைவுகள் இல்லாதது.
OBM 8321 TM

ஆயிரம் ரூபாய் பரிசு!

பாலு கிருஷ்ணன்

போட்டிக்கதை:5

டெலிவிஷன் மேல் போர்த்தியிருந்த துணியை எடுத்து உதறி மீண்டும் போர்த்தினேன். கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தேன். ஜன்னலில் கிடந்த குண்டூசியை டப்பாவில் போடலாம் என்று எடுத்தேன். ஊசி இருக்கிற பக்கம் கையில் குத்தியது. மீண்டும் மேல் பாகத்தை அழுத்தி எடுத்தேன். நகத்திற்குள் கொஞ்சம் கண்ணுறும்பு தடவினேன்....

இந்த 'தேன்', 'னேன்'க் கெல்லாம் உரிமை உள்ளவன் யார் என யோசிக்கிறீர்களா?

அது நான்தான் பாலு கிருஷ்ணன். என்ன? பெயர் புதுமையாக (என் கருத்து) இருக்கிறதே என்றுதானே பார்க்கிறீர்கள்? எல்லாம் பாலு மகேந்திராவைப் பார்த்துப் போட்டுக் கொண்ட சூடு. இந்தப் பெயர் பிடிக்கவில்லையென்றால் 'பாலு' என்றே சின்னதாகக் கூப்பிட்டுக் கொள்ளுங்கள்.

நானாகிய பாலு கிருஷ்ணன் இளைஞன்: மாநிறம்: ஆனல் அழகாக இருப்பேன். (நம்புங்கள்) நான் இன்றைய கல்லூரி மாணவன். நாளைய வேலையில்லாப் பட்டதாரி!

சரி, விஷயத்துக்கு வருவோம். இன்று ஞாயிற்றுக் கிழமை. பொழுது போக ஏதாவது யோசனை சொல்லுங்களேன்.

மணி பத்து ஆகிறது. தேவி பாரடைசில் பகல் காட்சி போகலாம் என்றால் கட் அடிக்க காலேஜூம் இல்லை. என்ன இருந்தாலும் கட் அடிப்பதில் இருக்கிற திரில் வீட்டுக்குத் தெரிந்து சினிமாவுக்குப் போவதில் இல்லை.

ஒரு கல்கியை எடுத்துப் புரட்ட ஆரம்பித்தேன். அடுத்த பக்கத்தில் — 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்ற அறிவிப்பு வெளியாகியிருந்தது. விவரங்களை நோக்கினேன். முதல் பரிசு ஆயிரம் ரூபாய் என்று போட்டிருந்தது. ஓர் அற்புதமான ஐடியா. நான் ஒரு கதை எழுதினல் என்ன?

பரிசு கிடைத்தால் ஆ...யி...ர...ம் ரூபாய்! அதன் பிறகு நானும் ஓர் எழுத்தாளனாக அங்கீகரிக்கப்பட்டு விடுவேன்.

வேண்டாம் இந்த வீண் வேலை என்கிறீர்களா? ஆயிரம் ரூபாய் கனியாக விட யாருக்கு மனம் வரும்?

சிரிப்புக் கதை எழுதலாமென்றால் ஒத்து வராது.பயங்கரக் கதை எழுதினல் சிரிப்புத் தான் வரும்; காதல் கதை எழுதினல் என்ன? கரெக்ட்! காதல் கதையே எழுதுவோம்.

கதையோட கரு பற்றி யெல்லாம் கவலையில்லை. முதலில் எழுத ஆரம்பிக்கலாம். பிறகு அதிலிருந்தே கருவைத் தேடிப் பிடிக்கலாம். கரு மாட்டாமல் போய்விடுமா?

நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு மேஜையைக் கொஞ்சம் முன்னே இழுக்கிறேன். மேஜை சத்தம் போட்டது. நான் படிக்கிறேன் என்று அம்மா சந்தோஷப்பட்டுக் கொண்டிருப்பாள்.

அட்டை, பேப்பர்,பேனு போன்ற எழுதுவதற்கு வேண்டிய சகல ஆயுதங்களும் இருக்கின்றனவா என்று பார்க்கிறேன். எல்லாம் இருக்கிறது.

முதல் முதலாகக் கதை எழுதுவதால் கண்ணை மூடிக் கொண்டு கடவுளை வேண்டிக் கொள்ள ஆரம்பித்தேன்.



பேப்பரில் ஒரு பிள்ளையார் சுழியைப் போட்டுவிட்டுக் கதையை எழுத ஆரம்பிக்கிறேன்.

''தட்.... த....தட்...'' வாசல் கதவு உயிர் போகிற அவசரத்தில் தட்டப்பட்டது.

எரிச்சலாய் இருந்தது. கதை எழுத ஆரம்பிக்கும்போது பூஜை வேளையில் கரடியாய் யார் அது?

அதாவது போகட்டும் என்றால் வந்த கரடி எதற்கு யானை மாதிரி கதவைப் பலமாக இடிக்கிறது?

பேனாவை வைத்துவிட்டு எழுந்து சென்று தாழ்ப்பாளை விலக்கிக் கதவைத் திறந்தேன். வெள்ளை ஜிப்பா, வெள்ளை வேட்டியில் வயதான ஒருவர் நின்றிருந்தார். ஜிப்பாவுக்குச் சின்ன மெட்டல் பட்டன்கள் வைத்து அந்தக் காலத்து கண்ணாம்பா ஸ்டைலில்...சீ! டி. ஆர். மகாலிங்கம் ஸ்டைலில் வைத்திருந்தார்.

'என்ன' என்று கேட்டேன்.

'பெரிய தெரு இதுதானே?' — திருவாய் மலர்ந்தருளினார். 'ஆமாம்' என்றவுடன் இந்தியாவுக்கு வழி கண்டு பிடித்த கொலம்பஸ் போல் முகம் மலர்ந்தது. (சரித்திரத்தில் நான் ஸ்ட்ராங்!)

'இதுதானே பதினாலாம் நம்பர் வீடு?'

'இல்லே. இது இருபத்திரண்டு.'

'இதுதான்னு சொன்னாங்களே!'

'இது பழைய நம்பர். புது பதினாலு இந்தப் பக்கம் இருக்கு' என்று வலது பக்கத்தில் காட்டினேன். அவர் சென்றார்.

மீண்டும் வந்து உட்கார்ந்து எழுத ஆரம்பித்தேன்.

'ஆதவன் இருட்டுக் கன்னியை விட்டுப் பிரிய மனமில்லாது பிரிவது போல் மெல்ல வெளியே....'



வேண்டாம். இது போல் நிறையக் கதைகளில் படித்தாயிற்று. வேறு ஏதாவது யோசிப்போம். இதில் ஓர் அரை மணி நேரம் கழிந்தது.

கதையை ஆரம்பிப்பதற்கு விகடன், குமுதம், கல்கி போன்ற பல பத்திரிகைகளின் உதவியை நாடினேன். எந்தக் கதையின் ஆரம்பமும் எனக்கு ஒத்து வந்து உதவி செய்யவில்லை. மீண்டும் பலத்த யோசனையில் ஆழ்ந்தேன்.

அட! இப்போதுதான் ஞானோதயமே ஏற்படுகிறது. கதையைப் பற்றி அல்ல இந்த ஞானோதயம். இவ்வளவு நேரம் இது தோன்றவில்லை. இந்த இங்க் பேனா ராசியில்லை. (ஒரு முறை இந்தப் பேனாவைப் பரீட்சை எழுத எடுத்துப் போனதால் ஒரு கேள்விக்குக் கூட விடை தெரியாமல் போயிற்று.) வேறு பேனாவால் கதை எழுத ஆரம்பித்திருந்தால் இத்தனை நேரத்தில் ஒரு குறுநாவலே எழுதியிருப்பேனே!

மேஜை டிராயரைத் திறந்து தேட ஆரம்பிக்கிறேன். இதோ வீட்டில் கிணறு தோண்டும்போது கிடைத்த கற்கால பால் பாயிண்ட் பேனா அதை எடுத்து எழுத ஆரம்பித்...

திரும்பவும் இன்னொரு தடங்கல். மை தீர்ந்து விட்டதால் பேனா எழுதவில்லை.

மேதாவி!


ஒரு ஹரியானாக்காரன் தலையில் சுமையோடு நடந்து சென்று கொண்டிருந்தான். அந்தப் பக்கமாக ஒரு பஞ்சாபி மாட்டு வண்டி ஒன்றைச் சுமையுடன் ஓட்டி வந்தான். ஹரியானாக்காரன்மீது பஞ்சாபி இரக்கப்பட்டு வண்டியில் ஏறிக்கொள்ளச் சொன்னான். ஹரியானாக்காரனும்ஏறிஅமர்ந்துகொண்டான். ஆனால் சுமையைத் தன் தலையிலேயே வைத்திருந்தான்.

''சுமையைக் கீழே இறக்கிவையேன்'' என்றான் பஞ்சாபி.

''ஏற்கனவே உன் மாடு நிறையச் சுமை சுமக்கிறது. இது வேறயா?வேண்டாம்'' என்றான் ஹரியானாக்காரன்!

(குஷ்வந்த் சிங் கூறிய கதை)

—ராஜேஸ்வரி



எழுத ஆரம்பித்ததிலிருந்து தடங்கலாக இருக்கிறதே! 'கவலை கொள்ளாதே! தோல்விகளே வெற்றி என்னும் பரங்கிமலை உச்சியைத் தொட உதவும் 'லிஃப்ட்' என்று என் மனம் எனக்குக் கிதோபதேசம் செய்கிறது.

கடைக்குப் போய் ரீஃபில் வாங்க வேண்டும். சட்டைப் பையினுள் சில்லறையைத் தேடினேன். போதுமான அளவு இருந்தது. செருப்பை மாட்டிக் கொண்டு அம்மாவின் காதுக்கு நடக்கும் சத்தம் கேட்காமல் வீட்டிலிருந்து வெளியே நழுவி வந்தேன்.

கடைக்காரச் செட்டியாரிடம் காசை நீட்டினேன். பழைய பாக்கிக்காக ('கடன்' என்ற வார்த்தைக்குக் கௌரவமான அர்த்தம்) செட்டியார் கையை நீட்டினார். நான் அவரைப் பார்த்து அசடு வழிந்து, ராமர் பாணியில் 'இன்று போகட்டும், நாளை தருகிறேன்' எனக் கூற ரீஃபில் கைக்குக் கிடைத்தது.

அதற்குள் மணி ஒன்றாகி விட்டது. ரீஃபிலை 'மொகஞ்சதாரோ' பேனாவினுள் போட்டு மீண்டும் எழுத உட்கார்ந்தேன்.

இடையில் உண்டான தடங்கல்களினால் எனக்கு ஏற்பட்ட கற்பனை வெள்ளம் கரைந்து போயிற்று. மீண்டும் மூளையில் ஒரு மழைக் காலம் வரக் காத்திருக்கிறேன். மேலும் அரை மணி கழிந்தது.

'திருவிளையாடல்' தருமிக்குச் சொக்கநாதர் வந்தது போல் எனக்கு யாராவது உதவி செய்ய மாட்டார்களா?'

''ஆஹா... யார்யா இந்தப் பாலு கிருஷ்ணன்... பிரமாதமா கதை எழுதறான்!''

''இதோ பாருப்பா ரமேஷ், நீ என்ன பண்ணுவியோ தெரியாது. அந்த பாலு கிருஷ்ணனை நம்ம பத்திரிகையில ஒரு தொடர்கதை எழுத வைக்கணும்.''

''நிறையப் பணம் கேக்குறாரே சார்!''

''பரவாயில்லேப்பா. அவர் கதை எழுதினா சர்குலேஷன் இரண்டு மடங்கு ஆகுதேப்பா!''

''சார்! நீங்கதானே பாலு கிருஷ்ணன்? நான் உங்க ரசிகை... நிர்மலா. உங்க கதைன்னா எனக்கு உசிரு. நீங்க சுஜாதாவை விட நல்லா எழுதறீங்க சார்.''

''நீங்க ஓவராப் புகழுறீங்க!''

''இப்படி நீங்க சொல்றது உங்க பெருந்தன்மையைத்தான் காட்டுது.சார்..வந்து...''

''என்ன நிர்மலா, எதுக்கு தயங்கறீங்க?''

''நான்... உங்களை 'லவ்' பண்றேன்.''

''என்ன... லவ்வா? நிரு...''

''பாலு...!''

''நிரு...நிரு...''

''ஏய் பாலு! நாற்காலியிலேயே உக்காந்தாப்பல தூங்கறதும் இல்லாம, ஏன் இப்படிப் புலம்பிண்டிருக்கே?''

அம்மாவின் குரலைக் கேட்டுச் சடாரென்று எழுந்திருக்கிறேன். கதை எழுதிக் கொண்டிருந்தவன் எப்படித் தூங்கிப் போனேன்? ம்ஹூம். சார்! நமக்கும் கதை எழுதறதுக்கும் ஒத்து வராது போலிருக்கு. போலிருக்கு என்ன... அதுவேதான்.

மன்னிச்சுக்குங்கோ சார். உங்களை எல்லாம் தொந்தரவு செய்துட்டேன். இப்போ கெமிஸ்ட்ரி புஸ்தகத்தை எடுத்து வைச்சிண்டு... தூங்கப் போறேன்.. பை..பை...!

தாவண்கெரே

எடுப்பான கலப்பழகுடன் மிடுக்கான பாணி அமைக்கிறது.



செலவிடும்
பணத்திற்கு சரியான
மதிப்பு வழங்குவது—
மோன்ஸியர் டெரின்*
காட்டன் சூட்டிங்ஸ்,
தாவரின் ஷர்ட்டிங்ஸ்.
தனிப்பட்ட உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தயாரானது—
வண்ணங்கள் பலதினுசு

தாவண்கெரே
ஃபாஷன் துணிரகங்கள்


தி தாவண்கெரே காட்டன் மில்ஸ் லிட்.
ஹனுமந்தப்பா கட்டிடம்,
சித்ரதுர்கா ரோடு,
தாவணகெரே-577 002.

ஷோ ரூம்கள்:
காவேரி பவன், பெங்களூர்-560 009.
தாஜ்பன்பேட், ஹுப்ளி-580 020.
சித்ரதுர்கா ரோடு, தாவண்கெரே-577 002.

THOMAS CIT.TM

பிலிப்ஸ் க்வார்ட்ஸ் கண்ட்ரோல் க்ளாக் ரேடியோ
இது க்ளாக் மற்றும் ரேடியோ இவற்றின் இணைப்பு மட்டுமல்ல...

கூடுதல் சிறப்புகள் பல கொண்டதாகும்.





படுக்கையறைக்கு ஒரு அழகுப்பொருள்

படுக்கையில் படுத்தவாறே இசையை அனுபவியுங்கள் (உங்களுக்கென்றே ஒரு தனி சுகம்!). இது தானே நிறுத்திக் கொண்டு, காலையில் தானே இயங்கி உங்களை எழுப்பும்.



வரவேற்பறையில் பல நிகழ்ச்சிகளை வழங்குவது

சக்திவாய்ந்த MW மற்றும் SW செட் ஆகிய இது பட்டனைத் தட்டிய மாத்திரத்தில் உலக நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறது.



சமையலறையில் ஒரு உதவிப்பொருள்

பல்வேறு வேலைகளைச் செய்யும்போது சுவையான ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை வழங்குகிறது. குழந்தையைப் பள்ளியிலிருந்து அழைத்து வருவது போன்ற முக்கிய வேலைகளை "பஸ்ஸர்" மூலம் நினைவூட்டுகிறது.



நம்பகமான உதவியாளர்

அலுவலகம், தொழிற்சாலை, கடை, வியாபார நிறுவனம்—எங்கிருந்தாலும் சரி—உங்களை நேரந்தவறாது பொறுப்புடன் செயல்படுத்த உதவி செய்து, திறமை வாய்ந்தவரென பெயரெடுத்துக் கொடுக்கிறது.



பரிசளிக்க உன்னதமான பொருள்

மனதறிந்து செயல்படுவதைப் புரியவைக்க சிறந்த வழி! நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்புகிறது. அதே சமயம் புத்திசாலித்தனமாக நேரத்தைத் திட்டமிட்டு செயல்பட உதவுகிறது.

பிலிப்ஸ் க்வார்ட்ஸ் கண்ட்ரோல் க்ளாக் ரேடியோ, சக்தி வாய்ந்த ஒரு MW/SW செட் மற்றும் கனகச்சிதமான க்வார்ட்ஸ் கண்ட்ரோல் க்ளாக்கின் இணைப்பு மட்டுமல்ல....கூடுதல் அம்சங்கள் பல கொண்டதாகும். உதாரணமாக:

- கண்ணயர்ந்து விட்டாலோ தூங்கி விட்டாலோ அதைத் தானே நிறுத்திக் கொள்ள 'செட்' செய்து விடலாம் (கேட்கும் இசையே உங்களைத் தாலாட்டி விட்டாலும் கவலை இல்லை அல்லவா ?)
- இசையுடன் இணைந்த அலாரம் உங்களைக் காலையில் எழுப்புகிறது. தொட்டால் போதும்—நீங்கள் மேலும் பத்து நிமிடங்கள் தூங்கலாம்.
- நாள் முழுதும், உங்கள் அலுவல்களை நினைவூட்டிக் கொண்டிருக்கும், (குழந்தையைப் பள்ளியிலிருந்து அழைத்து வருவது, லஞ்ச் அல்லது மீட்டிங் நேரம் முதலியவை)
- ரேடியோ மற்றும் அலாரத்தை முன்கூட்டி 'செட்' செய்து செய்திகளையோ உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சிகளையோ கேட்கலாம்.

பிலிப்ஸ் க்வார்ட்ஸ் கண்ட்ரோல் ரேடியோவை மேலும் மேலும் உபயோகப்படுத்தும் போது நீங்கள் ஒப்புக்கொள்வது...அது பல சிறந்த அம்சங்கள் கொண்ட ஒரு எலெக்ட்ரானிக் அதிசயம் என்பதே. அழகு மற்றும் அறிவின் இணைப்பு.

பிலிப்ஸ்

வழங்குவோர்: பிலிப்ஸ்.
50 ஆண்டுகளுக்கும் மேலாக
இந்தியாவில் இல்லங்களெல்லாம்
முழங்கும் நம்பகமான பெயர்

PHILIPS

CASPR-929-203 TAM

கவியானேன்...

'சந்தகன்'

நிலவின் ஒளியில் மலரும் மலரின்
நிழலில்இருந்து பார்த்ததுண்டா
நிழலின் உருவம் கல்லில் முள்ளில்
நிற்கும்போது வலிப்பதுண்டா
உலவும் காற்றில் அலையும் எண்ண
உரசல்பட்டுச் சிலிர்த்ததுண்டா
உறையும் பனியில் மலையின் உடல்கள்
உதறலெடுக்கக் கண்டதுண்டா

கலவி முடித்த மலரும் வண்டைக்
காணுதழுமே உணர்ந்ததுண்டா
கலங்கும் மலரை இதழில் இருத்திக்
கண்ணீர் துடைக்க முயன்றதுண்டா
உலகில் இவைகள் அனைத்தும் செய்யும்
ஒருவன்உண்டு அவன்நானே
உணர்வின் விழிகள் பட்டுப் பட்டு
உள்ளமுருகிக் கவியானேன்.





மண்வாசனை

பாதை புரியாமல் கொஞ்ச நாள் தவித்தது போதும். மறுபடியும் கிராமம்தான் உயிர் கொடுக்கும் என்று மனசுக்குப் பட்டிருக்க வேண்டும். எனவே 'மண் வாசனை'. கிராமியமும் அதன் சுகந்தங்களும் பாரதிராஜாவின் பார்வையில் ஒவ்வொரு ஃபிரேமிலும் ததும்புகின்றன. கிராமியக் கலையும், சடங்கு முறைகளும் நிதானமாய்ச் சொல்லப்படுகின்றன. மனிதர்களும் அவர்களுக்குள்ளேயே தீர்மானமாகிற நியாயங்களும் அலசப்படுகின்றன.

ரம்மியமான சூழல்கள் கண்ணனின் காமிராவிற்குக் கொள்ளைத் தீனி. சற்றே இருண்ட, இருள் பிரிகிற, பகல் நேர என்று அத்தனை ஒளி அமைப்புக்களிலும் பளிச் பளிச். கூடவே கிராமங்கள் மோதுகிற இடமும், சந்தைக் காட்சியும் காமெராமேன், எடிட்டரின் பெருமை பேசுகின்றன.

திருப்பங்கள் இல்லாத தெளிவான கதையில் சுவாரஸ்யம் வராது என்று நினைத்தோ என்னவோ அங்கங்கே மளுக் மளுக்கென்று உடைத்துத் திருப்புகிறார்கள். ஆனால் பிரிந்து போன மாமன் வேறொரு பெண்ணை மணந்து வந்தானென்கிற அதிர்வோடு கதை நின்றிருந்தால் கிராமியத்திற்குப் பெருமை சேர்த்திருக்கும். அதற்கப்புறம் விட்டுப் போன பழைய பல்லவியுடன் எதிராளி கிராமம் மோத வருவதும், பெண்ணைக் கடத்துவதும், கைகலப்பதும்... ஆயாசமான அநாவசியங்கள்.

ராஜ கம்பீரமான பாத்திரம் காந்திமதிக்கு. பாம்படம் தொங்கும் துளைக் காதுகளும் சற்றே கூனிய முதுகுமாய்ப் பேத்தியின் மேல் பொங்கும் பாசமும், வீரம் ததும்பும் பின்னை பற்றிய பெருமையும், பிரவாகமான உரையாடல்களின் ஏற்ற இறக்க சரளமுமாய்ப் பிரகாசிக்கிறார்! அப்புறம் ரேவதியின் அறிமுகம். அந்தக்காலத்து ஸ்ரீப்ரியாவில் கொஞ்சம், இந்தக்காலத்து வனிதாவில் கொஞ்சம் என்று இழைத்துப் பின்னிய மாதிரி ஒரு முகவாகு. உணர்வுகளை வெளிப்படுத்துவதில் பிரமாதமான தேர்ச்சி. அறிமுகக்காளை பாண்டியனும் சிறப்பான தேர்வு. ஒட்டாத பாத்திரத்தில் ஒவ்வாத புதுக்கவிதைகளுடன் ரவி. அபஸ்வரமான வேஷத்தில் ஒய். விஜயா. கூடவே உதிரிப் பூவாக விஜயன்.

ஜாம் ஜாமென்று செவிக்குணவு படைக்கும் இளைய ராஜா. ரீரெகார்டிங்கும் பாடல்களும் தோழமையோடு பாரதிராஜாவிற்குக் கைகொடுத்திருக்கின்றன. இத்தனை இருந்தும் கதைஅமைப்பிலும், எதை எந்த விகிதத்தில் கொடுக்க வேண்டும் என்பதில் கவனமாயில்லாததாலும் தியேட்டரை விட்டு வெளியே வருகிறபோது வெறும் அதிர்வுகள் மட்டுமே நம் நெஞ்சில் மிச்சமிருக்கின்றன. மண் வாசனையைவிட ரத்தத்தின் வாடையே அதிகமாயிருக்கிறது.



தெரியுமா?

- சீர்காழி சிவ சிதம்பரம், சென்னையில் எம்.பி.பி.எஸ். முடித்துவிட்டு, அயல்நாட்டில் மேல்படிப்பைத் தொடருவதற்காக நுழைவுத் தேர்வு எழுத மணிலா சென்றுள்ளார்.

- சிவாஜியின் அத்தனை படங்கள், அவை வெளியான தேதி, சிவாஜி, பெற்ற பட்டங்கள் இத்தனை விவரங்களையும் கவரில் எழுதிவைத்துள்ளனர் 'சாந்தி' தியேட்டரில்.



ஒரு பொறுப்பில்லாத, ரெண்டுங் கெட்டான், பீடி பிடித்து வைக்கோல் போரை நெருப்புக்கு இரையாக்கிவிட்டு அடிக்குப் பயந்து, பட்டணம் வந்து சேர்கிறது. அங்கே ஒரு நாலுங் கெட்டானைக் காதலிக்க ஆரம்பிக்கிறது. இப்படிக் கூவத் தொடங்குகிறது படம்.

மகேஷ் ரெண்டுங்கெட்டான். இளவரசி நாலுங் கெட்டாள். இந்தப் பாத்திரத்துக்காகவே வார்த்தெடுத்த மாதிரி அப்படி ஒரு முக அமைப்பு - இனி வேறு கதா பாத்திரங்களுக்குப் பொருந்துவார்களா என்று சந்தேகம் வருகிற அளவுக்கு. மீன் பிடிப்பதைவிட இவர்கள் காதலை நெய்யூற்றி வளர்த்துச் சேர்த்து வைப்பதற்கே நேரமிருக்கிற 'தலை நிறைய மூளை உள்ள' சிலுக்கு அக்கா — இதுவரைக்கும் பார்க்காத ஒரு புதிய கோணத்தில். சந்தேகப்பட்ட மச்சானுடன் பிலுபிலுவென்று சண்டைக்குக் கிளம்புகிற ஜோராகட்டும், கண் ஜாடை காட்டியே வில்லனை ஓரம் ஒதுக்கிக் கொள்கிற நைச்சியமாகட்டும், சமயத்தில் கண்களில் நீரைக் காட்டிப் பாசம் பேசும் வித்தையாகட்டும் - நிஜமாகவே வித்தியாசமான சிலுக்கு. இருந்தாலும், அந்த 'டான்ஸ்' இல்லாவிட்டால் அப்புறம் படம் பருப்பு இல்லாத கல்யாணமாய்த் தானே போகும்? ஆகையால் ஒரு துஷ்யந்தத் தெருக்கூத்து டான்ஸ் — ரசிக்கும்படியாக.

கதையைப் பற்றி யெல்லாம் ரொம்பக் கவலைப்பட்டுக் கொள்ளக் கூடாது என்பதால் அது போகிற போக்கில் விட்டுப் பிடித்திருக்கிறார் அமரன்.

இளையராஜாவின் இனிமைகளைச் சிரத்தையோடு படமாக்குவதில் காட்டியுள்ள அக்கறையைப் பாராட்ட வேண்டும். குறிப்பாய்க் 'கண் பாரும் தேவி'.

ஒரு டான்ஸ், இரண்டு சண்டைகள், கொஞ்சம் கொஞ்சம் நகைச்சுவை, தொட்டுக்கொள்ள சிலுக்கு, இனிமையான பாடல்கள்- அவ்வளவுதான் எனக்கு வேண்டியது என்று தமிழகரசிகன் ஏற்கெனவே சொல்லிவிட்டான், எனவே அவ்வளவுதான் கொடுத்திருக்கிறார்கள்.

—ஜெயமன்மதன்




கொக்கரக்கோ



பாகிஸ்தான்: அணி ஸர்பிராஸ் பந்து வீச்சு



பாகிஸ்தான் அணியில் மற்றொரு பந்து வீச்சாளர் நக்வில்



இந்தியக் குழுவின் [illegible] மதனலால்!

- இந்திய — பாகிஸ்தான் அணியினரிடையே போட்டியா அல்லது நிர்வாகிகளுக்கும் வருணனுக்கும் இடையில் போட்டியா என்று யோசிக்க வைத்தது.
- இம்ரான்கான் இல்லாமலேயே பாகிஸ்தா

- [illegible] செய்தது போல் கவாஸ்கர் பாது 28வது சதத்தை எடுத்து மகிழ் வித்தார். பிராட்மனுக்கு இணையான சாதனையாளராய்த் திகழ இன்னும் ஒரே ஒரு சதம் தான் பாக்கி.
- எட்டு ஓவர் பாக்கி இருந்தபோது கிரிக்கெட் சட்டத்தைச் சரியாகப் புரிந்துகொள்


ின் பாதி பலம் போய்விட்டதென உணர்ந்தோம். ஸர்ஃப்ராஸ் நவாஸ் இல்லாததும் பலவீனமே.

- கபில்தேவ் காரணமாக இந்திய போலிங் பாகிஸ்தானின் போலிங்கை விடச் சிறந்ததாயிருந்தது. கபில் ஐந்து விக்கெட்டுகள் எடுத்து நமது போலர்களுள் முதன்மை பெற்ருர்.

- பின்னி, மதன்லால் 7வது விக்கெட்டில் நீலந்து 155 ரன்கள் எடுத்த போதிலும் அது பாதுகாப்பான ஆட்டமாக இருந்தது. மியான்தாத்தின் ஆட்டமோ தாக்குதலாகத் திகழ்ந்து அதிக சுவாரஸ்யத்தை அளித்தது. பிட்ச்சில் அவர் நடனமாடுவது போல் தமது பாதங்களைப் பயன்படுத்தி இந்திய ஸ்பின்னர்களின் பந்துகளை விளாசினுர். இந்த மாட்சில் கவர்ச்சிகரமாக ஆடிய ஒரேவீரராக விளங்கிய அவர், சதம் போட ஒரு ரன் இருக்கும்போது அவுட் ஆனது கிரிக்கெட் ரசிகர்களுக்குப் பெரிய ஏமாற்றம்.


ஸாது பாக் காப்டன் தமது ஆட்டக்காரர்களுடன் பெவிலியன் திரும்பிப் பரபரப்பு ஏற்படுத்திஞர். ஆட்டம் முடியவில்லை என்று உணர்த்தி அவர்களைத் திரும்ப ஆட வைக்க வேண்டியிருந்தது. ஆட்டத்தின் கடைசி ஓவரில்தான் கவாஸ்கர் சதம் போட்டார்.

- மேன் ஆப் தி மாட்ச் — மதன்லால்.



—பி. என். சுந்தரேசன்
தமிழ் வடிவம்: [illegible]
புகைப்படங்கள்: பாலாஜி

தலைசிறந்த ஆட்டக்காரர் மோகிந்தர் அமர்நாத்தின் விக்கெட் சரிகிறது!



செஞ்சுரி எடுத்து சாதனையின் சிகரத்தை தொடுகின்றார், கவாஸ்கர்



இந்தியக் குழுவின் 'மானம்' காத்த பின்னி

மாறுதல் வரும் — சுஜாதா

பூர்ணம் நியூ தியேட்டர் குழு வழங்கும்

"கிருஷ்ணா! கிருஷ்ணா!"

பாகவதர் — ராஜரங்கன்
சிஷ்யன் — மகேஷ்
கிருஷ்ணா ராவ் — எம்.பி. மூர்த்தி
ஃபோர்மேன் முத்து — ஸ்ரீதரன்
முதலாளி பிரகாஷ் — கௌரி சங்கர்
மதனகோபால் — முத்து
ரத்தினம் — ஸுதர்சனம்
யூனியன் தலைவர் ராஜசேகரன் — கே. பி. குமார்
உதவியாளர் — வேணுகோபால்
யந்திர நிபுணர் — ராமநாதன்
கிருஷ்ணா ராவின் மனைவி — ஷோபா
மூத்த மகள் துளசி — கலோசனா
இரண்டாவது மகள் மஞ்சுளா — சாந்தி
மூன்றாவது மகள் காவேரி — சிவரஞ்சனி
மகன் ரகோத்தமன் — ராஜேஷ்

புகைப்படங்கள் — ரங்கேஷ்

இந்த நாடகத்தில் ஹரிகதைப்பகுதியை இரண்டு விதங்களாகச் செய்யலாம். சுமாராகப் பாட, நன்றாகப்பாடத் தெரிந்த ஹரிகதை கோஷ்டி இருந்தால் அவர்கள் மூலம் மேடையிலேயே பின்பகுதியில் லெவல் வைத்து அவர்கள் நடத்தலாம். அப்படி இயலவில்லை என்றால் ரிகார்ட் செய்யப்பட்ட பின்னணியாக வைத்துக்கொள்ளலாம். பாட்டும் பதங்களும் மெட்டுகளும் ஒழுங்காக இருக்கவேண்டியது முக்கியம்.

(மேடை இருட்டாக இருக்கும் போதே நாடகம் துவங்குகிறது. பின்னணி சங்கீதத்துடன் குரல் ஒலிக்கிறது. முதலில் தம்புரா சுருதி.)

பாகவதர் (குரல்): கோவிந்த நாம சங்கீர்த்தனம்!

குரல்கள்: கோவிந்தா! கோவிந்தா!

பாகவதர் (பாட்டு): திமிக்கிட திமிக்கிட வாத்ய மிருதங்க, பிரும்மானந்த ஏரே கஜானனை... பலபீமா பலபீமா ஆபார குணவித மஹிமா ஜயஜய... பலபீமா!

(மேடையில் ஒளி பரவ, நடுவில் ஒரு பீடத்தில் பாகவதரும், பின்னால் சிஷ்யனும் தெரிகிறார்கள்.)

பாகவதர் (பேச்சு): ஆதௌ கீர்த்தனாரம்ப காலத்திலே, கிருஷ்ண பகவான், சர்வ கல்யாண குணங்களும் நிரம்பினவராக...

சிஷ்யன் (குறுக்கிட்டு): சுவாமி, கொஞ்சம் நான் சொல்றதைக் கேக்கறேளா?

பாகவதர்: கலி முத்திப் போச்சு, சிஷ்யன் கள்ளாம் குறுக்க பேசறபடிக்கு! என்னடா?

சிஷ்யன்: சுவாமி, இருபத்தஞ்சு வருஷமா இதே கிருஷ்ணர் கதையையே சொல்லிண்டிருக்கேள். இப்ப இதை யெல்லாம் யாரும் கேக்க மாட்டா. மாறுதலுக்கு இன்னிக்குப் புதுசா ஒரு கதை சொல்லுங்களேன்!

பாகவதர்: டேய், இது புராதனமான கலைடா. ஹரிகதைக் கலை இந்தக் காலத்தில க்ஷீணிச்சுண்டு இருக்கு. இதுக்குப் புத்துயிர் கொடுக்கறவா இருக்காளா? முன்னெல்லாம் பிரபுக்கள் எல்லாம் குரு பக்தியோட.....

சிஷ்யன்: சுவாமி, ரொம்ப இருக்குன்னு, ஒரு நடை வெத்தலை பாக்குக் கடை வரைக்கும் போயிட்டு வந்துடறேன். உங்களோ ஹரிகதைக் கதையை விடச் சொல்லலை. அதிலேயே புதுசா ஏதாவது கதை சொல்லலாமேங்கறேன்.

பாகவதர்: பக்த கோடிகளே! உங்களுக்கு நவீனமான விஷயம்தான் பிடிக்கும்னு கேள்விப்படறதனாலே இந்தக் காலத்துக் கதையைச் சொல்றேன், ஜம்பூத்வீபத்திலே பாரத வர்ஷத்துல, பரத கண்டத்துலே...
சிஷ்யன்: சுவாமி! அவாள்ளாம் அமராவதியிலே இருக்கா! பாபீண்டிக்கு வாங்கோ





போர்மன் மூர்த்தி: சும்மா சொல்லக்கூடாது: பொம்மை சோக்காத்தான் செய்யறே, தாத்தா!

பாகவதர்: சரிடாப்பா. உனக்கு எதிரா நான் நடக்க முடியுமா? நீதானே ஆர்கனைஸர்!... பக்த கோடிகளே, உங்களுக்கு நவீனமான விஷயம்தான் பிடிக்கும்னு கேள்விப்பட்டதனால இந்தக் காலத்துக் கதையையே சொல்றேன். ஜம்பூத்வீபத்திலே, பாரத வர்ஷத்துல, பரத கண்டத்துல...

சிஷ்யன்: சுவாமி, அவாள்ளாம் அவசரத்திலே இருக்கா, பாயிண்ட்டுக்கு வாங்கோ. இந்த ஜம்பூத்வீபம் எல்லாம் தெவசத்தின் போது வெச்சக்குங்கோ.

பாகவதர்: சரி. சென்னைப்பட்டணத்தில கிருஷ்ணன்னு ஒருத்தர் இருந்தார்.

சிஷ்யன்: மறுபடி கிருஷ்ணனா?

பாகவதர்: இல்லேடா, கிருஷ்ணராவ்னு ஒருத்தர். வயசு அம்பது இருக்கும். அம்பத்தூர்ல பிரகாஷ் டாய்ஸ்னு ஒரு தொழிற்சாலேல முப்பது வருஷமா சர்வீஸ். அவருக்குத் தெரிஞ்சது ஒண்ணே ஒண்ணு தான்...

சிஷ்யன்: குழந்தை பெத்துக்கறதா?...சுவாமி ஃபாமிலி பிளானிங் ஸ்டோரின்னா, இப்பவே ஜால்ராவை வெச்சர்றேன்.

பாகவதர்: இல்லேடாப்பா. குறுக்கே பேசாமல் கொஞ்சம் பொறுமையாக் கேளு. கிருஷ்ணராவுக்குத் தெரிஞ்சது, அழகா கிருஷ்ணர் பொம்மை பண்றது.

சிஷ்யன்: கிருஷ்ணரை விடமாட்டேன்!

• • •

(பாகவதர் பேசிக் கொண்டிருக்க, மேடையில் சென்ற வாக்கியத்திலிருந்தே ஒளி கூடி இருக்கிறது. நடுவே ஏறக்குறைய காலியாக மேடை. ஒரு சிறிய மேஜை அருகில் ஸ்டூல் போட்டுக் கிருஷ்ண ராவ்

பிரகாஷ்: இப்ப பிரம்ம என்னன்ற ஒரு நாளைக்கு நூறு பொம்மை செய்ய முடியுமா?
கிருஷ்ணராவ்: ஒரு நாளைக்கு நூறா? சேச்சே! முடியாது! என்னைப்போல நூறு கிழவன் வேணும்!



உட்கார்ந்திருக்கிறார். கண்ணாடி அணிந்து கொண்டு நெற்றியில் குங்குமம் இட்டிருக்கிறார். கையில் மரத்தால் செய்யப்பட்ட கிருஷ்ணர் பொம்மை ஒன்றைச் சிறிய பேனாக் கத்தியால் நிரடிக் கொண்டிருக்கிறார்.

● ● ●

பாகவதர்: மரத்தில பொம்மை செய்வார். ஒரே ஒரு சின்னப் பேனாக் கத்தியை வெச்சுண்டு கிருஷ்ணனுக்கு விரல், நகம், தலை மயிர், புன்சிரிப்பு எல்லாத்தையும் உண்டாக்குவார். இதுக்குன்னு ஸ்பெஷலா மரம் கொண்டு வந்து அதில் தேச்சுத் தேச்சு மெல்ல மெல்ல ஒரு கிருஷ்ணரை உண்டு பண்ணுவார்.

● ● ●

(அவர்பேசப்பேச மேடையில் நடிப்பு. உள்ளே ஃபோர்மன் முத்து வருகிறார்.)

முத்து: என்ன தாத்தா, ஆயிருச்சா?

கிருஷ்ண ராவ் (வேலையில் கவனமாக): இல்லே முத்து. இன்னும் ரெண்டு நாட்கள் ஆகும்.

முத்து: சரியாப் போச்சு! ஹாண்டிகிராஃப்ட்ல வண்டி அனுப்பிச்சுட்டாங்க. இந்த ரேட்டில போனா, நிஜ கிருஷ்ணரையே கூட்டியாந்துரலாம்போலஇருக்கே. (சற்றுத் தள்ளிப் பின்னாலிருந்து பார்த்து) சும்மா சொல்லக்கூடாது. ஜோக்காத்தான் செய்யறே தாத்தா. ஒரு நாளைக்குச் சிரிக்குது. ஒரு நாளைக்குப் பொம்மை கன்னத்தை உப்புன்னு வெச்சுக்கிட்டு இருக்கு. கொஞ்சம், கொஞ்சம் வித்தியாசம் இருக்கு. இதுவரைக்கும் எத்தனை பொம்மை செஞ்சுருப்பே?


கிருஷ்ண ராவ்: எண்ணிக்கை இல்லே முத்து. ஆனா ஒவ்வொண்ணும் ஒவ்வொரு விதம்.

முத்து: சரி சரி. சீக்கிரம் முடி. (போகத் திரும்பியவன்) சொல்ல மறந்துட்டேனே! புது முதலாளி இன்னிக்கு வரார்.

''இவரோட உபன்னியாசத்துக்கு மட்டும் கூட்டம் அதிகம் வருதே! என்ன காரணம்?''

''போரடிக்கிற சமயத்திலே ப்ளேபாய் ஜோக்ஸ் கலந்து சொல்றாராம்!

-சதுர்வை



கிருஷ்ண ராவ்: எதுக்கு?

முத்து: என்னவோ புதுசா ஏதோ டிஸ்கஸ் பண்ணப் போறாங்களாம். என்ன என்னவோ மாறுதல் எல்லாம் கொண்டுவந்திட்டிருக்காரு. உங்களையும் பார்க்கணும்னு சொன்னாரு.

கிருஷ்ண ராவ்: என்னையா? ஆச்சரியமா இருக்கே?

முத்து: இன்னிக்குள்ள முடிச்சுக் கொடுத்துருங்க. அப்புறம் கஷ்டமர் வந்து கத்துவாரு.

கிருஷ்ண ராவ்: இன்னிக்கு முடியாதுப்பா!

(தம் வேலையில் ஈடுபடுகிறார். முத்து போகிறான்.)

● ● ●

பாகவதர்: அவர் தம் இஷ்டத்துக்கு, தம் ஸ்பீடுக்குத்தான் பண்ணுவார். ஆனா இனி கொஞ்சம். விக்கிரகத்தை எடுத்து அதனோட அழகில அவரே மோகிச்சுப் பாடவும் பாடுவார். (பாடுகிறார்)

கிருஷ்ண முகுந்தா முராரே — ஜெய
கிருஷ்ண முகுந்தா முராரே
கருணா சாகர கமலா நாயக
கனகாம்பர தாரி — கோபால
கனகாம்பர தாரி

(பாகவதர் பாடிக் கொண்டிருக்கும்போது கிருஷ்ண ராவ் முன்னணியில் பொம்மையை வைத்துக் கொண்டு ஆடிப் பாடிக் கொஞ்சுகிறார்.)

பாகவதர்: அப்படின்னு பாடிண்டு இருக்கச்சே முதலாளி வந்துட்டான். முதலாளி, அவ அப்பா செத்துப் போனப்புறம் ஃபாக்டரியை எடுத்து நடத்தறான். ஹார்வர்டில எம். பி. ஏ. படிச்சவன்.

● ● ●

(உள்ளே நுழையும் இளைஞன் ஜீன்ஸ் அணிந்து மெலிதான வெயில் கண்ணாடி அணிந்து கொண்டிருக்கிறான்.)

பிரகாஷ்: மிஸ்டர் ராவ்!

கிருஷ்ண ராவ்: வாங்கோ முதலாளி. என்னைப் பார்க்கணும்னு சொன்னேளாமே?

(முதலாளியுடன் கூட வந்தவர் இருவர் — மதனகோபாலும், ரத்தினமும் — அந்த இடத்தை டேப் வைத்து அளக்கிறார்கள்.)

பிரகாஷ்: மிஸ்டர் ராவ்! (பொம்மையைக் கையில் எடுத்து) இது ஒரு நாளைக்கு எவ்வளவு செய்யறீங்க?

கிருஷ்ண ராவ்: ஒரு நாளைக்கா? ஒரு வாரத்துக்கு ஒண்ணு முடிஞ்சதுன்னாப் பெரிசு.

பிரகாஷ்: ம்ஹூம்! ப்ரொடக்ஷன் ரேட் போதாது. (அளப்பவர்களைப் பார்த்து) என்னய்யா, பத்துமாய்யா ஸ்பேஸ்?

மதனகோபால்: சரியா இருக்கும் சார். மூணு மீட்டர் பை ஆறு மீட்டர்தானே கேக்கறீங்க?

பிரகாஷ்: மிஸ்டர் ராவ், நீங்க எத்தனை வருஷமா சர்வீஸ்ல இருக்கீங்க?

கிருஷ்ண ராவ்: முப்பது வருஷமா முதலாளி.

பிரகாஷ்: முதலாளி எல்லாம் வேண்டாம். பிரகாஷ்னு பேர் சொல்லிக் கூப்பிடுங்க. நான் உங்களைக் காட்டிலும் ரொம்பச் சின்னவன்.

கிருஷ்ணு ராவ்: அதனால் என்ன, பரவாயில்லே மொதலாளி.

பிரகாஷ்: இப்பப் பிரச்னே என்னன்னு, இந்த மாதிரிப் பொம்மைங்க ஒரு நாளைக்கு நூறு செய்ய முடியுமா?

கிருஷ்ணு ராவ்: ஒரு நாளைக்கு நூறு? சேச்சே, முடியவே முடியாது. என்னைப் போல் நூறு கிழவன் வேணும்.

பிரகாஷ்: வேண்டாம். ஆறு செய்ய முடியும்.

கிருஷ்ணு ராவ்: ஒரு நாளைக்கு யாருக்கு நூறு வேணும்?

பிரகாஷ்: அமெரிக்காவ கேக்கறுங்க. போன மாசம் ஒரு வெள்ளைக்கார அம்மா வந்துட்டுப் போச்சில்ல? அது உங்க பொம்மையைப் பார்த்துட்டு அப்படியே மோகிச்சுப் போயிடுச்சு. ஊருக்குப் போன உடனே ஆர்டர் போட்டிருச்சு. முப்பதாயிரம் பொம்மை ஒரு வருஷத்தில சப்ளை பண்ணணுமாம். அதும் டிரையல் ஆர்டர். அவங்க செயின் டிபார்ட்மெண்ட் ஸ்டோர் வெச்சிருக்காங்க.

கிருஷ்ணு ராவ்: என்னது! பைத்தியக்காரனா இருக்கானே! முப்பதாயிரம் கிருஷ்ணனை வெச்சுண்டு என்ன பண்ணப் போறு?

பிரகாஷ்: அது அவுங்க பாத்துப்பாங்க. இந்த ஷேப்ல ஸ்காட்ச் பாட்டில் செய்வாங்க. சென்டுப் பாட்டில் மூடி செய்வாங்க. அவுங்க திங்கிங்கே பெரிசா இருக்கும். இப்ப நமக்கு எக்ஸ்போர்ட் ஆர்டர் முதல் தடவையாக் கிடைச்சிருக்கு. இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடலாமா?

கிருஷ்ணு ராவ்: ஒரு நாளைக்கு நூறு? மரத்துக்குக் காட்டையே அழிக்கணும். சேச்சே! முடியாது. ஒரு நாளைக்கு ஒண்ணு பண்றதுக்கே தாவு தீர்ந்துரும்....

பிரகாஷ்: நீங்க பண்ண வேண்டாம் ராவ். அதுக்கு ஒரு மெஷின் வெக்கப் போறேம். என்னப்பா, லே-அவுட்டெல்லாம் பார்த்துட்டீங்களா?

ரத்னம்: கச்சிதமா இருக்கு சார். ஃபவுண்டேஷன் போல்ட்டை இங்க வெச்சிரலாம்.

கிருஷ்ணு ராவ்: இருப்பா, இரு. என்னது? மெஷினு?

பிரகாஷ்: ஆமா, உங்க பொம்மை ஒண்ணை எடுத்து வெச்சுக்கிட்டு ஒரு மோல்டிங் டூல் பண்றதுக்கு ஆர்டர் கொடுத்துட்டேன். அதை வெச்சுக்கிட்டு பிவிஸியில இன்ஜெக்ஷன் மோல்டிங் பண்ணிட்டு பிக்மெண்ட் குடுத்துட்டா, அப்படியே ஒரு பட்டனை அமுக்கினு, ஒரு கிருஷ்ணன் வருவாரு. ஒரே மாதிரி கிருஷ்ணன்! எட்டு அவர் ஷிப்டுன்னு வெச்சுக்கங்க. 480 நிமிஷம். சுமார் அஞ்சு நிமிஷத்துக்கு ஒரு கிருஷ்ணன்! ரிஜக்ஷன் எல்லாம் போக நூறு கிருஷ்ணன் தேறுது? என்ன மதன் கோபால், டூல் மேக்கர் என்ன சொன்னரு?



''என்ன அநியாயம்? இத்தனூண்டு ஜாங்கிரி ரெண்டு ரூபாயா?''
''பார்க்கச் சின்னதாக இருந்தாலும் அதுலேயே நீங்க மீந்து வச்சுடுவீங்க பாருங்க!''
—எஸ். விஜயா சீனிவாசன்

மதனகோபால்: ராப் பகலா தயாரிச்சுக்கிட்டு இருக்காருங்க. ஒரு மாசத்தில ரெடியாயிடும்னு சொன்னரு.

கிருஷ்ணு ராவ்: இருங்க, இருங்க. அப்ப நானு?

பிரகாஷ்: நீங்க வந்து, இந்த மாதிரி கைல பண்றதை நிறுத்திரலாம்.... ஆமாம், இன்னும் ரிடையராவதற்கு எத்தினி மாசம் இருக்கு உங்களுக்கு?

கிருஷ்ணு ராவ்: ரிடையரா? அப்படி ஒண்ணும் உங்கப்பா சொல்லலையே?

பிரகாஷ்: கமான் ராவ்! எல்லாரும் ஒரு நாள் இல்லே ஒரு நாள் ரிடையர் ஆய்த்தான் ஆகணும். ஒமக்கு என்ன வயசு?

கிருஷ்ணு ராவ்: அப்படி இல்லே. எங்கப்பா உங்கப்பாரு கிட்ட சின்ன வயசிலேருந்து, அறுபத்தெட்டு வயசுல செத்துப் போறதுக்கு முத நாள் வரைக்கும், கிராப்ட்ஸ் மன்னு இருந்தார். அவரை ரிடையர் எல்லாம் ஆகச் சொல்லலே. என்னை இருபத்தி நாலு வயசில கொண்டு சேர்த்துண்டார் உங்கப்பா.

பிரகாஷ்: அதெல்லாம் பழசு ராவ். இப்ப மோல்டிங் மெஷின் வந்தா நீங்க என்ன செய்ய முடியும்?

கிருஷ்ணு ராவ்: அது பாட்டுக்கு சப்க்கா சப்க்கான்னு பொம்மை பண்ணிண்டு இருக்கட்டும். எனக்கு ஒர் ஓரத்தில ஒரு மேஜை கொடுத்துடுங்கோ. மாசம் ஒரு கிருஷ்ணன்னு சுரண்டிச் சுரண்டிப் பண்ணிண்டிருக்கேன்.

பிரகாஷ்: இல்லையே! இந்த இடம் பூராவும் வேணுமே மெஷினுக்கு... ராவ், நீங்க ஒண்ணு பண்ணுங்க. அக்கவுண்ட்ஸ் செக்ஷன்ல போயி உங்க பி.எஃப்., கிராச்சுட்டி எல்லாம் எவ்வளவுன்னு பாக்கச் சொல்லுங்க. செக் வாங்கிட்டுத் தனியா ஒரு கடை திறந்திருங்களேன்! அதுக்கு நான் ஒத்தாசை செய்து தரேன்.

கிருஷ்ணு ராவ்: அதுகூடச் சரிதான். ஆனு, ரிடையர் ஆயிட்டா சம்பளம் வராது இல்லே?

பிரகாஷ்: சம்பளம் வராது. மொத்தமாப் பணம் வரும்.

(தொடரும்)

சமைத்து 4 மணி நேரங்கழித்துக்கூட மணம் கமழும் சூடான உணவை பரிமாற இக்லூ ஹாட் பேக் இப்பொழுது உங்களுக்கு உதவுகிறது



மறுபடியும் சூடவைக்கும் வேலையே இல்லை

சாதமானாலும் சரி, குழம்பு, கறி வகைகளானாலும் சரி, சமையலை சீக்கிரமே முடித்து இக்லூ ஹாட்பேக்கில் வைத்து மூடிவிடுங்கள். 4 மணி நேரம் கழித்து பரிமாறினாலும் உணவு சமைத்த சூட்டோடு, ருசியாகவும், சத்து மிக்கதாகவும் இருக்கும்.

நேரமும் எரிபொருளும் மிச்சம்...

ஏனெனில் உணவை மீண்டும் சூடாக்குவதை தவிர்க்கிறது. மேலும் உணவுச்சத்து இழப்பையும் இது தடுக்கிறது.

ஜெனரல் மர்ச்சன்ட்ஸ் கடைகளில் இக்லூ ஹாட்பேக் பல சைஸ்களில் கிடைக்கும். இன்றே ஒரு இக்லூ ஹாட்பேக் வாங்குங்கள். அதனால் பல விதத்திலும் லாபம். மேலும் அதிக ஓய்வு நேரம் கிடைக்கிறது

இக்லூ ஹாட்பேக்கின் திறமைக்கு ஒரு சான்று

தொடர்ந்து இரண்டு மாதம் இந்த ஹாட் பேக்கை சோதித்து பார்த்து சென்னை கேடரிங் இன்ஸ்டிட்யூட் கீழ்க்கண்ட சான்றுரையை வழங்கியுள்ளது.

''இது உஷ்ணத்தை நன்கு பாதுகாக்கிறது. அதே சமயம் உணவில் ருசிக் குறைவு ஒன்றுமில்லை. 8 மணி நேரத்திற்கு பிறகு கூட உணவின் மணத்தில் ஒரு குறைவும் ஏற்படவில்லை... இப்பெட்டிகள் திறன் மிக்கவை!"

iGLOO hotpack

மேட்டூர் பியர்ட்ஸெல் லிமிடெட்டின்

தரமான தயாரிப்பு

OBM 4857 TM

அதிர்ஷ்டம் வேறு அதிர்ஷ்டம்!

காந்தன்

குமார் பிறக்கும்போதே அதிர்ஷ்டத்தோடு பிறந்தவன். இல்லையென்றால் பெரிய தனவந்தரான சதானந்தத்தின் பிள்ளையாகப் பிறந்திருக்க மாட்டான். இருவாளர் சதானந்தத்துக்கு மூன்று மளிகைக் கடைகள் சொந்தமாக இருந்தன. மூன்றும் பெரிய கடைகள். அவருடைய மூத்த புதல்வர்கள் இருவரும் இரண்டு கிளைக் கடைகளைப் பார்த்துக்கொண்டார்கள். சதானந்தம் ஒரு கடையைப் பார்த்துக் கொண்டார். பெரிய பங்களா, கார், வேலையாட்கள் முதலிய எல்லா வசதிகளும் இருந்தன. அப்பாவும் அண்ணன்மார்களும் கடைக்குப் போய் விட்டால் கார் குமாரிடம் வந்துவிடும். அவன் காலேஜில் படித்துக் கொண்டிருந்தாலும் காரில் சுற்றின நேரம் போகத்தான் காலேஜுக்குப் போவான்.

சதானந்தம் தம் செல்வ மகனுக்கு ஓர் உயர்ந்த ரகச் சைக்கிளும் வாங்கித் தந்திருந்தார். குமார் சைக்கிளிலும் வேகமாகப் போவான். அதில் அவனுக்கு ஒரே குஷி.

அன்று பக்கத்து ஊரில் சந்தை. தேர்த் திருவிழா மாதிரி ஜனக் கூட்டம் நெரியும். குமாருக்கு அங்கு போய் ஜனங்களோடு கும்பலில் இடிபட்டுவிட்டு வருவதில் அலாதி உற்சாகம். சந்தை கூடும் நாட்களில் காலேஜில் கடைசிப் 'பீரியட்' மட்டம் போட்டுவிட்டுச் சந்தைக்குப் போய்ச் சுற்றி வருவான் குமார்.

அன்று காலேஜ் விடுமுறை நாள். குமாருக்கு 'குஷி' பிறந்து விட்டது. கார் 'சர்வீஸுக்கு' அனுப்பப் பட்டிருந்ததால் சதானந்தம் அவனைச் சந்தைக்குப் போக வேண்டாமென்று சொல்லி யிருந்தார். ஆனால் குமாருக்கு வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லை. அப்பா கடைக்குப் போன பிறகு அம்மாவைத் தாஜா பண்ணி ஒருவாறு உத்தரவு வாங்கிக்கொண்டு சைக்கிளில் ஏறிச் சந்தைக்குப் புறப்பட்டு விட்டான்.

சந்தையின் இரைச்சலையும், ஜன நெரிசலையும் நன்கு அனுபவித்துவிட்டு, உற்சாகமாக 'விசில்' அடித்துக்கொண்டே ஊர் திரும்பி



னான் குமார். வரும் வழியில் சுந்தர் கபே யைப் பார்த்ததும் அவன் நாக்கில் ஜலம் ஊறியது. சின்ன ஹோட்டல் ஆனாலும் அங்கே கிடைக்கும் இட்லி, சாம்பாருக்கும் ரவா தோசைக்கும் இணையே இல்லை என்பது மிகவும் பிரசித்தம்.

குமார் ஹோட்டல் வாசலில் சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே போய்த் தனக்குப் பிடித்தமான அயிட்டங்களை ஆர்டர் செய்து விட்டு, அவைகளின் வருகைக்காகத் தவம் செய்யலானான்.

ஒருவாறு டிபன் முடிந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தான் குமார். அவன் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தாள் அவன் தாயார்.

குமாரைக் கண்டதும் அவன் தாயாருக்கு ஆனந்தம் தாங்கவில்லை.

''அப்பா வருவதற்குள் நீ வந்து சேர்ந்தாயேடா, கண்ணே! உன் சைக்கிள் எங்கேடா, குமார்? நீ அதைப் பூட்டி வைக்கவில்லையா?'' என்று அவன் வழக்கமாகச் சைக்கிளை வைக்கும் இடத்தைப் பார்த்துக்கொண்டே கேட்டாள். ஹோட்டலில் டிபன் சாப்பிட இறங்கி வாசலில் சைக்கிளை விட்டு விட்டு வந்தது குமாரின் நினைவுக்குத் தட்டியது.

''அம்மா, நினைவு வந்து விட்டது. 'சுந்தர் கபே' வாசலில்தான் என் சைக்கிளை நிறுத்தினேன். இதோ ஒரு நொடியில் போய்க் கொண்டு வந்து விடுகிறேன். நீ கவலைப் படாதே!''

''புத்தம் புது சைக்கிளைப் பூட்டாமல் ஹோட்டல் வாசலில் வைத்துவிட்டு இத்தனை நேரம் கழித்துப் போய்ப் பார்த்தால் அது கிடைக்குமா? எல்லாவற்றுக்கும் கழுக விநாயகப் பெருமானை வேண்டிக் கொண்டு போ!''

அம்மாவுக்குப் பதில் சொல்வதற்காகக் குமார் அங்கே காத்துக் கொண்டிருக்கவில்லை. ஹோட்டலை நோக்கி ஓட்டமாய் ஓடினான்.

என்ன ஆச்சரியம்! 'சுந்தர் கபே' வாசலில் குமாரின் சைக்கிள் சற்று முன் அவன் விட்டு வைத்திருந்த இடத்திலேயே இருந்தது. குமாருக்கு ஒரே ஆனந்தம். சைக்கிளை எடுத்துக்கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டான். முதலில் ஞாபகமாகக் கழுக விநாயகர் சந்நிதிக்குச் சென்றான்.

அன்று சங்கட ஹர சதுர்த்தி. விநாயகப் பெருமானுக்கு அதியற்புதமாக அலங்காரம் செய்திருந்தார்கள். குமார் தன்னை மறந்து பக்தியோடு அவரைத் தரிசித்து, வலம் வந்து மெய்ம் மறந்து, சிறிது நேரம் தியானம் செய்து ஒரு ரூபாயைத் தன் காணிக்கையாகச் செலுத்திவிட்டு, வெளியே வந்தான்.

மீண்டும் அவனுக்கு ஓர் ஆச்சரியம் கோவில் வாசலில் காத்திருந்தது! அங்கு அவன் வைத்த சைக்கிளைக் காணவில்லை. கையோடு சைக்கிளின் பூட்டை எடுத்துக்கொண்டு வர மறந்த தன் மடமையை எண்ணி வருந்தினான். இப்போது வருந்தி என்ன பயன்! சைக்கிள் இருட்டுப் போனதனால் ஏற்பட்ட வேதனை ஒரு புறமும் கோபம் ஒரு புறமுமாக வாட்டி எடுத்தன! கோபம் கழுக விநாயகர் மீதுதான்! ஹோட்டல் வாசலில் தான் வைத்திருந்த சைக்கிளைத் திருட்டுப் போகாமல்

சரியான விடை:







1. இளமூ அ. கதிர்வேல் 2. உ. ராஜாஜி 3. கடலூர் கன்னியப்பன் 4. வெ. சீதாராமன் 5. கருர்லன்

மொத்தம் 19 வாசகர்கள் சரியான விடைகளை எழுதியிருந்தார்கள். அவர்களுள் பின் வரும் பத்துப் பேர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.300 பரிசுத்தொகையைப் பகிர்ந்து கொள்கின்றனர்:

(1) எஸ். ஆர். ரமணி, சி-59, பி.ஏ.பி. காலனி, பொள்ளாச்சி-642 003 (2) கே. வித்யா, VIIB, ஜூங்கிபாய் பெண்கள் மேல் நிலைப் பள்ளி, சௌகார்பேட்டை, சென்னை 79 (3) ரா. மகாலிங்கம், 46, எஸ். எம். வி. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 (4) மொ. ப. குமாரதாசன், 53-13, காமராசர் தெரு, கோம்பை போஸ்டு-626522 (5) பி. எஸ். ராகவேந்திரன், 123 ஸ்ரீராமுலு நகர், காவேரிப்பட்டிணம், 635 112 தர்மபுரி (மா.வ.) (6) மா. கலோசனு தங்கம், மலையம்பாளையம் போ.ஸ்டு, பாசூர் (ஆர்.எஸ்) ஈரோடு வட்டம், 638 156 (7) ஆர். பிரகாசம், நல்லாலம், கோவிலூர் போஸ்டு-604 404 வ.ஆ. (மா.வ.): (8) எஸ். சயது முகமது, 6-1, குலாம் மைதீன் தெரு, போடிநாயக்கனூர்-626 513: (9) கி. விஜயா 51-ஏ சஞ்சீவிராயன் கோயில் தெரு, கடலூர்-ஓ.டி. 607 003: (10) அ. சல்குல் ஜமால், 4-103, பெரிய தெரு, திருமங்கலக்குடி-612102.


துணுக்குப் போட்டி முடிவு

என்ஃபீல்ட்

மண்ணெண்ணை

பம்பு செட்டுகள்

- உறுதியானவை.
  நம்பிக்கையானவை.
  நெடுநாள் உழைப்பவை.
- சிறு விவசாயிகளுக்கு மிக ஏற்றவை: 3 ஏக்கர் வரை– 2 ஹார்ஸ் பவர் பம்பு செட்டு 5 ஏக்கர் வரை-3.4 ஹார்ஸ் பவர் பம்பு செட்டு
- மிக இலேசானவை—நிலம் விட்டு நிலம் எடுத்துச்செல்ல எளிதானவை
- அரசுக் கடன்களுக்கும் மானியங்களுக்கும் அங்கீகாரம் பெற்றவை.




என்ஃபீல்ட்

புல்லெட் மோட்டார் சைக்கிள் அளிப்பவர்கள்

தமிழ்நாடு அரசு பரிசு சீட்டு

கோலாகலமான
தீபாவளி குலுக்கல்



குதூகலமான
சிறப்பு முதல் பரிசு



ரூ. 10 லட்சம்

மூன்று சிறப்பு இரண்டாவது பரிசுகள் : ரூ. 1 லட்சம் வீதம்

மற்றும் ஏராளமான பரிசுகள்! தாராளமான வாய்ப்புகள்!!

மொத்தம்
3 வரிசைகள் :

குலுக்கல் நாள் :
20.10.1983

சீட்டின் விலை
ரூ. 2/-

ஆணையர், தமிழ்நாடு பரிசு சீட்டுத் திட்டம்
அரசினர் தோட்டம், சென்னை-600 002.

DIPR 304/83 (R)

காப்பாற்றி வைத்திருந்த பிள்ளையாருக்கு, அவருடைய கோவில் வாசலில் இருந்த சைக்கிளைக் காப்பாற்ற முடியவில்லையே! அவன் அன்று பிள்ளையாருக்கு நன்றி சொல்லத் தானே அவர் கோவிலுக்கு வந்தான்? அவன் மூக்கை உடைக்கிற மாதிரி இப்படி ஒரு காரியம் செய்து விட்டாரே! என்ன அநியாயம்!

குமாரின் மனப் புழுக்கத்தைச் சொல்லி முடியாது. போலீஸில் புகார் செய்யலாம் என்றாலும் அவன் அப்பாவின் யோசனையைக் கேட்டுத்தான் செய்ய முடியும். அவருடைய சுபாவம் குமாருக்கு நன்றாகத் தெரியும். சந்தைக்குச் சைக்கிளில் போனது, சைக்கிளைக் கோட்டை விட்டது, பிறகு அது பற்றிப் போலீஸில் புகார் செய்தது ஆகிய எல்லாவற்றுக்குமாக அவர் அவனை மிகவும் கடுமையாகக் கோபித்துக் கொள்வார். அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை.

சைக்கிள் பறிபோன கவலையோடு அப்பாவை எப்படிச் சந்திப்பது என்னும் திகிலும் அவனைப் பிடித்துக் கொண்டது. ஆனால் பிள்ளையார் கோவிலிலேயே எத்தனை நேரம் இருப்பது! வீட்டுக்குப் போய்த்தானே ஆக வேண்டும்! ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு வீட்டை நோக்கி நடையைக் கட்டினான்.

அப்பா வந்துவிட்டாரா என்பதையோசிக்கவே அவனுக்கு அவசியம் இருக்கவில்லை. கார் கம்பீரமாக வீட்டு வாசலில் நின்றது. அப்பாவை எப்படிச் சந்திக்கப் போகிறோம் என்னும் பயம் குமார் மனத்தில் இடம் கொண்டது. தயங்கியபடியே அவன் உள்ளே நுழைந்தான்.

''குமார் எங்கே போனான்?''

தம் மனைவியிடம் கேட்டுக் கொண்டே சதானந்தம் குமாரின் பக்கம் திரும்பினார். குமார் செயல் இழந்து போனான். ஹோட்டல் வாசலில் மறதியாக விட்டு விட்டுப் போன சைக்கிள் அதிர்ஷ்ட வசமாகக் கிடைத்தும் சுமுக விநாயகர் கோவில் வாசலில் உண்மையாகவே திருட்டுப் போய் விட்டதென்று அப்பாவிடம் எப்படிச் சொல்வது?

''ஏண்டா குமார்! பிள்ளையார் கோவிலிலிருந்து வருவதற்கு இத்தனை நேரமா?'' என்று அப்பா கேட்டதும் குமார் அதிர்ந்து போனான். அப்பொழுது அவனுக்கு மேலும் ஓர் அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது. அவன் கண்களை அவனால் நம்ப முடியவில்லை!

அவனுடைய சைக்கிள் அதனுடைய வழக்கமான இடத்தில் நின்று கொண்டிருந்தது! கோவில் வாசலில் சற்று முன் காணாமற் போன சைக்கிள் தன் வீட்டுக்கு எப்படி வந்தது?

''என்னடா குமார், யோசனை ரொம்பப் பலமாயிருக்கிறது? பிள்ளையார் கோவில் வாசலில் விட்டிருந்த உன் சைக்கிள் இங்கே எப்படி வந்தது என்றுதானே? சொல்கிறேன் கேள். 'சர்வீஸா'கித் தயாராயிருந்த காரை எடுத்துக் கொண்டு கோவிலுக்கு வந்தேன். வெற்றிலை நினைவுக்கு வரவே வாங்கச் சொல்லி அனுப்பிவிட்டுப் பிள்ளையாரை வணங்கக் காரை விட்டு இறங்கினேன். அப்பொழுது தான் நம்ம சைக்கிள் அங்கே ஓரமாக நிறுத்தி வைக்கப் பட்டிருப்பதையும், நீ மெய்ம்மறந்து கண்ணை மூடிக் கொண்டு தியானத்தில் இருப்பதையும் கவனித்தேன். சைக்கிள் பூட்டப்படாமலிருந்தது தெரிய வந்தது. உனக்குப் புத்தி கற்பிக்க எண்ணி அதைத் தூக்கி காரில் வைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தேன். நீ சந்தைக்குப் போனது, 'சுந்தர் கபே' வாசலில் சைக்கிளை விட்டு விட்டுப் பிறகு நினைவு வந்து ஓடினது எல்லாம் எனக்கு எப்படித் தெரியும் என்று யோசிக்கிறாயா? எல்லா விவரங்களையும் அம்மா சொன்னாள். அது இருக்கட்டும். நீ என்ன போலீஸ் கம்ப்ளெய்ண்ட் கொடுத்து விட்டாயா?''

குமாரின் முகத்தில் கொஞ்சம் அசடு வழிந்தாலும் அதில் பீதியில்லை.

''அப்பா! அதெல்லாம் ஒன்றும் இல்லை. நீங்கள் வந்திருப்பீர்கள், உங்களிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டு உங்களைக் கேட்டுக் கொண்டு போலீஸில் ரிப்போர்ட் செய்ய எண்ணினேன். என்னை மன்னித்து விடுங்கள்... இனிமேல்.....''

குமார் மேலே பேசுவதற்குள் சதானந்தம் குறுக்கிட்டு ''என்னிடம் மன்னிப்புக் கேட்டு என்ன பிரயோஜனம்? நம்ம வெள்ளிப் பிள்ளையாருக்குத் தோப்புக் கரணம் போடு!'' என்றார்.

குமார் அவர்கள் வீட்டுப் பூஜை அறையில் தேஜோமயமாய்ப் பிரகாசிக்கும் வெள்ளிப் பிள்ளையாருக்கு உற்சாகத்தோடு தோப்புக் கரணம் போட்டான். சற்று முன் பிள்ளையார் கோயில் வாசலில் அவரை இகழ்ந்து பேசியதற்கு உள்ளம் நெகிழ மன்னிப்புக் கோரினான்.

இன்னும் ஒரு விஷயம் குமாருக்குப் புரியாமலே இருந்தது. அப்பா ஏன் கோபித்துக் கொள்ளவே இல்லை?

அம்மா டிபன் கொடுத்தபோது அதுவும் புரிந்து விட்டது. அப்பாவுக்கு மிகவும் பிடித்தமான உருளைக் கிழங்கு போண்டாவை அம்மா செய்து வைத்து அப்பாவைச் சாந்த சொரூபியாக்கியிருக்கிறாள்!

ஒரு நாயும் ஒரு மனிதனும்

லா.ச.ராமாமிருதம்

கொட்டோ கொட்டென மழை. கோடை மழை. அதனுலென்ன? வீட்டினுள் நெருப்புப் பெட்டிபோல் அடக்கமாட இருந்தது. ஞாயிற்றுக்கிழமை. எல்லோரும் வீட்டில் இருந்தார்கள். பிற்பகல் மணி மூன்று. டிகாக்ஷன் போட்டாகி விட்டது. பால்காரனை எதிர் பார்த்தாகிறது.

சமையலறையிலிருந்து எண்ணெய்ச் சட்டி வாசனை கூரையைத் தூக்கிற்று. காரா சேவை போலும். மழைக்குக் கொறிக்க ஸ்பெஷலாக ஏற்பாடாகிறது.

வாசற் பக்கம் தம் அறையில் உட்கார்ந்து பெரியவர் முணு முணுத்தார். காராச்சேவ் அவருக்குக் கிடையாது. டாக்டரின் உத்தரவு. எண்ணெய் கூடாது. உருளைக் கிழங்கு கூடாது.

''அதுக்காக உங்களுக்கு ஆகல்லேன்னு மத்தவா வாயிலும் மண்ணு? அதுவும் நாலு குழந்தைகள் இருக்கிற இடத்துலே?''

நேசம் ரொம்பத் தேறிவிட்டாள். இன்னும் தேறிக் கொண்டே வருகிறாள். கட்சியே மாறிவிட்டாள் என்றே சொல்லலாம்.

இது மாதிரி சமயங்களில் ஐயாவுக்குத் தனியாக ஆரோரூட் பிஸ்கட். எரிச்சலை அதிகமாக்கிற்று.

ஹரி அவரைக் கேட்காமலே சுவரோரம் அவருடைய வாக்கிங் ஸ்டிக்கை எடுத்தான்.

''இப்போ என்னடா விஷமம்?''

''இல்லே தாத்தா, ரேழியில் ஒரு நாய் வந்திருக்கு. அதை விரட்டணும்.''

''அதன் வழிக்குப் போகாதே. இந்த மழையிலே எங்கே போகும்? விடு அதை.''

பையன் இரண்டு கணங்கள் தயங்கிப் பார்த்துவிட்டு வெளியே போய்விட்டான்.

அவன் வெளியேறிய மறு கணமே வள்ளென்று ஆரம்பித்து வலியில், ஊளையில் முடிந்த சத்தம் கேட்டது. காலால் உதைத்திருக்கிறான். சீற்றத்துடன் கிழவர் எழுந்து வெளியே வந்தார். பையன் ஓடிவிட்டான். ஆனால் நாயும் நகரவில்லை.

''இந்தாங்கோ அப்பா காப்பி'' — ஜானகி டம்ளர் அடியில் டபராவுடன் கையில் கொடுத்துவிட்டு உள்ளே போனாள்.

காப்பி ஆவி பறந்தது. மண மயக்கம். ஜானகி எப்போதுமே காப்பி ஸ்பெஷலிஸ்ட். அது பெரிதல்ல. முதல் நாட்டுப் பெண் அவர் மேல் விசுவாசமும் மரியாதையும் உள்ளவள். காராசேவை யாருக்கும் தெரியாமல் ஒரு சின்னப் பொட்டலம் கட்டிக் கையில் அழுத்தி விட்டுப் போவாள்.

'காப்பி கூடாது. அதுவும் கொதிக்கக் கொதிக்கச் சாப்பிடவே கூடாது. — அசரீரி காதில் ஒலித்தது. Oh! d3mn you Doctcr மனத்தில் வைதுகொண்டே காப்பியை உறிஞ்சினார். முதல் முழுங்கு உள்ளே சென்றதுமே காராசேவை தூண்டிவிட்ட கோபம் குறைந்து போயிற்று. நாய் மேல் கவனம் சென்றது.

டர்ட்டிதான். எனக்குக் கொஞ்சம் நாயைப் பற்றித் தெரியுமே, வெள்ளைக்காரன் ராஜ்யத்தில்! குரைப்பாக ஆரம்பித்த சத்தத்தில் த்வனி ஒரு மாதிரியாக வேறுபட்டுத் தெரிந்தது. என்றாலும் அது எத்தனாவது தலைமுறையோ? ஊளை என்னவோ வகுப்பில் கடைசிப் பெஞ்சி மாணக்கர் வரிசையைச் சேர்ந்ததாகத்தான் காட்டிக் கொடுத்து விட்டது. மழை நின்றதும் சனியன் தொலையட்டும். ——



ஆனால் மழை நின்றதும் அது தொலைய வில்லை.

அடுத்துப் பிளந்த வெய்யிலிலும் தொலைய வில்லை. மறுநாளும் தொலையவில்லை.

அதற்கடுத்த நாள்,

அதற்கும் அடுத்த நாள்

—நோ.

அது போகவில்லை.

போகவே இல்லை.

ஆரம்பத்தில் கிழவர் ரொம்பப் பாராட்ட வில்லை. அதைப் பற்றி அதிகம் நினைக்கவில்லை. நேரமில்லை.

காலை வேளையில் ஏதோ கொஞ்சம் பூஜை புனஸ்காரம், காயத்ரி, சுந்தர காண்டம், பிறகு இலை போட்டாச்சு என்று அழைக்கும் வரை, ஜேம்ஸ் ஹேட்லி சேஸ். பையன்கள் ஏன் பாழாப் போக மாட்டான்டன்? இத் தனைக்கும் அட்டைப் பட அரை நிர்வாண போட்டோவுக்கும், உள் கதைக்கும் சம்பந்த மில்லை. கதையும் அதுபற்றி நடக்கிற பிர சாரப்படி அவ்வளவு ஆபாஸமாகத் தெரிய வில்லையே? எவ்வளவு சுவாரஸ்யமாகக் கொண்டு போறான்! இந்தச் சமயத்துக்கு இதுவும் இல்லாட்டா...

அப்புறம் உண்ட களைப்பு தொண்டருக்கும் உண்டு. கண் அசத்தல். தூக்கம். தூங்கி எழுந்தவுடன் காப்பியுடன் மூத்த நாட்டுப் பெண்ணுக்குக் காத்திருந்தால், ஓட்ஸ் கஞ்சி யுடன், படகு மாதிரி உடம்புடன், நேசம் பிரசன்னம். தர்க்கம், சண்டை.

''இதோ பாருங்கோ, என்னைக் கடிஞ்சு பிரயோஜனமில்லை. அந்தந்த வயசுக் கேத்தபடி அவா அவா நடந்துக்கணும்.''

''கெட் அவுட்! எனக்குப் புத்தி சொல்ல வந்துட்டாள்.''

''இதோ போறேன். உங்க இங்கிலீஷ் எனக்கு வருமா? முதலில் தமிழே வருமா?'' வாய், வாய்.

இப்படித்தான் ஒரொரு நாளாய்ப் போய்க் கொண்டிருக்கிறது. ஓட்ஸ் கஞ்சியாம்! கொட்டிவிடலாம் போல் ஆத்திரம் வந்தது. ஆனால் அதைக் கொட்டி விட்டால் இரவு ஏழு, எட்டு வரை இடை ஆகாரம்?

தம் ஆத்திரத்துக்கு வடிகால் தேடுகையில் நாய் மேல் அவர் பார்வை விழுந்தது.

முதன் முதலாகப் பார்ப்பது போல், கொஞ்சம் குழப்பமாகத்தான் இருந்தது. அறைக்கு வெளியே சொகுஸாகப் படுத்துக் கொண்டு, தலையைத் திருப்பி, முதுகில் தன்னைக் கடிக்கும் உண்ணியை அது கடித்துக் கொண்டிருந்தது. கடிக்க முயன்று கொண் டிருந்தது.

கிழவர் வெளியே வந்தார்.

''உஷ்! உஷ்!''

அதன் கவனம் கலைந்து, அவரைத் திரும்பிப் பார்த்தது. அது படுத்திருந்த நிலையிலேயே வால் லேசாக ஆடிற்று. கைத்தடியைக் கொண்டு வந்து பலவந்தமாகத் தள்ளிய பின்னர்தான் வெளியே போயிற்று.

பெரியவர் கொஞ்ச நேரம் ராமஜெயம் எழுதினார். லக்ஷம் எழுதினால் மடத் தில் பொற்காசு வழங்குகிறார்களாமே! தற்செயலாக நோட்டுக்கிலிருந்து முகம் நிமிர்ந்தால் நாய் பழைய இடத்தில் படுத்துத் தன் முதுகைக் கடித்துக் கொண்டிருந்தது. தம் தலையில் அடித்துக் கொண் டார். இருக்கிற வானரங்



களின் தொந்தரவு போதாமல், இதனிடமும் மாட்டிக் கொண்டேனு?

ஆம். பையன்கள் அதற்கு ரோஸி என்று பெயரும் சூட்டியாகி விட்டது. பிறகு அது போவது ஏது?

ஒரு தடவை தடியால், அதன் வயிற்றில் இலேசாய்த் தட்டினர்.

''உர்ர்ர்ர்—''

உஷாராய்த்தான் இருக்கணும்.

ஒண்டவந்த பிடாரி கதையாய்ப்போச்சே!

அதன் மேலே அவருக்குக் கரிப்பு உண்டாகி விட்டது. உனக்காச்சு எனக்காச்சு கரிப்பு.

'வாயில்லாப் பிராணி. அதை ஏன் இப்படிக் கறுவறுர்! முதலில் இடம் கொடுத்ததே இவர்தானே!'

'வீட்டுக்குக் 'காவலாக இருந்துவிட்டுப் போறது!'

ஆனால் அது அப்படி ஒன்றும் காவலாக இல்லை. ஒரு நாள் எருமை மாடு உள்ளே வந்து, நந்தியாவட்டை, செம்பருத்தி, கறிவேப்பிலைக் கன்று எல்லாவற்றையும் தீர்த்துக் கட்டிக் கொண்டிருக்கிறது. இது பாட்டுக்குத் தன் முதுகைக் கடித்துக் கொண்டிருந்தது.

இன்னொரு நாள் பக்கத்து வீட்டில், பாதி இரவில் ஒரே ரகளை.

'பிடி! பிடி!'

யாரோ ஓடுகிற சத்தம், துரத்துகிற சத்தம். அவர்கள் வாசற் பக்கத்து ஜன்னல் கம்பியை வளைத்து விட்டிருந்தது.

ரோஸிக்கு ஹாய்யாக இந்த வீட்டு வாசற்படியில் தூக்கம் கலையவில்லை. அதெப்படி அந்நியனின் மோப்பம் கூடவா தெரியாமல் போய்விடும்!

வந்த பதினைந்து நாட்களுக்கெல்லாம் ரோஸிக்கு மேனி மினுமினுக்க ஆரம்பித்து விட்டது.

ஹரிஷ் இரவு தவறாமல் எறியும் மோருஞ்சாதமும், மருமகள்மார்கள் முறை போட்டுக் கொண்டு சமைப்பதில் இஷ்டப்படிக்குவடித்து இஷ்டப்படி மிஞ்சும் சாதமும் — யாரும் பழையது தொட மாட்டார்கள். குடல் கறுத்துவிடும். அரிசி விற்கும் விலை, நடக்கும் அக்கிரமம் பாபத்தில் சேர்ந்தது. மூட்டை கொண்டு வருகிறான். மொட்டை மொட்டையாக அளக்கிறான். 45 படியாக ஆக்கிவிட்டுப் போய்விடுகிறான்.

அப்புறம் மாதம் முதலில் ஒரு குறிப் பேட்டை, இந்த வீட்டுக்கு ஒதுக்கியிருக்கும் பக்கத்தில் திறந்து, கையில் கொடுத்துவிட்டுப் பக்தியாய் நிற்கிறான்.

அதில் கடைசி வரிமேல் கண் பட்டதுமே வயிற்றைத் திருகுகிறது.

அவருக்கு வயிறு காயக் காய ரோஸி தடித்துக் கொண்டே வருவது சகிக்கவில்லை.

இதைப் பற்றி ஏதேனும் செய்தாகணும். வீட்டை விட்டு இதைக் கிளப்பியாகணும். சாகடிக்கணும்!

அதைக் கொல்லுகிற கோபம் உள்ளே குமுறியது என்னவோ வாஸ்தவம். ஆனால் சுபாவமாக உள்ளே கபடு ஒன்று உஷார்ப் படுத்தித் தடுத்தது.

ஓர் அடியில் சாகாது.

போட்டால் மண்டையில் போடணும்.

என்மேல் பாய்ந்து விட்டால் நான் அதோ கதி.

தவிர, வீட்டில் ஒருத்தரும் இல்லாத சமயம் பார்த்து அதைச் செய்தாகணும். அப்படியே காரியத்தில் வெற்றி பெற்றாலும் அப்புறம்?... ரொம்ப அருவருப்பான சமாச்சாரம். என்னால் குழி தோண்ட முடியுமா? வெளியே தூக்கிக் கொண்டு போக முடியுமா? எங்கே போவது? How I hate you ஆனால் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லையே! அதைக் காலால் உதைக்கக் கூட அருவருப்பாக இருந்தது. பேரன்மார்கள் அதைக் குளிப்பாட்ட முயற்சிகள் பலிக்கவில்லை. எப்படியோ அவர்கள் பிடியிலிருந்து நழுவி ஓடிவிடும்.

''ரோஸி! ரோஸி!'' துரத்திக் கொண்டு ஓடுவார்கள். அது குரைத்துக் கொண்டு ஓடும். அது அப்படியே ஒரு புது விளையாட்டாக மாறிவிடும்.

பையன்கள் ரோஸிக்கு ''ஜவ்வு''க்கு ஏற்பாடு பண்ணிக் கொண்டிருப்பதாக எப்படியோ புரைசல் கண்டுவிட்டது. ஈசுவரா, இதென்ன சோதனை மேலும் மேலும்! அனாச்சாரம் உச்ச கட்டத்துக்கு வந்தாச்சு.

இதன் பேர்தான் கலியா? எங்கேனும் முதியோர் இல்லத்தில் சேர்ந்து விடலாமா? அதற்குக் கூடத் தகவல் பிள்ளைகள்தான் தேடித் தரணும். அங்கே போனாலும் எப்படியோ? நரியூருக்குப் பயந்து புலியூருக்கு—

தெரியுமா?



- 'பொய்க்கால் குதிரை' படத்தில் பிள்ளையார் பேசுவது போன்று வரும் காட்சியில் பிள்ளையாருக்குக் குரல் கொடுத்திருப்பவர் இரேஸி மோகன்.

- கார்ட்டூனிஸ்ட் நடனம் சென்னை கண்காட்சிகளில் அமைத்த 'அதிசய உலகம்' பற்றி அறிந்த மதுரையில் உள்ள குழந்தைகள் நல டிரஸ்ட் அவரை மதுரையில் நிரந்தரமாக ஒரு 'அதிசய உலகத்தை' அமைத்துத் தரும்படி கேட்டுக் கொண்டுள்ளது.



ஒரு நாய் காரணமாக மனம் இப்படித் தவிக்குமா? தவிக்கணுமா? மனம் என்பது எங்கே அடங்குகிறது. என்னதான் காயத்ரி பண்ணினாலும் ராமஜெயம் எழுதினாலும் அதற்குப் பதிலாக,

வெறுப்பு, வெறுப்பு, வெறுப்பு...

'எனக்குப் பயமாயிருக்கே!'

''என்ன திடீர்னு 'பக்'கென இளைக்கட்டேள்? டாக்டரிடம் போகலாமா?'

'இளைக்காமல் என்ன செய்யும்? அதான் பாவிகள் எல்லோரும் சேர்ந்துண்டு பட்டினி போடறேளே! மிச்சத்துக்கு இந்த நாய் வேறு என்னைப் பிடுங்கித் தின்கிறதே!'

அந்த நாளில் எட்டுகண்ணும் நான் விட்டெறிஞ்சு என்ன பிரயோசனம்; ஒரு நாயை வீட்டை விட்டுத் துரத்த எனக்கு இப்போ துப்பு இல்லே!


''இதோ பாருங்கோ. வயசானவாளுக்குத் தனியாக ஒரு சுயநலம் இருக்கு. நம் இஷ்டப்படி சூரியன் சாயணும், மங்கணும்னு அது ஒரு காலத்தில் நடந்தது. இப்போ நாம் விட்டுக்கொடுக்கிற காலம். எனக்குக் கூடக் கிராமத்துக்குப் போயிடலாம்னு ஒரொரு சமயம் தோணாமலா இருக்கு? ஆனால் உங்க உடம்புக்கு, ஏதாவது நேர்ந்ததுன்னு, உடனே கவனிக்க அங்கே என்ன வசதி? ஒரு கறிவேப்பிலே வாங்கிவர எதிர்த்தாத்து ராமுவையோ பக்கத்தாத்து சேஷியையோ எத்தனை நாட்கள் நம்பிண்டு ஓட்ட முடியும்? பொழுது போகல்லேன்னு நம் ரெண்டு பேர் சண்டைதான்—''

அவளுடைய நச்சரிப்புத் தாங்க முடியாமல் டாக்டரிடமும் போயாச்சு. டாக்டர், நன்றாகப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு:

'அல்ஸர் கேஸுக்குப் பொதுவாக எந்த விதமான கவலையும் இருக்கக் கூடாது. இந்த நோய்க்குக் காரணம் பாதி அனுவசியக்கவலே. இவர் எதைப் பற்றி ஏன் ஓர்ரி பண்ணிக்கிறார்? சார்! நீங்கள் எதிலுமே இனிமேல் பட்டுக்காதீங்க. அப்படி உங்களுக்குத் தாங்கற வயசு இல்லே. ஏதோ மருந்து மாத்திரை, முக்கியமா டயட்—இதிலே வண்டியை ஓட்டிக்கிட்டுப் போக வேண்டியதுதான். உத்தியோக முறையில் ஊர் ஊராப் போய் ஒரே கோங்குரா சட்னியும், மிளகாய்ப் பழமுமா வெளுத்து வாங்கிட்டீங்க. அப்போ வயது தாங்கிச்சு. ஆனால் அதனுடைய எஃபெக்ட் விடுமா? பெரியவங்களுக்கு அதுக்கு மேல நான் சொல்றதுக்கு இல்லே'—

ஆமாம், நீ சொல்ல இன்னும் பாக்கியிருக்கா வேறே?

இன்றே வெய்யிலின் கடுமை தனி. பிரளய சமயம் பதினெட்டு சூரியன்கள் காயுமாமே. நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லே. இந்த ஒன்றின் கடுமையே இப்படியானால்? இன்று பகல் தூக்கம் அவரை மறுத்து மற்றவர் சகலை ஆட்கொண்டுவிட்டது. நாட்டுப் பெண்கள், அவரவர் அறையில், பாட்டி கூடத்தில். ரோஸி வழக்கம் போல் அவருடைய வாசற்படியெதிரில் வீற்றிருந்தது. அதற்கும் உறக்கம் வரவில்லே. வெய்யில் அதன் விலாவில் இரைத்தது. பெரியவர் வயிற்றுள் ஒநாய் திரித்தது.



''நகைக்கடைக்காரர் குலாப் சந்த் ஷோகல் சந்த் வீடு எங்கே இருக்குதுங்க?''

''பக்கத்து சந்துலே விசாரிங்க!''

—சௌமியா தேவி

அன்று அவருக்குச் சாப்பாடு சரியாக அமையவில்லே. கலத்துக்கு ஏதோ கொஞ்சம் பயத்தம் பருப்பு—இருக்கிற தக்காளியில் ரஸமென்று ஒரு தண்ணீர், கண்டைத்துக் கொட்டின பீன்ஸ். தாளிதமே ஆச்சா என்று சந்தேகம். அதுவும் கொஞ்சம் தான். மார்க்கெட்டுக்குப் போகவில்லையாம்.

இந்த லக்ஷணத்துக்குச் சிறைக் கைதி போல், அறையில் தனிச்சாப்பாடு. ஐந்து வருடங்களாக இப்படித்தான் நடக்கிறது.

இப்போது நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேனே, இது வாழ்வா? இது வாழ்க்கைக்கே ஓர் அவமானம். இப்படி வாழ்ந்து தான் ஆகணுமா?

இதோ எழுபதையும் தாண்டிவிட்டு இன்னும் ஏன் இருக்கிறேன்? பிறத்தியாருக்கும் சுமை, எனக்கும் சுமை. புத்தியுடன் உடம்பு ஒத்துழைக்கவில்லே என்கிற போது இனி இங்கே என்ன வேலே?

இனி செய்வது என்ன?

புன்னகை அரும்பிற்று. எண்ணம் சாவோடு சாதாரணமாகத் தான் விளையாட ஆரம்பித்தது. இந்த டாக்டர் தூக்க மாத்திரைக்கு இடம் தரவே மாட்டார்.

காலி வயிறு உறுமிற்று. ஒநாய்.

ஜன்னலுக்கு வெளியே கானல் நடுங்கிற்று. தரையில் பூவரச மரத்திலிருந்து உதிர்ந்த இலைச்சருகுகளும், பூக்களும் மெத்தையிட்டிருந்தன.

அதைப் பார்த்ததும் ஏதோ புதிரான புன்னகையில் கிழவரின் கீழுதடு பிதுங்கிற்று. இனி பொறுக்க மாட்டேன். நான் படும் பாடு உலகர் நவிலும் பஞ்சதான் படுமோ? ஒரு பாட்டின் அடி — எந்தப் பாட்டு என்று ஞாபகம் வரவில்லே — திடீரென எண்ணத்தில் சிறகடித்துக் கொண்டு பறந்தது.

பெருமூச்செறிந்து, ஏதோ முடிவுகண்டு எழுந்தார். குறுக்கே படுத்திருக்கும் ரோஸியைத் தாண்டிக் கொண்டு சமையற்கட்டுக்குப் போனார். இந்தப் பக்கம் சாதாரணமாகச் சற்றுத் தீவிர காவலாகத் தான் இருக்கும். பேரப் பையன்களின் நோண்டலுக்குப் பாது

காப்பாகச் சமையலறைக் கதவு பூட்டியே இருக்கும். பூனை, அணில், காக்கை உபத்திரவம் வேறு.

ஆனால் இன்று பேரன்மார்கள் பள்ளிக்கூடத்துக்கு டப்பா தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள்.

பிள்ளைகள் ஆபீஸ். அதுபற்றிக் கேட்க வேண்டாம். மூத்தவன் பூப்பந்து ஆடிவிட்டு வருவான். அடுத்தவன் கிளப்பில் சீட்டாட்டம். தேய்பிறை வளர்பிறை போல் அது ஒரு பிழைப்பு. சம்பளத்துக்கு மீறிய சகவாசம். மூன்றுமவன் சினிமாப் பைத்தியம். இதெல்லாம் பற்றி இனி எனக்கு ஆவது ஒன்றுமில்லை.

ஆச்சரியம்! சமையலறைத் தாழ்ப்பாளில் பூட்டு தொங்கவில்லை. மெதுவாகத் திறந்து உள்ளே சென்றார்.

சமையல் மேடைமேல் என்ன இருக்கிறது? இரண்டு மூன்று ஏனங்கள் மூடியிருந்தன. ஒன்றைத் திறந்தால் ஒரு தட்டில் உருளைக்கிழங்கு வெங்காயம் போட்டு ரோஸ்ட். ஓரத்தில்' செவசெவவென்று தேங்காய்த் துவையல் ஒரு சிறு உருண்டை. கிழவர் வாயில் ஜொள்ளு கொட்டிற்று. ஈயச் சட்டியில் ரஸம். ஆனால் ஆழத்தில் வண்டல் தான் இருந்தது. மைசூர் ரஸம் போலிருக்கிறது. தனியா மணத்தைப் பார்த்தால்.


அலுமினிய அடுக்கு நிறைய சாதம். அதிலேயே நெய்க் கிண்ணத்தைப் பதித்திருந்தது. அலமாரியிலிருந்து ஒரு பேஸின் எடுத்து வைத்துக் கொண்டு, சாதத்தைப் போட்டு அதன்மேல் அப்படியே ரஸ வண்டலைக் கவிழ்த்துக் கொண்டார். நெய்க்கிண்ணத்திலிருந்து நெய் விழுதை வழித்துப் போட்டுக் கொண்டு பிசைந்தார்.

அள்ளி அள்ளிப் போட்டுக் கொண்டார். இப்படிச் சாப்பிட்டு எத்தனை நாளாயிற்று! நல்லாத்தான் பண்ணியிருக்கான்.

கொல்லைக் கதவில் என்ன சப்தம்? யார் வேணுமானாலும் வரட்டும். முரட்டுத் தைரியம். கதவு பிராண்டல். போய்க் கதவைத் திறந்தார்.

நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு நின்றது கொத்தவால் ரோஸி. 'வா, நீயும் வா'.

அதற்கும் கொல்லைப்படியில் கணிசமாக ஓர் உருண்டை வைத்தார்.



பிசைந்தது அதிகமாகப் போய் விட்டது. எப்படியானு என்ன, அப்பாடா வயிறு ரொம்பித்து. இது மாதிரி சாப்பிட்டு எத்தனை நாட்களாச்சு!

தொண்டையும் வயிறும் கபகப.

வாஷ்பேஸினில் கையை அலம்பிக் கொண்டு ஓசைப்படாமல் தம் அறைக்குத் திரும்பி மெத்தையில் படுத்துவிட்டார்.

மாலைக் காற்று கிளம்பி இமைகளின் மேல் குளிர்கையில் இமைகள் அந்த சுகத்தில் மூடிக் கொண்டன. தூக்கத்தில் அல்ல.

அடுத்தாற்போல்—

—ஏதாவது நேரத்தான் போகிறது. மாலையிலோ அல்லது பாதியிரவுக்குள் நிச்சயம்.

ஆமாம், இனி இருந்து என்ன ஆகணும்? என் மீது உண்மையான அன்பு, பாசம் வைத்தவர்கள் எல்லாம் புறப்பட்டுப் போயாச்சு.

டாக்டர், நீங்கள் நல்லதுதான் சொல்கிறீர்கள். ஆனால் ஒரு மனிதனுக்கு மூக்கணாங்கயிறு போட்டு ஆயுசுக்கும் நடத்திப் போனால் எப்படியிருக்கும்?

ரோஸி அருகில் வந்து அவரை நக்கிக் கொண்டிருந்தது. ஆச்சரியத்தில், அருவருப்பில், கோபத்தில் எழுந்து உட்கார முயன்றார். ஆனால் ரோஸியின் கனம் அழுத்திற்று.

அட, உனக்கு இவ்வளவு துணிச்சல் வரும்படி என் கதியாகி விட்டதா? முதலில் எண்ணம் அப்படித் தோன்றினாலும் அது மாறுவது தனக்கே தெரிந்தது.

நன்றி செலுத்துகிறாயா? அல்லது இது உன் பழிவாங்கலா? கடைசியில் வெற்றி யாருடையது என்ற வெற்றிக் கொக்கரிப்போ? ஒரே குழப்பமாகி விட்டது.

ஆனால் ரோஸி, அன்று ஓரிரவு, இருட்டில் உன்னை நான் மிதித்து விட்டபோது நீ வீல்வீல் என்று கத்திக் கொண்டு ஓடினாயே தவிர, என்னைக் கடிக்கவில்லையே! நீ ஒரு பிடுங்கு பிடுங்கினால் கொத்தோடு என் சதை— இப்போ நினைத்துப் பார்க்கக் கூட அஞ்சுகிறது. அப்பவே நீ என்னிலும் எவ்வளவு பெரிதாகி விட்டாய்! முதுகைத் தடவிக் கொடுத்தார்.

உண்மையிலேயே ஆச்சரியமாக இருந்தது. அவ்வளவு நெருக்கத்தில் வயதில் வெள்ளி படர்ந்த கண்களுக்கு ரோஸி விசுவரூபம் எடுத்த மாதிரியிருந்தது.

எது எப்படியானாலும் ரோஸியின் விழியழகு பற்றிச் சந்தேகமேயில்லை. உலகத்தின் துயரத்தையே தாங்கிக் கொண்டிருக்கும் அந்த விழிகளின் அபாரத்தை, கம்பீரத்தை முதன்முறையாகத் தரிசனம் பண்ணுவது போல் இருந்தது. துயரக் கடல்கள்.

''வாங்கோ! வாங்கோ! இந்த அதிசயத்தை பார்த்தேளாடி!'' நேசத்தின் கூக்குரல் கிழவருக்குக் கேட்டதாகத் தெரியவில்லை.

அவருடைய கண்களை ரோஸியின் கண்கள் கட்டின. கண்ணோடு கண் பேசிற்று. இருவருக்குமிடையே ஒரு விறுவிறுப்பு பாய்ந்தது.

அன்று யுதிஷ்ட்ரனைத் தொடர்ந்த என் எஜமான் போலும். இன்று உன்னை நான் அழைத்துப் போகத்தான் வந்திருக்கிறேன்.



✕ முக்குடையின் கீழ் மகாவீரர்

தீபங்குடி தீர்த்தங்கரர்

ஆனந்தி

ஜினர் என்றால் ஜயித்தவர் என்று பொருள். ரத கஜ துரக பாதாதி சைன்யங்களோடும் ஆயுதங்கள் தாங்கியும் இன்னொருவரை வெல்லும் வெற்றியை இது குறிப்பிடவில்லை. ஜைன சமயத் துறவிகள் வெளியுலகை வெற்றி கொள்வதை விரும்புவதில்லை. ஆனந்த சொரூபத்தை ஆத்மா அடைய முடியாமல் தடுக்கும் ஐம்புலன்களை அடக்கி வெற்றி கொள்வதே அவர்களுடைய குறிக்கோள்.

இந்திரிய நிக்ரகம் செய்து கேவல ஞானம் பெற்று மக்களுக்கு உபதேசம் செய்த 24 தீர்த்தங்கரர்கள் இருந்ததாக ஜைனர்கள் நம்புகின்றனர். தீர்த்தங்கரர் என்றால் நீரிலிருந்து கரையேற்றுபவர் என்று பொருள்.

ஜைன மதத்தின் ஒரு தனித் தன்மை என்னவென்றால் அவர்களுடைய மதத்தை விட அறங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்திருப்பதுதான். ஆதிநாதர் என்று அழைக்கப்படும் ரிஷப தேவர் மொழியை அளித்தாராம். இதன் வரி வடிவமே பிராமி. பயிர்த் தொழில் செய்து வாழக் கற்றுக் கொடுத்தவரும் இந்த ஆதிநாதரே என்று ஜைனர்கள் கூறுகிறார்கள். இவருடைய வழியில் வந்த இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களை ஜைனர்கள் சித்தர் என்றும் அருகர் என்றும் போற்றி வழிபடுகிறார்கள். ரிஷபதேவருடைய மகன் 'ஜடபரதர்' என்றும், அவர் பெயராலேயே பாரத நாடு என்று பெயர் பெற்றதாகவும் கருதுகிறார்கள்.


இருபத்து இரண்டாவது தீர்த்தங்கரரான நேமிநாதர் என்பவர் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவுடைய நெருங்கிய உறவினர் என்றும் கூறுகிறார்கள். கிருஷ்ண பகவானை திராவிடர் என்றும் தங்கள் 'நிஷ்காம்ய கர்மம்' என்னும் கொள்கையையே அவர் போதித்தார் என்றும் கூட உரிமை கொண்டாடுகிறார்கள்.

கடைசித் தீர்த்தங்கரரான வர்த்தமான மகாவீரர் ஏறத்தாழ புத்த பகவான் வாழ்ந்த காலத்திலேயே பாரத நாட்டில் உலவி வந்தார். இவர் எடுத்துச் சொன்ன கொள்கைகளில் மிகவும் முக்கியமானது அகிம்சை.

தவ முனிவர்களைத் தவிர இல்லறத்தார்களுக்கும் ஜைன மதம் வழி காட்டுகிறது. துறவிகளைப் பேணுவது இல்லறத்தாரின் தலையாய கடமையாகும். தவிர ஐந்து முக்கிய கோட்பாடுகள் உண்டு. கொல்லாமை, பொய் கூறாமை, மது அருந்தாமை, பிறன் மனை நயவாமை, அதிகப் பொருள் விரும்பாமை. 'பரிமித பரிக்ரகம்' என்ற கொள்கை மூலம் மக்கள் தாமே விரும்பி ஏற்கும் சோஷலிஸத்தைப் போதித்தார்கள் ஜைன முனிவர்கள். 'மனிதன் தெய்வத் தன்மை பெற முடியும். அதற்குப் புலனடக்கம் ஒன்றே வழி'' என்று கூறுகிறார்கள்.

புலன்களை வெற்றி கொள்வது மகத்தான வீரமும், நெஞ்சுறுதியும் படைத்தவர்களாலேயே முடியும். ஆகையால் இயல்பாகவே தேக திடமும், நெஞ்சுறுதியும், அஞ்சாமையும் வாய்க்கப்பெற்ற ரண வீரர்களான க்ஷத்திரியர்களாலேயே கடுந் தவம் மேற்கொண்டு உடலுக்கு நேரும் இன்னல்களைத் தாங்க முடி

✕ ஜைன சமயச் சின்னங்கள்:



யும் என்று நம்புகிறார்கள். தீர்த்தங்கரர்கள் அனைவரும் அரச குலத்தில் பிறந்தவர்கள்.

தமிழ்நாட்டில் பற்பல இடங்களில் சமணர்களுடைய சைத்யங்களும் கோவில்களும் காணப்படுகின்றன. தஞ்சை மாவட்டத்தில் உள்ள தீபங்குடியில் ஆதி நாதரான ரிஷபதேவருக்கு ஒரு கோவில் இருக்கிறது. சமணர்கள் கோவில் வித்தியாசமாக இருக்குமென்று தோன்றுகிறதல்லவா?

கோபுரத்து நிலைகளில் தீர்த்தங்கரரின் சுதை உருவம் வைத்திருப்பது தவிர தமிழக ஆலய அமைப்புடனேயே காணப்படுகிறது இந்தக் கோவில்.

அதுமட்டுமல்ல. இந்துச் சமயத்தின் சின்னங்கள் பல, ஜைன சமயச் சின்னங்களாகவும் திகழ்கின்றன.

சுவஸ்திகம், இளம்பிறை, திரிசூலம், ஓம்காரம், நந்திதேவர் எல்லாம் ஜைனருடைய சின்னங்கள். திருமாலின் மார்பை அலங்கரிப்பதாக நாம் கருதும் ஸ்ரீவத்ஸ சின்னம் தீர்த்தங்கரரின் மார்பை அலங்கரிக்கிறது.

விஜயநந்தி, தருமநந்தி, கனகநந்தி என்றெல்லாம் பெயர் சூட்டிக் கொண்டார்கள் அறவோர். எருது, தருமத்தின் உருவம் என்று கருதுகிறார்கள்.

சிவராத்திரியும் தீபாவளியும் அவர்களுடைய முக்கியமான பண்டிகைகள். சிவராத்திரி புண்ணிய காலத்தில் ரிஷபதேவர் கைலயங்கிரியில் முக்தி பெற்றதாகக் கூறுகிறார்கள். வர்த்தமான மகாவீரர் முக்தியடைந்த தினம் தீபாவளித் திருநாள். இந்த மகாஞானி மகா பரிநிர்வாணமடைந்தபோது அவரைப் பின்பற்றியவர்களும் சீடர்களும் அரசர்களும் 'உலகின் ஒளி அணைந்துவிட்டது. விளக்குகளை ஏற்றி ஒளி உண்டாக்கிக் கொள்வோம்' என்று வரிசையாக விளக்கேற்றினார்களாம். தீபங்குடி கோவிலிலும் தீபாவளித் திருநாளை விமரிசையாகக் கொண்டாடுவது வழக்கம் என்று ஆலயத்தை அக்கறையோடு கவனித்து வரும் திரு ஏ. தீபநாயகம் கூறினார்.

'கோபம் கடியும் தீபங்குடி' என்று புகழ் பெற்ற ஊர் இது. இந்தக் கோவில் கருவறை மட்டும் இருந்ததாகவும் அங்கே எப்போதும் விளக்கு எரிந்து கொண்டிருந்தபடியால் தீபநாயகர் என்று பெயர் வந்ததாகவும், சுமார் 120 ஆண்டுகளுக்கு முன்னால் ஸ்ரீ சின்னசாமி முதலியார் என்பவர் கோவிலை விஸ்தரித்துக் கோபுரம், முக மண்டபம் எல்லாம் கட்டி முடித்தார் என்றும் கூறினார்கள்.


தஞ்சை மாவட்டத்தில் மிகவும் வளமான கிராமம் இது. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பன்னிரண்டு ஜைனர் குடும்பங்கள் தீபங்குடியில் உள்ளன. இவர்கள் மகேந்திர பல்லவன் காலத்தில் மதம் மாறி இங்கே வந்து குடியேறியவர்களின் சந்ததியினர்.

தீபங்குடியில் லட்சுமிநாராயணப் பெருமாள் கோவில் ஒன்றும் இருக்கிறது. அக்ரகாரமும் உண்டு. ஆனால் காலப் போக்கில் நலிந்து போயிற்று. இப்போது இந்துக்கள், முஸ்லிம்கள், சமணர்கள், கிறிஸ்தவர்கள், ஸ்ரீலங்காவிலிருந்து வந்த தமிழர்கள் எல்லாரும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள்.

கோவிலின் உள்ளே துப்புரவாக இருப்பதைப் பார்க்கிறோம். மூலவருடைய சிலையைத் தவிர அநேக தீர்த்தங்கரர்களுடைய வெண்கல உருவங்களும் இங்கே இருக்கின்றன. திருவாசியுடன் விளங்கும் இந்தத் தெய்வத் தன்மை மிகுந்த சித்தர்களையே ஜைனர்கள் வழிபடுகிறார்கள்.

பூஜை செய்பவர் வருவதற்காகக் காத்திருக்கும்போது சில ஜைனர்கள் வழிபட வருவதைப் பார்க்கிறோம். கணவன் மனைவியாக வந்த இருவர் காணிக்கைகள் கொண்டு வருகிறார்கள். அர்ச்சகர் வருகிறார். இளைஞர். பூணூல் தரித்திருக்கிறார். அழகாக விதிப்படி முத்திரைகளுடன் சங்கல்பம் செய்து கொண்டு பூஜை தொடங்குகிறார்.

✖ ஸ்ரீச்ருதம்



✖ தீபநாயகர் கோவில் கோபுரம்



முதலில் மூலவருக்கு அபிஷேகம். பிறகு முன்னால் உள்ள ஆதிநாதருக்கு, அதன் பின்னர் துவாரபாலகர்களுக்கு, பிறகு ஸ்ரீ சருதம், தனிக் கருவறையில் உள்ள வர்த்தமானர் என்று அபிஷேகம் தொடர்கிறது. ஸ்ரீசருதம் என்பது 14 ஆகமங்களைக் குறிக்கிறது. உப்பில்லாத சாதம் நைவேத்யம் செய்து தூப தீபங்கள் காட்டி வழிபாடு நடக்கிறது. வறுத்த கடலைப் பருப்பு, பயத்தம் பருப்பு, நாட்டுச் சர்க்கரை, வாழைப்பழம், தேங்காய்த் துருவல் இவற்றால் செய்த பஞ்சாமிர்தம் நைவேத்தியம் செய்கிறார்கள்.

மந்திர உச்சாரணம்தான் என்னவென்று புரியவில்லை. அர்ச்சனைகள் செய்து உபசாரங்களுடன் செய்யப்படும் பூஜையைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே மகாவீரர் என்று பெயர் பெற்ற மகானுடைய உன்னதமான வாழ்க்கையையும் அவர் தந்த நெறியையும் எண்ணி வியக்கிறோம்.

சிறுவனாக ஒரு நாள் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தார் இளவரசரான வர்த்தமானர். ''ஒப்பில்லாத வீரம் படைத்த மனிதன் உலகத்தில் இருக்கிறானா?'' என்று தேவலோகத்தில் விவாதம் நடைபெற்றது. வர்த்தமானன் என்ற அரசகுமாரனின் வீரத்தைச் சிலர் புகழ்ந்தனர். இதைச் சோதித்துப் பார்க்க விரும்பிய சங்கமன் என்ற தேவன் வர்த்தமானன் விளையாடுகிற இடத்தில் ஒரு பெரிய பாம்பு வடிவம் எடுத்துக் கொண்டு படம் விரித்து ஆடினான். வர்த்தமானர் மரத்தில் ஏறிப் பாம்பின் படத்தின் மீது காலை ஊன்றி நடனமாடினார். சங்கமன் அதிசயமடைந்து தன் தேவ உருவத்துடன் வந்து ''நீர் மகாவீரர்தான்'' என்று புகழ்ந்தான்.

பிறகு தம் முப்பதாவது வயதில் துறவறம் பூண்டு பன்னிரண்டு ஆண்டுகள் கடுமையான தவம் செய்து திகம்பர முனிவராகி ஞான வாழ்வு வாழ்ந்து மக்களுக்குச் சீரிய உபதேசம் செய்த மகான் மகாவீரர். ''நமோ சித்தாணம்'' என்று கூறி வணங்குகிறோம்.

கருவறையின் முன்னால் உள்ள மண்டபத்தில் அடுக்கடுக்கான வெண்கலக் கோபுரங்கள் இருந்தன. அவை மேருக்கள் என்று கூறினார் அர்ச்சகர். தீர்த்தங்கரர்கள் மேரு மலையில் தவம் செய்வதாக ஐதிகம். ஆகவே நான்கு படிகளாக அமைக்கப்பட்ட மேருவில் 24 தீர்த்தங்கரர்களும் தவம் செய்யும் கோலத்தைக் காண்கிறோம். நந்தன வனம், சௌமனஸ வனம், பாண்டுக வனம், பத்ராசல வனம் என்று சிகரங்களுக்குப் பெயரும் உண்டு.

ஜீவன்களும் மனிதனும் இந்த உலகத்தில் அன்பு செலுத்தி வாழ்ந்தால் போதாது. மூன்று உலகங்களிலும் நேச பாவத்துடன் வாழ வேண்டும். அதற்கு உதவுவது தீர்த்தங்கரர்களின் அறவுரைகள் என்பதைக் குறிக்கத் தீர்த்தங்கரர்கள் சிலைகள்மீது மூன்று குடைகள் ஒன்றன் மீது ஒன்றாக அமைக்கப்பட்டிருக்கும்.

தமிழ்மொழியை வளம் மிகுந்த மொழியாகச் செய்வதில் சமணர்களுக்கு முக்கிய பங்குண்டு. இன்று நமக்குக் கிடைத்துள்ள அநேக தமிழ் நூல்கள் சமண சமயச் சார்புள்ளவை. திருத்தக்க தேவர் எழுதிய சீவகசிந்தாமணி என்ற காவியத்தை மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் அரும்பாடு பட்டுப் பதிப்பித்தார். தமிழ்ப் பற்று சமயங்களை இணைக்கும் பாலமாக விளங்குகிறதல்லவா?

சமய நூல்களைத் தவிர நாலடியார், சிறு பஞ்ச மூலம், அறநெறிச் சாரம் முதலிய நீதி நூல்களும், திவாகர நிகண்டு முதலிய மொழி இயல் நூல்களும், இன்னும் சில கணித நூல்களும் சமணர்கள் இயற்றியவை.

இதற்காக நாம் சமண சமய அறிஞர்களை நன்றியுடன் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பரிமித பரிக்ரகம் என்ற கொள்கையையும், அகிம்சைக் கொள்கையையும் உலக மக்கள் அனைவரும் கடைப்பிடித்தால் இந்தப் பூவுலகமே சுவர்க்க பூமியாகிவிடாதா என்ற எண்ணத்தோடு ஸ்ரீ தீப நாயகரைச் சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்.

அருகர் தான் போற்றி!

புகைப்படங்கள்: பட்டாபிராமன்

அருள்வாக்கு

சாமானிய மக்கள் சாஸ்திரப் பிரகாரம் விதிக்கப்பட்ட எல்லாச் சடங்குகளையும் வழுவற அனுஷ்டிப்பதே முறை. இவற்றால் என்ன பயன் என்பவர்களுக்கு நிதர்சனமாகச் சில பலன்களைக்காட்டலாம். இன்னின்னகர்மங்களை இப்படி இப்படித் தவறின்றிச் செய்ய வேண்டும்என்று ஒருவன் கூர்ந்த கவனத்துடன் செய்கிறபோது அவன் மனசில் ஐகாக்கிரியம் (ஒருமுகப்படுத்துதல்) ஏற்படுகிறது. பிறகு ஆத்ம தியானம் செய்வதற்கு இவ்வாறு மனம் ஒருமைப்படுவது அத்தியாவசியமாகும். அதோடு சாஸ்திரம் கூறுவது போல்தான் இருக்க வேண்டும் என்று அவன் உறுதியாக இருப்பதால் ஒரு ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்கு (Discipline) உட்படுகிறான். இதைச் சாப்பிடக் கூடாது, 'இந்தப் போக்கிய வஸ்துக்களை அனுபவிக்கக் கூடாது என்றெல்லாம் சாஸ்திரப் பிரகாரம் நடப்பது வைராக்கியத்துக்குப் பெருத்த சகாயம் செய்கிறது. எத்தனை சிரமங்கள் இருந்தாலும் குற்றம் குறை இன்றிச் சாஸ்திரப்படி சடங்குகளைச் செய்யும் போது சங்கல்ப பலமும் (Will power) உண்டாகிறது. சொந்த அபிப்பிராயமில்லாமல் சாஸ்திரம் சொல்வதே வழி என்று இருப்பதால் அடக்கம், எளிமை எல்லாம் உண்டாகின்றன.

— ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராசார்ய சுவாமிகள்



"ஸார்!''

''அம்மா!'' என அலறினான் செந்தில். அடியின் வேகம் தாங்காமல் தடுமாறி விழுந்தான்.

சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் குழுமி விட்டார்கள். வேலை பார்ப்பவர்கள் அரை வட்டமாகச் சுற்றிக் கொண்டு விட்டார்கள்.

''விடப்பா...'' எனப் பரிந்து கொண்டு வந்தார் ஒருவர் இரக்கத்துடன்.

''ராஸ்கல்.... கையில் பணம் இல்லே... சாப்பிட்டது மட்டுமில்லே, கையில் பார்சல் வேறே....'' – செந்திலே அடிப்பதற்கு மீண்டும் கையை ஓங்கினான் அவன்.

''உன்னே தள்ளிக்கிட்டுப் போடா. தண்ணி சேந்தி நான் மூச்சூடும் ரொப்பிவிட்டுப் போகட்டும்'' என்றார் கல்லாவில் உட்கார்ந்திருந்தவர்.

''செய்யறேங்க.... இன்னிக்கு மட்டும் இல்லே... தெனத்துக்கும் அந்த வேலையைக் கொடுத்தாக் கூட ரொம்பப் புண்ணியமுங்க...'' என்றான் செந்தில்.

''நல்லாக் கேட்டே போ... இருக்கிற ஆளுங்களே அதிகம்... ஒருத்தனே வெளியே போகச் சொன்னாக் கூடக் கொடி பிடிக்கக் கிட்டு வந்திடுவாங்க... சரி, சரி! போய் வேலையைப் பாரு....''

''ஸார்!...'' என்று இழுத்தான் செந்தில்.

''ஒரு பத்து நிமிஷம் தாங்க, ஸார்... பக்கத்துலதான் வீடு... என் வீட்டுக்காரி நாலு நாளா எதுவும் சாப்பிடலே... பச்சை

மன்னிக்க மாட்டேன்!

அன்னம்



உடம்பு.... இந்தப் பார்சலைக் கொடுத்துட்டு...''

''பலே ஆள் அப்பா நீ... தப்பி ஓடற திட்டமா இது...கொன்னுப்புடுவேன்!''

சற்று நேரம் சென்ற பின்னர் வயோதிகர் ஒருவர் — அந்த ஹோட்டலில் காய்கறி நறுக்கி, எடுபிடி வேலை செய்பவர் — ஏதோ வேலையாகப் புறப்பட்டார்.

கல்லாவில் உட்கார்ந்திருந்தவரை அணுகி, ''நான் அந்தப் பக்கம்தான் போறேன். அந்தப் பையன் சொல்றதைக் கேட்டாப் பாவமா இருக்கு... இதைக் கொண்டு போய்க் கொடுத்திட்டுங்களா?'' என்று கேட்டார்.

''உங்களுக்கு எதுக்குங்க சிரமம்...?எவனோ தெருவில் போகிறவனுக்காக...''

பெரியவர் அந்தப் பேச்சைச் செவி மடுத்ததாகத் தெரியவில்லை. அந்தப் பார்சலைக் கையில் எடுத்தபடி புறப்பட்டுச் சென்றார்.

கிணற்றடிக்குப்போன செந்தில் உண்மையில் பயந்தே போனான். தண்ணீர் இருக்கும் இடம் சுலபத்தில் புலப்படவில்லை. அத்தனை ஆழம். கொடுக்கப்பட்டுள்ள வாளியோ மிகப் பெரியது.

முக்கி முனகி முதல் வாளியை இழுத்து முடித்தான்.

அடுத்த வாளியைக் கீழே இறக்கும்போது அந்த வாளியில் தெரிந்தது அவன் தந்தையின் முகம்.

அவனுடைய சொந்த ஊரிலும் தண்ணீர்த் தட்டுப்பாடுதான். எந்தக் கடுங் கோடையிலும் அவன் அப்பா அவன் குளிப்பதற்காகத் தலையிலும் தோளிலும் வெகு தூரம் தண்ணீர் சுமந்து வருவார்.

''எனக்காக ஏம்ப்பா கஷ்டப்படறீங்க?'' எனச் செந்தில் கேட்டதுண்டு.

''இது பெரிய பாரமாடா? எங்கப்பா எனக்குச் செஞ்சாரு... உனக்கு நான் செய்யறேன்... ஒரு நாளைக்கு இந்தக் குடத்தை இறக்கத்தான் போறேன்... அப்போ என் பேரப் புள்ளே தோள் மேலே உக்காந்துக் கிட்டிருப்பான்.''

செந்தில் எஸ். எஸ். எல். சி. வரை படித்தான் — அவர்கள் தென்னந் தோப்பை விற்று.

பாலிடெக்னிக்கில் சேர்ந்து மூன்று வருஷங்கள் பயின்றான்—சொந்த வீடு ராவுத்தர் கைக்கு மாறியது.

சென்னையில் ஒரு தொழிற்சாலையில் 'அப்ரெண்டிஸாக' இருந்தான்—கைச் செலவுக்குத் தாயின் நகைகள் விற்கப்பட்டன.

செந்திலுக்கு வேலை கிடைத்தது. கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் சம்பளம். அந்த மகிழ்ச்சியில் பங்கு கொள்ளக் காத்திராமல் அவன் அம்மா மறைந்து போனாள்.

செந்திலுக்குத் தாய் மாமன் மகள் காத்திருந்தாள். பெயர் கல்யாணி. சிறு வயதிலிருந்தே உழைப்புக்குஅஞ்சாதவள்.உழைத்து



உழைத்து அவன் சற்று உருக் குலைந்து காணப் பட்டான். நிறமும் அட்டைக் கரி.

செந்திலின் கவனத்தைக் கவர்ந்தவள் சென்னையில் இருந்தாள். செந்திலிடமிருந்து கடிதம் வந்தது. தான் ஒரு பெண்ணை ஏற்கெனவே மணந்து கொண்டு குடும்பம் நடத்துவதாகவே எழுதி விட்டான். அவன் தந்தைக்குப் படிக்கத் தெரியாது. தபால் காரப் பையன் நாலு பேர் அறியக் கடிதத்தைப் படிக்க, ஊரில் பெரிய தலைக் குனிவு ஏற்பட்டு விட்டது.

பாவிப் பெண் – அந்தக் கல்யாணி—தனக்கு ஏதோ பெரிய அவமானம் ஏற்பட்டுவிட்டது போல் புளிய மரத்தில் தூக்குப் போட்டுக் கொண்டு விட்டாள்.

“ஏன்னடா யோசனை!.... ஆகட்டும் சீக்கிரம்!'' என்று பிடரியில் ஓர் அறை விழுந்தது. ஒருவன் இவனை அடித்து விட்டுப் பார்க்காமலேயே போய்க் கொண்டிருந்தான்.

செந்திலுக்குக் கோபம் வந்தது. போன வருஷமாக இருந்திருந்தால் ... அந்த ஆளைப் போட்டு மிதித்திருப்பான்.

அவன் வேலை பார்த்த கம்பெனியில் புதிதாக ஒரு மானேஜர் வந்திருந்தார். வயதில் சிறியவர். ஆனால் கம்பெனி முதலாளிக்கு நெருங்கியவரும் கூட.

அன்று—

காலையிலிருந்து மெஷின் அருகே நின்று கால் வலித்தது செந்திலுக்கு. பக்கத்து நாற்காலியில் சற்று உட்காரப் போனான்.

அப்படியே கண்ணைவேறு அசத்திக்கொண்டு வந்தது. மேஜை மேல் கையை வைத்துப் படுத்தான். உறங்கிப் போய் விட்டான்.

சட்டென்று அவன் விழித்தெழுந்தபோது சுற்றி ஒரே கூட்டம். நடுவில் அந்த இளம் மானேஜர். ''சபாஷ்... இந்த மெஷின் சத்தத்தில் எப்படி மிஸ்டர் தூங்க முடிகிறது?''

''தூங்கிட்டேன்.... இப்போ என்ன செய்யச் சொல்றீங்க...தலையைச் சீவிடுவீங்களா?'' என்று திருப்பிக் கேட்டான்.

அந்த இளம் அதிகாரியின் முகம் சிவந்தது. பதில் பேசாமல் அவர் திரும்பிப் போனார். ஆனால் அடுத்த அரை மணி நேரத்தில் அவன் சஸ்பெண்ட் செய்யப்பட்டான்.

• யூனியன் மூலம் தன் நிலைமையை எடுத்து வாதாடினான். யூனியன் செயலாளருடைய மைத்துனன் ஒருவன் படித்துவிட்டு ஒரு வருஷமாக வேலை இல்லாமலிருந்தான். நிர்வாகம் அதைப் பயன்படுத்திக் கொண்டது.

இதற்கிடையில் செந்தில் வீட்டில் ஒரு புதிய வரவு: அவன் மனைவி பத்மா ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

செந்தில் சென்னையிலிருந்துஇந்த ஊருக்கு வந்து இரண்டு மாதங்கள் ஆகின்றன.

தாற்காலிகமாய்க் கிடைத்த வேலையும் போய் ஒரு மாதம் ஆகிறது. சாப்பிட்டு நான்கு நாட்கள் ஆகிவிட்டன. அந்தப் பெரிய ஹோட்டலில் தன்னை யார் கவனிப்பார்கள் என்று நினைத்தது தவறாகப் போய் விட்டது.

மாலை ஆறு மணி. உள்ளே நுழைந்தவர் ஹோட்டல் முதலாளி போலும். நேராக அவனிடம் வந்தார். பெயரைக்கேட்டார். வயதைக் கேட்டார். படிப்பைப் பற்றி விசாரித்தார். தன் 'ஃபாக்டரி'யில் ஒரு வேலை காலியாகும் வரையில் ஹோட்டலில் வேலை செய்யச் சம்மதமா என விசாரித்தார்.

செந்திலுக்குத் தன் காதுகளை நம்ப முடியவில்லை. காலையில் பட்ட அவமானம், விழுந்த அடியின் வேதனை, உழைத்த உழைப்பின் அயர்ச்சி - ஏதும் அவனுக்கு அப்போது தெரியவில்லை. அவர் கால்களில் விழுந்து வணங்கினான்.

அவர் அவனைத் தூக்கி நிறுத்தினார். ஆதரவாகத் தோளில் தட்டி விட்டுப் போனார்.

இரவு இனிப்புப் பொட்டலத்துடன்—பூப் பந்துடன் – வேலை கிடைத்துவிட்ட பூரிப்பில் செந்தில் வீடு திரும்பினான். அவள் என்ன செய்திருப்பாள்? குழந்தை பாலுக்காகத் தவித்திருக்குமோ?

வேகமாக விரைந்தான்.

வாசலில் நின்றிருந்தாள் பத்மா – அவன் மனைவி. அழகாகக் குளித்துத் தலை சீவித் திலகமிட்டு – உதட்டில் தாம்பூலக் கறையுடன் – குழந்தையைத் தாங்கியவாறு அவனை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

''பத்மா...காலையிலே நான் போனேனு...'' எனத் தொடங்கினான்.

''எல்லாம் எனக்குத் தெரியும்.... அந்தப் பெரியவர் சொன்னார்...''

''எந்தப் பெரியவர்?''

''நீங்கள் டிபன் வாங்கிக் கொடுத்தனுப்பினீர்களே, அவர்தான்... விளக்கு வைக்கிற சமயம் மறுபடி வந்தார். ரிக்ஷாவில் சமையல் சாமான்கள் எல்லாம் வாங்கி வந்தார். குழந்தைக்குச் சட்டைத் துணி எல்லாம் எடுத்து வந்தார். நான் சமையல் செய்து வைத்திருக்கிறேன். கால் கை கழுவிக் கொண்டு வாருங்கள். சாப்பிடலாம்.''

''யார் அந்தக் கிழவர்?'' என விழித்தான் செந்தில்.

''எனக்கென்ன தெரியும்?... என்ன சொல்லியும் கேட்காமல் இந்தச் செயினைக் குழந்தையின் கழுத்தில் போட்டு விட்டுப் போனார்!'' என அந்த மெலிந்துபோன தங்கச் சங்கிலியை எடுத்துக் காட்டினான்.

அதைப் பார்த்த செந்தில் அலறினான். ''அப்பா!'' அது அவன் சின்ன வயதில் போட்டுக் கொண்டிருந்த சங்கிலி!

''எங்கே இருக்கிறார்? எப்போது வந்தார்?'' என்று பத்மாவை உலுக்கினான் செந்தில். அவள் பதிலளிக்கத் தெரியாது குழம்பினாள்.

அந்தப் பெரியவர் – வடக்கே செல்லும் பாஸஞ்சரில் – ஒரு சிறிய மூட்டையுடன் புறப்பட்டு விட்டிருந்தார். கஷ்டப்பட்டுத் தவித்த தன் மகனுக்குத் தன் வேலையைத் தியாகம் செய்து ஓர் இடத்தில் அமர்த்தியாகி விட்டது. முன்பு ஆசைப்பட்டது போல் பேரப் பிள்ளையைத் தூக்கி உச்சி முகர்ந்தாகி விட்டது.

மற்றபடி – அவர் மகன் செய்த காரியத்திற்கு – அவர் அவனை மன்னிக்கவோ, அவன் நிழலில் தங்கவோ பிரியப்படாமல் புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தார்!

என்ன நியாயம் சார் இது?

எஸ். சம்பத்குமார், சென்னை-5

? எம். ஜி. ஆர். திறமையான ஆட்சியாளரா?

! திறமைசாலிதான். ஆனால் ஒரு முதல்வர் மாநிலத்தை முன்னேற்றப் பாதையில் வேகமாகக் கொண்டு செல்ல அது மட்டும் போதாதே! தீர்க்க தரிசனம், செயல் துடிப்பு, நேர்மை, நம்பிக்கையானவர்களைத் தேர்ந்தெடுத்து, அதிகாரங்களைப் பரவலாக்கி, பொறுப்புக்களை ஒப்படைக்கும் குணம் போன்ற பல்வேறு சிறப்பியல்புகளும் தேவை. எம். பி. பி. எஸ். அட்மிஷன் இண்டர்வ்யூ முடிந்து ஒன்றரை மாதத்துக்கு மேலாகப் போகிறது. இன்று (20-9-83) வரை முடிவு அறிவிக்கப்படவில்லை. ஃபைல் முதல்வரிடம் போயிருக்கிறது... அவருக்கு உடம்பு சரியில்லை... இப்படியே ஒவ்வொன்றுக்கும் முதல்வரை எதிர்பார்த்து... எதிர்பார்த்து... நத்தை வேகத்தில் ஊர்ந்து எந்த ஜன்மத்தில் மாநிலம் முன்னேற?

எம். பழனியப்பன், குருவிக்கொண்டான்பட்டி

? சோ ஓர் அரசியல் கட்சியில் சேரத் தாம் நிர்ப்பந்திக்கப்படுவதாக எச்சரித்து வாசகர் கருத்தைக் கோரியுள்ளாரே?

! இது அவரே எடுக்க வேண்டிய முடிவு. வாசகர்களைக் கேட்பது சரியல்ல. கேட்டதால் சொல்கிறேன்: அவரது சுதந்திரப் போக்குக்கும் கட்சி அரசியலுக்கும் ஒத்து வராது. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை அரசியல் கட்சியில் சேர்வோருக்குத் தேவை. அது அவரிடம் இருப்பதாகத் தோன்றவில்லை. சுயேச்சை வேட்பாளராக நின்று நாடாளுமன்றம் போகலாம். நாவன்மையும் நேர்மையும் திறமையும் அறிவும் மிக்க பத்துப்பதினைந்து சுயேச்சையாளரை நாடாளுமன்றத்துக்கு மக்கள் அனுப்பி வைத்தாலே போதும். அரசியலும் ஆட்சியும் சீர்ப்பட ஆரம்பித்து விடும்.

வி. சந்திரசேகரன், வீரராக்கியம்

? தனி ஈழம் கிடைத்தால் தனித் தமிழ்நாடு கோஷம் உயிர் பெறுமா?

! தனி ஈழம் கிடைக்கு முன்னரே இங்கே சவக் குழியைத் தோண்ட ஆரம்பித்து விட்டார்கள்.

O புதிய மந்திரி அலுவலகம்



வி. சங்கர நாராயணன், குரோம்பேட்டை

? மூந்தானை முடிச்சு ஆபாச வசனங்களை விழுந்து விழுந்து ரசிக்கும் தமிழ்ப் பெருமக்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! மூன்றாம் பிறை, சலங்கை ஒலி, தண்ணீர் தண்ணீர் போன்ற படங்களையும் விழுந்து விழுந்து ரசிக்கிறார்களே என்பதால் ஆறுதல் அடைகிறேன்.

எம். ஏ. பாஷா, சின்ன சேலம்

? தற்போதைய நடிகையர்களில் யார் அழகு?

! முக அழகு ராதா; உடல் அழகு சிலுக்கு; நடிப்பில் அழகு சுஹாசினி; உள்ளத்தால் அழகு, ஸாரி — அதைக் கணிக்கும் அளவு யாருடனும் நெருங்கிய பழக்கம் இல்லை.

சி. கணேசன், திருநள்ளாறு

? ஒரு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதற்காக ஒன்று சேர்ந்து எதிர்ப்புக் குரல் கொடுக்கும் மேல் நாடுகள் ஆயிரக் கணக்கில் இலங்கைத் தமிழர் சுட்டு வீழ்த்தப்பட்டபோது சிறிதுகூட வாய் திறக்கவில்லையே, இது எதைக் காட்டுகிறது?

! இரு நிகழ்ச்சிகளுக்கும் இடையில் பெருமளவு வித்தியாசம் இருப்பதை. திசை தப்பிச் சென்ற பயணிகள் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியது ஆக்கிரமிப்பாகக் கருதப்படக்கூடிய துராகிருதம்; மற்றது உள்நாட்டுக் கலவரம்.

கே. அனுராதா, சேலம்

? மாணவர் சிறப்பிதழில் என்னைப் போன்ற அஞ்சல் வழிக் கல்வி பெறுவோரும் கலந்து கொள்ளலாம்தானே?

! பேஷாக. மாணவர் படைப்புக்கள் மாணவர் பலருக்கு அப்பாலும் கல்கி இதழ்களில் இடம் பெறும்.



அ. ராஜா ரஹ்மான், உத்தமபாளையம்

? மறுபடி ஜி. பார்த்தசாரதி இலங்கைக்கு இப்போது வரவேண்டாம் என்று ஜெயவர்த்தன கூறுவது எதைக் காட்டுகிறது?

! அவர் சிங்கள ஆதிக்கவாதிகளின் செல்வாக்குக்கு ஈடு கொடுக்க முடியாமல் தவிப்பதைத்தான். பாரதத்தின் பொறுமையைப் பலவீனமாகச் சிங்களவர் கருதி விடக் கூடாது. எச்சரிக்கிறோம்.

நேசன், பழவந்தாங்கல்

? இன்சாட் 1-B விண்வெளியில் செலுத்தியது அமெரிக்கா, தயாரித்தது அமெரிக்கா, அது சரியாகச் செயல்படாதது மட்டும் நமது துரதிர்ஷ்டமா? என்ன நியாயம் ஸார் இது?

! பிறகென்ன, அமெரிக்காவின் துரதிர்ஷ்டம் என்று கருத முடியும்? நல்லவேளை... இப்போது சரியாக இயங்க ஆரம்பித்து விட்டதாகச் செய்தி. ஆனால் சில கோடிகளை விழுங்கியுள்ள இன்சாட்டை அதன் ஆயுட்காலமான ஏழு ஆண்டுகளுக்குள் பல கோடி ரூபாய் லாபம் காணும் வகையில் நமது பல்வேறு அரசு இலாக்காக்கள் பயன்படுத்திக் கொள்ளாது போனால் அதுவும் நமது துரதிர்ஷ்டமே!

○ திருமதி தேவநாதன், மதுரை ★
? அசுர வேகத்தில் செயல்பட ஆயிரம் பணிகள் இருக்க, நல்லமை நீதிபதிகளை எதற்காக மாநிலம் விட்டு மாநிலம் மாற்றித் தொலைக்கிறார்கள்?

நீங்கள் கேட்டவை தராசு

! நமது நீதித் துறை சர்வ சுதந்திரமாக இயங்குவது ஆட்சியாளருக்குப் பிடிக்கவில்லை. ஏதோ ஒரு விதத்தில் அதன் மீது தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்த ஆசை. அதன் விளைவாகத்தான் இந்தத் திட்டம். ஆட்சியில் உள்ளோருக்குப் பிடித்தமான விதமாகத் தீர்ப்பு வழங்கவில்லையானால் தெரியும் சேதி...!

○ ச. கலாமாலினி, தஞ்சாவூர்
? குடியரசான நமது நாட்டில் வோட்டுரிமை அனைவருக்கும் இருக்க, தமக்கு வாரிசாக ராஜீவ் காந்தியைக் கொண்டுவருவதாக திருமதி காந்தியைப் பலர் குற்றம் கூறுவது ஏன்?
! ராஜீவ் தமது சுய முயற்சியால் முன்னுக்கு வந்து மக்கள் ஆதரவு பெற்று நாளை பிரதமராவதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் கட்சிக்கும் ஆட்சிக்கும் வித்தியாசம் தெரியாத நமது தேசத்தில் அவர் ஏராளமான சலுகைகளைத் தவறான முறையில் பெற முடிகிறது. ஆகஸ்டு இறுதியில் ராஜீவ் அஸ்ஸாம் சென்றார். அவர் விஜயம் முழுக்க முழுக்க அரசாங்க நிகழ்ச்சி போலவே கருதப்பட்டு, மாநில அரசு எல்லா ஏற்பாடுகளையும் செய்தது. பிரதமர் வரும்போது நடக்கும் அத்தனை மரியாதைகளும் இவருக்கு அளிக்கப்பட்டன. விமானப் படை விமானத்தில் வந்து இறங்கினார். நெல்லி கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்கள் வசிக்கும் முகாமுக்குச் சென்று பார்வையிட மாநில அரசின் ஹெலிகாப்டரைப் பயன்படுத்தினார். 250 பஸ்களில் போலீஸ் பாதுகாப்புடன் அவர் பேச்சைக் கேட்க மக்கள் அழைத்து வரப்பட்டனர். இதற்கெல்லாம் ஆன செலவை இ. காங்கிரஸ் மாநில அரசுக்குத் தரவா போகிறது? எப்போது?

○ நாகை ஜி. அகமது, சென்னை
? டைனர்ஸ் கிளப் என்று ஒன்று இருக்கிறதாமே?


○ ராஜீவ்


○ கலைஞர்

! அந்தக் கிளப்பின் அடையாளச் சீட்டு உள்ளவர்கள் கையில் பணமின்றியே பெரிய கடைகளில் பொருள்கள் வாங்கலாம். பெரிய ஹோட்டல்களில் தங்கியிருக்கலாம். விமான டிக்கட் வாங்கலாம். கையெழுத்துப் போட்டால் போதும். பில்கள் டைனர்ஸ் கிளப்புக்கு அனுப்பப்பட்டு ஒட்டு மொத்தமாய், ஒரே பில்லாக மாதக் கடைசியில் அவருக்கு டைனர்ஸ் கிளப்பிலிருந்து வந்து சேரும். அதெல்லாம் பெரிய பெரிய பணக்காரர்களுக்கு ஸார்! உமக்கும் எனக்கும் ஆவது என்ன?

○ ரகுராம், கரூர்
? எங்கள் ஊர்ப் பெயரைத் தாங்கிய வங்கி இங்கே புதிய மத்திய அலுவலகக் கட்டிடத்தை எழுப்பியுள்ளதே?
! 70 ஆண்டுகளில் 138 கிளைகளுடன் வளர்ச்சியடைந்துள்ள கரூர் வைசியா பாங்குக்கும் சேர்மன் வேங்கடேசலுக்கும் வாழ்த்துகள். சிறப்புகள்: அரசுடைமையான வங்கிகளே கிராமப்புறங்களில் கொடுத்த கடன்கள் திரும்புவதில்லை என்று அங்கலாய்க்கும் போது இந்தத் தனியார் துறை வங்கி அசலும் வட்டியும் நூறு சதம் திரும்பி விடுவதாகக் கூறுகிறது. கிராமப்புறங்களில் அதிகமான கிளைகள் ஆரம்பித்து விவசாயிகளுக்கு உதவி வருகிறது.

○ கவிப்பிரியா, வேலூர்(சேலம்)
? சமீபத்தில் தங்களை அதிர வைத்தது எது?
! ஆகஸ்டு இறுதியில் மேலும் இரு நகராட்சி ஊழியர்களைச் சென்னைப் பாதாளச் சாக்கடைகள் பலி கொண்டன. அம்மாதத்தில் மொத்தம் இம்மாதிரி பலியானவர் மூவர். இடுப்பு வரை சாக்கடை நீரில் இறங்கி விஷ வாயுவைச் சுவாசித்து, அடைப்புக்களை நீக்கும் பணியில் மனிதர்களை இழிவுபடுத்தி அவர்கள் உயிர்களுக்கும் ஆபத்து விளைவிப்பது கொடுமை. ஆண்டுதோறும் ஆயிரக் கணக்கான இன்ஜினியர்களை இந்தியா உருவாக்குகிறது. அவர்களில் யாருக்கும் இந்தப் பிரச்னையைச் சமாளிக்க ஒரு சாதனத்தை உருவாக்க முடியவில்லை என்பது நமது கல்வி முறைக்கே தலைக்குனிவு.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
திருமதி தேவநாதன்,
வி-12, ராஜம் ரோடு,
மதுரை-625 003.

'சோ' அரசியல் கட்சியில் சேரலாமா?

விசிட்டர் அனந்த்

துக்ளக் ஆசிரியர் சோவுக்கு ஓர் அரசியல் கட்சியில் சேர அழைப்பு வந்திருக்கிறது. சேருவது குறித்து வாசகர்களை 'மனம் திறந்து யோசனை கூறுங்கள்' என்று கேட்டிருக்கிறார். ஒரு வாசகன் என்ற வகையிலும் அவருடன் சிலஆண்டுகள் பணியாற்றிய சகா என்ற வகையிலும் நான் கூற விரும்புவது 'ஏன் சேரக் கூடாது?'. ஏன் உங்கள் திறமையை இன்னும் சிறப்பாகப் பயன்படுத்தக் கூடாது? என்பதே.

ஒரு அட்வகேட்டாகப் பணி ஆரம்பித்துப் பின் ஒரு நாடக நடிகராக, வசனகர்த்தாவாக, சினிமா நடிகராக, எழுத்தாளராக, பேச்சாளராக, துக்ளக் பத்திரிகையாசிரியராக வளர்ந்தவர். எல்லாக் கட்டத்திலும் நகைச்சுவை இருந்தாலும் அரசியல் வாடையாலேயே இவர் பெருமை பெற்றிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். ஆக, அடுத்த கட்டம் கட்சி அரசியல்தான்.

புறத் தோற்றத்துக்கு இவர் ஓர் அரசியல் விமர்சகராகத் தோன்றலாம். ஆனால் ஊன்றிக் கவனித்தால் இவர் ஓர் அரசியல்வாதி என்பது புலனாகும். இதுவரை எந்த அரசியல் கட்சியிலும் உறுப்பினராக இல்லை. என்றாலும் இவர் நாட்டு நலனுக்கேற்ப ஸ்தாபன காங்கிரஸ், தி. மு. க., அ. தி. மு. க., ஜனதா, பாரதீய ஜனதா போன்ற கட்சிகளையும் அவற்றின் தலைவர்களையும் ஆதரித்து வந்திருக்கிறார். அதே சமயம் கடுமையாக விமரிசித்தும் வந்திருக்கிறார்.

தேர்தல் சமயங்களில் இவருடைய ஆதரவும் பிரசாரமும் அரசியல் கட்சிகளுக்குத் தேவைப்படுகின்றன. அதனால் இவரை அரசியல் கட்சிகள் பயன்படுத்திக் கொண்டன. சில கட்சித் தலைவர்களைப் போல் தொண்டர்கள் பின்னணி இவருக்கு இல்லை யென்றாலும், இவரது பேச்சைக் கேட்க ஆயிரக் கணக்கில் கூட்டம் கூடிக் கலைகிறது. சோவுக்குள்ள இன்னொரு பெருமை தில்லி, பம்பாய் போன்ற வட இந்திய நகரங்களிலும் பேச அழைக்கப்படுவதுதான். எந்த அரசியல் கட்சியிலும் உறுப்பினராக இல்லாவிட்டாலும் இவரே தனிப்பட்ட ஓர் அரசியல் இயக்கமாக வளர்ந்திருக்கிறார்.

அந்த இயக்கத்தை ஒரு தேசிய இயக்கத்தோடு இணைத்துத் தேச நலனுக்காகப் பாடுபடுவதே அர்த்தமுள்ளதாக இருக்கும்.

கடந்த காலத்தில் தென் சென்னை வேட்பாளராகப் போட்டியிட சோ தயாரா என்று காமராஜ ஆட்களை அனுப்பி வைத்தார். இதற்கடுத்து ஜனதா சார்பாகப் போட்டியிடவும் அழைப்பு வந்தது. சோ எதற்கும் மசியவில்லை. காரணம், ஒரு ஸ்தாபனம் என்று சேர்ந்து விட்டால் தம்முடைய சுய சிந்தனை பறிபோய்விடும்; கூழைக் கும்பிடு போட வேண்டி வரும் என்கின்ற அச்சமே.

ஆனால் தேசிய அளவிலும் மாநிலத்திலும் கூட இருக்கிற தலைவர்கள் பலர் இவரைச் சந்தித்து ஆலோசனைகள் பெறுவது சகஜம்.

சோ ஓர் அரசியல் கட்சியில் சேர்ந்தால் அந்தக் கட்சியைச் செம்மைப் படுத்துவார். அக்கட்சிக்குத் தேர்ந்த அரசியல் ஞானம் உள்ளவரும் அதே சமயத்தில் நாடு முழுவதும் உள்ள ஜனங்களை ஈர்க்கக் கூடிய வாதத் திறமையுள்ள ஒரு பேச்சாளரும் கிடைத்ததாக அமையும்.

சுதந்திரப் போராட்டத்துக்குப் பிறகு நம் நாட்டில் உள்ள புத்திசாலிகளில் பலர் அரசியல் இயக்கங்களில் ஈடுபட விரும்பாமல் தள்ளியே நின்றிருக்கின்றனர். அதனால் அரை வேக்காடுகளெல்லாம் ஆட்சிக்கு வந்து நாட்டை அலங்கோலப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இப்போதுள்ள புத்திசாலிகள் தாங்கள் புத்திசாலித்தனமாகப் பேசுவது மட்டுமே போதுமானது என்பது போல் புத்திசாலித்தனமாக நடந்துகொள்வதில் தயக்கம் காட்டுபவர்களாகவே இருக்கின்றனர். இவர்களது அறிவும் ஆற்றலும் போராட்ட காலத்தை விட நிர்மாண காலத்தில்தான் அதிகம் தேவைப்படுகிறது. சோ அதற்கு முன்மாதிரியாக வழிகாட்டட்டும்.



ஜகீர் அப்பாஸ்





பாகிஸ்தான் கிரிக்கெட்டில் காப்டன் பதவி அப்படி ஒன்றும் வெகு நாள் நிரந்தரமானது அல்ல. அடிக்கடி மாறுகிற தலைமைப் பதவிதான். ''ஒரு பெண் அடிக்கடி உடைகளை மாற்றுகிற மாதிரி காப்டன்களை மாற்றுகிறார்களே!'' என்று என் மனைவி ஜோக் அடிப்பதுண்டு.

இந்திகாப், மஜீத்கான், ஆஸிஃப் இக்பால், முஷ்டாக் முகம்மது, வாஸிம் பாரி, ஜாவேத் மியாதாத், இம்ரான்கான்....

'பாகிஸ்தான் குழுவுக்கு இதுவரை தலைமை ஏற்காத திறமைசாலிகளில் ஜகீர் குறிப்பிடத் தகுந்தவர். இந்தக் கௌரவம் அவருக்கு இதுவரை கிடைக்காதது அவரை உறுத்துகிறதோ என்னவோ?' என்று இங்கிலாந்து பௌலர் பாப் வில்லிஸ் குறிப்பிட்டிருந்தார்.

இது கிட்டத்தட்ட சரியான கணிப்பு. ஆடத் தொடங்கிய முதல் நாளிலிருந்தே என் வெகு நாளைய கனவாயிருந்த காப்டன் பதவி எனக்குக் கிடைப்பதை நான் ஆவலோடு எதிர்பார்த்தேன். இதில் தற்பெருமை ஏதுமில்லை. ஒரு நாட்டு விளையாட்டுக் குழுவின் தலைமைப் பதவி என்பது மிக உயர்வான கௌரவம்; நான் அதற்குத் தகுதியானவன் தான் என்று என் குழுவில் உள்ள நண்பர்கள் சொல்வார்கள். சில இன்னிங்ஸ் விளையாடிய பிறகு எனக்குப் பாராட்டுக்கள் குவிந்தது உண்டு. நான் சில வேளைகளில் இரட்டை சதம் போட்டபோது என்னைத் தெய்வமாகக் கொண்டாடியதும் உண்டு. நான் பாகிஸ்தான் ஏர்லைன்ஸ் அணியின் தலைவனாக இருந்தபோது ஆடிய மற்ற டோர்னமென்டுகளில் பெற்ற வெற்றிகளும் முக்கியமானவை. என் நண்பர்களுடன் எனக்குச் சுமுகமான உறவு இருந்தது. ''ஜகீருக்குக் காப்டனாயிருந்து பணியாற்றும் ஆவல் நிரம்ப உண்டு; ஆட்டத்துடன் ஒன்றிப் போய்விடுவார். அவர் தலைமையில் பாகிஸ்தான் அணிக்கு அதிர்ஷ்டமும் வெற்றியும் கிடைக்கும்!'' என்று என் மனைவி சொல்வாள்.

எனக்குத் தலைமைப் பதவி இதுவரை கிடைக்காததற்கு ஒரு காரணம், நான் கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டு அங்கத்தினர்களுடன் கலந்து பழகுவதில்லை என்பது. எனக்கு அது வழக்கமில்லை. காக்காய் பிடிப்பதும், ஜால்ராப் போடுவதும் எனக்குப் பழக்கமில்லாதவை. என் விளையாட்டைப் பார்த்து என் திறமையை எடை போடத்தான் கேட்டுக்கொண்டேன்.

இன்னொரு விஷயத்தையும் இங்கே குறிப்பிடவேண்டும். அது எனக்கும் ஜாவேத் மியாதாதுக்கும் அவ்வளவாக ஒத்துப் போகாது என்பதுதான். அதற்குக் காரணங்கள் பல. இது பலருக்கும் தெரிந்த விஷயம்தான். ஆஸ்திரேலியாவில் ஒரு முறை தாம்ஸன் வீசிய பந்தில் மார்பு எலும்பில் பலமாக அடிபட்டு, வலி பொறுக்க முடியவில்லை. அன்று எப்படியோ ஆடினேன். மறுநாள் வலி அதிகமாகி கிரவுண்டுக்கு வந்ததும், சக விளையாட்டுக்காரர்களிடம் சொல்லிவிட்டுத் திரும்பி வந்துவிட்டேன். மெல்போர்னில் ஓட்டல் அறையில் சுருண்டு படுத்திருந்தபோது போன் வந்தது. ஜாவேத் என்னைக் கூப்பிடுகிறார் என்று.

''எதற்கு?''

''நீ மைதானத்தை விட்டுப் போனது பற்றி ஜாவேத் மிகக் கோபமாக இருக்கிறார்!''

''எனக்கு மிக மோசமாக அடிபட்டது எல்லாருக்கும் தெரியும். ஒரு டாக்டர் எனக்கு மூன்று வார ஓய்வு தேவை என்று சொல்லியிருக்கிறார். நான் விளையாட ஆரம்பித்தால் என் உடல்நிலை இன்னும் மோசமாகும்!''

''ஜாவேத் குழுவின் தலைவர். அவர் ஆணை பிறப்பித்திருக்கிறார். மைதானத்துக்கு உன்னை வரச் சொல்கிறார் உடனே!''

வேண்டா வெறுப்பாக மைதானத்துக்குப் போனேன். கிரவுண்டில் என் தோழர்கள் முன்னிலையில் ஜாவேதுடன் சண்டை போடுவதையும், மற்றவர்கள் அதை வேடிக்கை பார்ப்பதையும் நான் விரும்பவில்லை...

இது என் கிரிக்கெட் வாழ்க்கையில் மறக்க முடியாத கசப்பான நிகழ்ச்சி. பழைய கதையைக் கிளறுவதில் எனக்கு ஆசையில்லை. ஆனால் என்னைப் பொறுத்தவரை உண்மையாக நடந்தது என்ன என்று தெரிவிக்க வேண்டியது அவசியம் என்று நினைத்தே இதைச் சொல்கிறேன்.

''Zed'' என்ற நூலில் ஜகீர் அப்பாஸ்
நன்றி: ஸ்போர்ட்ஸ் வேர்ல்ட்
தமிழில்: சாருகேசி; படம்: பாலாஜி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431843)

Assistant Editor: P.S. Mani Editor: K. Rajendran

வீட்டுப்பாடம் செய்ய முடியாத அளவு களைப்பா?



க்ளூகோன்-டி ®

உங்களுக்கு நம்பகமான
க்ளாக்ஸோஸ்-டியின்
புதிய பெயர்.

**அதிக சக்தி — அவனுக்குத்
தேவையான போது.**

புத்துணர்ச்சியூட்டும், குளுமையான, சக்தி தரும் க்ளூகோன்-டி. வைட்டமின்-டி, கால்ஷியம் ஃபாஸ்ஃபேட் ஆகியன செறிந்த அசல் க்ளூகோஸ் பவுடர் அடங்கியது. க்ளாக்ஸோ நிறுவனம் அளிக்கிறது. எந்த பானத்திலும் இதனை கலந்து அருந்தலாம். பழரசம், பால், தேநீர், காபி, தண்ணீர் இவற்றிலே கலந்தோ அல்லது நேரடியாகவோ உட்கொள்ளுங்கள். திரும்பவும் பெருகிவரும் சக்தியை உணர்வீர்.

க்ளூகோன்-டி உங்களுக்கு வழக்கமான அதே பச்சை உறையிலே கிடைக்கிறது.



க்ளூகோன்-டி ®

சக்தியை மீட்டுத்தர நம்பகமானது.
க்ளாக்ஸோ நிறுவனம் அளிக்கிறது.



பெண்கள் தங்கள் மனோபாவங்களை அநேக அழகான வழிகளில் வெளிப்படுத்துகிறார்கள்.
விமல் அவற்றில் ஒன்று.

புடவைகள்
ஜார்ஜெட்ஸ்-ஷிஃபான்ஸ்-வாயில்கள்
டிஷ்ஷூஸ் • க்ரேப்ஸ்